
# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஆகஸ்ட் - 2017
பருவம் 3 புனல் 35

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20





## ‘மெக்காலே’ எதிர்ப்பும், குலக்கல்வித் திணிப்பும்

# ஜாதியைக் காப்பாற்றும் "வளைகாப்பு - தாய்மாமன்சீர்" இந்து-கிறிஸ்தவச் சடங்குகளை மறுத்து வென்ற விஜி - வின்சென்ட்

ஜாதி, மதம் கடந்து திருமணம் செய்பவர்கள் கூட, மதம் மாறியவர்கள் கூட, திருமணத்திற்குப் பிறகு, மதமாற்றத்திற்குப் பிறகு - தங்கள் ஜாதியின் அடையாளத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள சாதி, மதச் சடங்குகளைக் கைவிடுவதில்லை. இந்து மத மறுப்பு என்பது ஏதோ ஒரு நாள் ஒரு மதமறுப்பு உறுதி மொழி எடுப்பதோடு முடிந்து விடுவது அல்ல.

இந்து மதத்தைவிட்டு வேறு மதத்திற்கே சென்றாலும் கூட நம்மை விடாமல் துரத்திக் கொண்டே வருவது ஜாதியும், ஜாதிச் சடங்குகளும் ஆகும். அதன் தன்மையை அறிவியல் கண்ணோட்டத்தோடு அணுகிய தோழர் பெரியார், இந்து மதத்தின் ஒவ்வொரு பண்பாட்டு அசைவிற்கும், அதிரடியான எதிர்பண்பாட்டினை வளர்த்தெடுத்தார். மதங்களின் வாழ்க்கை முறைகளுக்கு மாற்றாக - அறிவியலை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையை முன்வைத்தார்.

அறிவியல் அடிப்படையிலான பெரியாரியல் வாழ்க்கை முறையை முடிந்த அளவு பின்பற்ற முயற்சித்த தோழர்கள் விஜி - வின்சென்ட் இணையர் தமது அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டனர். திண்டுக்கல் நகரை அடுத்த தாமரைப்பாடி அருகே உள்ள சாலையூரைச் சேர்ந்தவர் விஜயலட்சுமி. திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி அருகே உள்ள ஆத்தூரைச் சேர்ந்தவர் வின்சென்ட். இருவரும் ஜாதி, மதம் கடந்து தாலி மறுப்புத் திருமணம் செய்தவர்கள்.

**உங்கள் திருமணம் நடந்த முறை பற்றிக் கூறங்கள்**

*எனக்கும் வின்சென்ட்டுக்கும் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்யும் போது,. எனக்கு இவரைப்பற்றி எந்த அறிமுகமும் இல்லை. எனது பெரியம்மா மகன் (அண்ணன்) இவரைப்பற்றிய சில நல்ல பழக்கவழக்கங்களைப்பற்றி தொலைபேசியில் தொடர்பு கொண்டு எடுத்துக் கூறினார். என்னுடைய அப்பாவும் இவரைப்பற்றிக் கூறி சம்மதிக்க வைத்தனர். நானும் இவரைப்பார்க்காமலே திருமணம்செய்ய ஒப்புக்கொண்டேன்.*

*அண்ணன் ஒரு சில விஷயங்களைச் சொல்லத் தயங்கினார். பின்பு ஒரு நாள் அண்ணன் போனில் சொன்னார். இந்தக் கல்யாணம் வித்தியாசமானது என்றார். நான் அப்படியா? என்று கேட்டேன். அவர் சொன்னார், "தாலி கட்டாத கல்யாணம்" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏனென்றால் இந்த மாதிரியான திருமணத்தை நான் பார்த்ததும் இல்லை. கேள்விப்பட்டதும் இல்லை. எனக்கு ஒருபக்கம் பயம்தான். ஆனால் திருமணத்திற்குத் தயாரானேன்.*

**இந்தத் திருமண முறையில் வேறு என்ன வேறுபாட்டைக் கண்டீர்கள்?**

*மற்றவர்களைப்போல் வரதட்சனை கேட்கவில்லை. பண்ட பாத்திரம் எதுவும் கொண்டுவரத் தேவையில்லை என்றார். திருமண நிகழ்வுகள் கூட வித்தியாசமாகத்தான் இருந்தது. முகூர்த்தக்கால் ஊன்றுதல் முதல் ஏனைய எந்த சம்பிரதாய நிகழ்வுகள் இல்லாத (மைக்செட்டு. பாட்டு. பந்தல். மணப்பெண் அழைப்பு. முதலான) திருமணமாக இருந்தது.*

- இதன் தொடர்ச்சி 5 ஆம் பக்கம்



தலையங்கம்

# ஜாதிகளை ஒழிப்போம்!

## ( என் ஜாதியைத் தவிர)

தமிழ்நாட்டில், கடந்த ஒரு வருடத்தில் ஜாதிய வன்கொடுமைத் தாக்குதல்களில் 26 தலித்துகள் கொல்லப் பட்டுள்ளனர். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், தாழ்த்தப் பட்டோரைத் தாக்குவது நீண்ட நெடுங்காலமாக நடந்து வருகிறது. ஆனால், கடந்த சில வருடங்களாக ஒரு புதிய தாக்குதல் வடிவம் வெளிவரத் தொடங்கியுள்ளது. தாழ்த்தப் பட்டவர்களுக்குள்ளேயே பள்ளர், பறையர், சக்கிலியர் களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் தாக்குதல்களாக வெளிவருகின்றன.

பிற்படுத்தப்பட்ட ஜாதிகளுக்குள்ளும் இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகள் கடுமையாக உள்ளன. ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட ஜாதியும், மற்ற அனைத்துப் பிற்படுத்தப் பட்ட ஜாதிகளையும் கேவலமாகவும், இழிவாகவும் பார்க்கும் மனநிலையைத்தான் கொண்டுள்ளன. அதன் அடிப்படையில் ஒருவருக்கொருவர் வெட்டு, குத்து, கொலைகளில் இறங்குவதையும் பார்க்கலாம்.

இவை ‘இந்துமதம்-ஜாதி’என்பனவற்றின் பண்புகள் தான். இவை இரண்டும் ஒழியும் வரை பிற்படுத்தப் பட்டோருக்குள்ளும் - தாழ்த்தப்பட்டோருக்குள்ளும் - இந்த இரண்டு சமூகங்களுக்கு இடையேயும் தாக்குதல்கள், வன்கொடுமைகள் நடந்துகொண்டு தான் இருக்கும். அந்த இந்துமத அழிப்பு என்ற நிலைக்கு நாம் பயணத்தைத் தொடங்க வேண்டிய நிலையில், நம் காலைப் பிடித்துப் பின்னுக்கு இழுப்பது போல, பறையர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருசிலர் சக்கிலியர்களைக் கொலை செய்வது, அவர்களின் சொத்துக்களைக் கொள்ளை இடுவது போன்ற பார்ப்பன - பிற்படுத்தப்பட்ட சாதியினரின் பண்புகளைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

### காதல் திருமணம் செய்ததால் விரட்டப்பட்ட புதிரை வண்ணார்கள்

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம் பாரியமங்கலம் கிராமத்தில் தலித் (இந்து பறையர்) குடியிருப்புப் பகுதியில் புதிரை வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த 11 குடும்பங்கள் வசித்து வருகின்றன. புதிரை வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த பிரசாத் (வயது 22), பறையர் சமூகத்தைச் சேர்ந்த சிவாவின் மகள் சிவசக்தியை (வயது 18) காதலித்து, 2016 ஜூன் மாதம் 17 ந் தேதி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

எனவே, சிவா, அவரது மகன் ரஷ்யா ஆகியோர் பிரசாத்தின் உறவினர்களான புதிரை வண்ணார்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு அவர்களின் வீடுகளையும் சேதப்படுத்தியுள்ளனர். குடிநீர், மின் இணைப்புகளைத் துண்டித்தனர். வாழ்வாதாரங்களையும் சிதைத்துள்ளனர். 20 கோழிகளை பறித்து சென்றுள்ளனர். தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இறுதியாக, புதிரை வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த 11 குடும்பங்களையும் ஊரை விட்டுத் துரத்தியுள்ளனர். தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் பொதுச்செயலாளர் தோழர் சாமுவேல்ராஜ் தலைமையில் 11 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் கடந்த 21.02.17 ல் மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் அளித்தனர்.

### தருமக்குடிக்காடு

கடந்த 27.07.2017 ல் கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே உள்ள தருமக்குடிக்காட்டில் ஒரு கோவில் நில ஆக்கிரமிப்புத் தொடர்பாக எழுந்த வாக்குவாதத்தில் பறையர் சமுதாயத்தைச் சேர்ந்த விடுதலைச்சிறுத்தைகள் கட்சிப் பொறுப்பாளர் ஒருவர் முன்னிலையில், சக்கிலியர் சமுதாயத்தைச் சேர்ந்த சிவக்குமார் தாக்கப்பட்டு, மரண மடைந்துவிட்டார்.

இவரையும் சேர்த்து, கடந்த ஓராண்டில் 26 தலித்துகள் கொல்லப்பட்டனர். ஆனால், தலித் விடுதலை, தலித் உரிமைகளுக்காகப் போராடும் பல அமைப்புகள் சிவக்குமாரின் மரணத்தை அந்தப் பட்டியலில் சேர்க்கவே இல்லை. எண்ணிக்கை 25 என்றே மீண்டும் மீண்டும் பதிவு செய்கின்றன.

### ஜாதிஒழிப்பு வீரர்களின் கோரமுகம்

தருமக்குடிக்காடு படுகொலையில் பல ஜாதி ஒழிப்புப் போராளிகளின் உண்மைமுகங்களை அவர்களது முகநூல் பக்கங்களே வெளிப்படுத்தின. இது வெறும் தனிப்பட்ட மோதல்தான். நிலத்தை அபகரிப்பதற்காக நடந்த வாய்த்தகராறுதான் என்றெல்லாம் எழுதினர். இதுநாள் வரை இவர்கள் ஜாதி ஒழிப்பு என்பதெல்லாம், தன் ஜாதியைத் தவிர மற்ற ஜாதிகளை ஒழிப்பது என்ற மனநிலையோடுதான் பேசியுள்ளனர் என்பதை சிவக்குமார் அம்பலப்படுத்தினார்.

ஜாதி ஒழிப்புப் போராளி தோழர் இம்மானுவேல் சேகரன் படுகொலையைக்கூட வெறும் தேர்தல் பகை என்று காட்டிவிடலாம். கீழ்வெண்மணி படுகொலைகளைக் கூட வெறும் கூலி உயர்வு விவகாரம் என்று சுருக்கி விடலாம். அப்படித்தான் அந்தந்தக் காலங்களில் ஜாதி ஆதிக்கச் சிந்தனை கொண்டவர்கள் பேசினார்கள். எழுதினார்கள்.

ஏன் தருமபுரி இளவரசன் படுகொலையைக்கூட காதல் தோல்வியில் தற்கொலை செய்து கொண்டார். இதற்கும் வன்னியர்களுக்கும் தொடர்பில்லை – கோகுல் ராஜ் படுகொலை என்பதுகூட மனநிலை சரியில்லாமல் நடந்த தற்கொலை அதற்கும் கவுண்டர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை – விஷ்ணுப்பிரியா பணி அழுத்தத்தின் காரணமாகவே தற்கொலை செய்துகொண்டார். என்றெல்லாம் எழுதிய வன்னியர்களும், கவுண்டர்களும் நம்முடன் தான் வாழ்ந்து வருகின்றனர். அப்படி எழுதியவர்களைப் போன்ற சமுதாய விரோதிகளுக்கும், தருமக்குடிக் காடு சிவக்குமார் படுகொலையை, வெறும் நில அபகரிப்பு மோதல் என்று எழுதிய ஜாதி ஒழிப்புப் போராளிகளுக்கும் என்ன வேறுபாடு?

### தலித் ஒற்றுமை அவசியம் – ஜாதி ஒழிப்பு அவசியமில்லையா?

உள்ஜாதி மோதல்களைப் பெரிதுபடுத்துவது தலித் ஒற்றுமைக்கு எதிரானது என்ற நோக்கில் பல தோழர்கள் இதைப் பெரிதுபடுத்த வில்லை எனத்தெரிகிறது. இது சரியான அணுகுமுறை அல்ல. தலித் ஒற்றுமை மட்டுமே ஜாதியை ஒழித்து விடுமா? பிற்படுத்தப்பட்டோர் – தாழ்த்தப் பட்டோர் ஒற்றுமை என்பது அவசியமில்லாத ஒரு செயலா?

தாழ்த்தப்பட்டோருக்குள் நடக்கும் ஜாதியத் தாக்குதல்களைப் பேசுவது, தலித் ஒற்றுமையைப் பாதிக்கும் என்றால், பிற்படுத்தப்பட்டோர் – தாழ்த்தப்பட்டோர் இடையே நடக்கும் ஜாதியத் தாக்குதல்களைப் பேசுவதும், எழுவதும் பார்ப்பனரல்லாத, தமிழர்களின் – திராவிடர் களின் – உழைக்கும் வர்க்கத்தினரின் ஒற்றுமையைப் பாதிக்காதா? இந்த இரு பெரும் பிரிவு மக்களும் உலகம் உள்ளவரை அடித்துக்கொண்டு சாக வேண்டுமா? ஜாதி ஒழிப்பில் அக்கறை உள்ளவர்கள் யாரும் அப்படி எண்ணிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

அதேசமயம், இரு பிரிவு மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்பதற்காக, பிற்படுத்தப்பட்டோர் நடத்தும் ஜாதிய வன்கொடுமைத் தாக்குதல்களை வேடிக்கை பார்ப்பது மிகப்பெரும் தவறல்லவா? அதுபோலவே, பிற்படுத்தப்பட்டோருக்குள்ளோ, தாழ்த்தப்பட்டோருக் குள்ளோ தாக்குதல்கள் நடக்கும் பொழுதும் அவற்றை ஜாதிய வன்கொடுமைகள்தான் என்று கூறுவதற்குக்கூடத் தயக்கம் வந்தால், அப்படித் தயங்குபவர்களால் ஜாதியம் வலுப்பெறவே செய்யும்.

பார்ப்பனர் அல்லாதார் ஒற்றுமை கருதி, பார்ப்பான் நேரடியாக வந்து தாக்குவதை மட்டுமே ஜாதிய வன்கொடுமையாகக் கருதுவோம். எழுதுவோம். மற்றபடி, பிற்படுத்தப்பட்டவர் போய் தாழ்த்தப் பட்டவர்களைத் தாக்கினால், ஜாதிய வன்கொடுமைகள் நடந்தால், அவற்றை நமக்குள் வைத்துக்கொள்வோம், நமக்குள் பேசிக் கொள்வோம். பெரிதுபடுத்த வேண்டாம் என்று எவராவது பேசினால் அவரை நாம் எப்படிப் பார்ப்போம்? அப்படித் தான் இந்த தலித் ஒற்றுமை பேசுபவர்களையும் பார்க்க வேண்டி வருகிறது.

முதலில், ஜாதி என்றால் இரண்டு தான் உள்ளது. ஒன்று பி.சி. மற்றொன்று எஸ்.சி. என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் தங்களது கருத்தை அவசியம் மாற்றிக்கொள்ள வேண்டும். 6000 ஜாதிகள் உள்ளன. 6000 ஜாதியும் ஒன்றுக் கொன்று ஏற்றத்தாழ்வைக் கொண்டவை தான்.

தாழ்த்தப்பட்டோருக்குள்ளேயே ஜாதி அடிப்படை யிலேயே ஏற்றத்தாழ்வுகள் இருப்பது உண்மை. பிற்படுத்தப் பட்டோருக்குள்ளேயும் ஜாதி அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது உண்மை. இந்த இரு பெரும் பிரிவுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்பதும் உண்மை. இந்த உண்மைகளை ஏற்றுக்கொண்டு, அறிவுப் பூர்வமாகப் புரிந்துகொண்டு, ஜாதி ஒழிப்புக் களத்தில் நிற்பவர்களுக்கு தருமபுரி இளவரசன், கோகுல்ராஜ், கண்ணகி முருகேசன், தருமக்குடிக்காடு சிவக்குமார் போன்ற அனைவரும் ஜாதி ஆதிக்கச் சிந்தனை கொண்டவர்களால் கொல்லப்பட்டனர் என்ற உண்மை எளிதில் விளங்கும்.

இந்த அறிவியல் உண்மையைப் புரிந்துக் கொண்டவர்கள் பேசும் ஜாதி ஒழிப்பு மட்டுமே இலக்கு நோக்கிச் செல்லும். இந்தப் புரிதல் இல்லாமல், பிற்படுத்தப் பட்டவர்களுக்குள் தாக்குதல், படுகொலை என்றால் அதை உட்ஜாதிப் பகை, அதை வெளியில் பேசவேண்டியதில்லை என்பதும், தாழ்த்தப்பட்டோருக்குள் தாக்குதல், படுகொலை என்றால் அதுவும் உட்ஜாதிப் பகை அதை வெளியில் பேச வேண்டியதில்லை என்பதும் சரியான அணுகுமுறை ஆகாது.

அந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படும் போலி ஜாதிஒழிப்புப் பணிகள், சமுதாய ஆதிக்கத்தில் பார்ப்பானுக்கு இருக்கும் இடத்தைப் பிற்படுத்தப்பட்டவர் கைப்பற்றிக் கொள்வதற்கும் – பிற்படுத்தப்பட்டவர் இடத்தைத் தாழ்த்தப்பட்டவர் கைப்பற்றிக் கொள்வதற்கும் வேண்டுமானால் பயன்படலாம். ஜாதி ஒழிப்புக்கு எள் முனையளவும் பயன்தராது.

தருமக்குடிக்காடு சிவக்குமார் மரணம் என்பது ஜாதிய வன்கொடுமையே! அதற்காக ஒட்டுமொத்தப் பறையர்களையும், தாக்கியவரின் அமைப்பான விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பையும் எதிரியாக நிறுத்துவது நிரந்தரத் தீர்வைத் தராது. இந்து மத – வேத, சாஸ்திரங்கள், புராணப் புளுகுகள், பண்டிகைகள், கடவுள்கள், இந்துப் பண்பாடுகளின் அழிவே நமக்கு ஒற்றுமையையும் விடுதலையும் வழங்கும்.

சி.இராவணன்

# அம்பேத்கரும் அவதூறுகளும்

**ஜெயமோகனுக்கு மறுப்பு – பா.பிரபாகரன்**



இந்தியத் துணைக் கண்டத்தில் பார்ப்பனியத்தை ஆட்டம் கான வைத்த தலைவர்கள் மிகச் சிலரே. அவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் கௌதம புத்தர், தோழர் அம்பேத்கர், தோழர் பெரியார் ஆகியோர் ஆவார்கள். இவர்களில் பார்ப்பனியத்தை அழித்துப் பெரு வெற்றி கண்ட புத்தரை அரவணைத்து அழித்துவிட்டார்கள். புத்தரின் நல்ல கருத்துக்களையெல்லாம் திருடி, தங்களுடையதாக மாற்றி விட்டார்கள். தோழர் அம்பேத்கரையும் தோழர் பெரியாரையும் அழிக்க முயற்சி செய்கிறார்கள். அதனுடைய வெளிப்பாடே எழுத்தாளர் ஜெயமோகனின் அம்பேத்கருக்கு எதிரான அவதூறு கட்டுரைகளை இந்துத்துவ ஆதரவு இதழான ‘தமிழினி’ இதழில் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே பார்ப்பன எழுத்தாளர் அருண் சோரி எழுதிய தோழர் அம்பேத்கர் பற்றிய நூலுக்கு திராவிடர் கழகத் தலைவர் தோழர் வீரமணி அவர்கள் விரிவான மறுப்பை நூலாக வெளியிட்டார். ஜெயமோகனின் புளுகல்களுக்கு தோழர் பிரபாகரன் அவர்கள் “அம்பேத்கரும் அவதூறுகளும்” என்ற தலைப்பில் மறுக்க முடியாத ஆதாரங்களுடன் பதிநான்கு தலைப்புகளில் கட்டுரைகளாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இந்த நூலை காட்டாறு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

புளுகுவதையே தொழிலாகக் கொண்டு அதனை எழுத்துப்பணி எனச் சொல்லி, தங்கள் கருத்துக்கு எதிரானவர்களைப் பற்றி ஆதாரமில்லாத செய்திகளை வெளியிடுவதும் - அதற்கு மறுப்பு வந்தால் பதில் சொல்லாமல் இருப்பதும் ஜெயமோகனின் வழக்கமாகும். ஏற்கனவே தோழர் பெரியார் பற்றி அவருடைய இணையதளங்களில் தொடர்ந்து அவதூறாக எழுதிவந்தார். இதழியலாளர் சுகுணா திவாகர் அதற்குத் தக்க பதிலடி கொடுத்தார். ‘தடம்’ இதழில் நிலச் சீர்திருத்தம் பற்றி அவர் கூறிய புரட்டுகளுக்கு ‘காட்டாறு’ இதழில் தோழர் அதி அசுரன் பதில் கொடுத்தார்.

**இந்துத்துவவாதிகளின் புரட்டல்கள்**

பார்ப்பனர்கள் தங்களுடைய சமூக ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு எந்த நிலைக்கும் செல்வார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டே தோழர் அம்பேத்கரை இந்துத்துவ ஆதரவாளராகக் காட்ட முயற்சிப்பதாகும். “நண்டு தின்னும் ஊருக்குப் போனால் நடுத்துண்டு எனக்கு” என்பதுதான் பார்ப்பனப்புத்தி. தன் வாழ்நாள் முழுவதும் இந்து மதத்தை எதிர்த்துப் போராடிய ஒரு தலைவரை, இந்து மதத்தின் அனைத்து புராண இதிகாசங்களை ஆய்வு செய்து அதன் ஜாதி வெறியை வெளிப்படுத்தி பகவத் கீதை, இராமாயணம், மகாபாரதம் இவற்றிற்கெல்லாம் மூலமான மனுதர்மம் என அனைத்தையும் கற்று அவை எப்படியெல்லாம் ஜாதிய ஏற்றத்தாழ்வுகளை முன்வைக்கிறது என ஆதாரப்பூர்வமாக அம்பலப்படுத்திய தலைவரை எப்படி இந்துத்துவ சிமிலுக்குள் அடைக்க முயற்சி செய்கின்றனர். தோழர் பிரபாகரன் அவர்கள் 59 ம் பக்கத்தில் அழகாக தோலுரிக்கிறார்.




“அம்பேத்கரின் பௌத்த மதமாற்றம் பற்றிய இந்துத்துவவாதிகளின் மற்றொரு பொய்ப் பிரச்சாரம் அவர் மதம் மாறிய அக்டோபர் 14 ம் நாள் தசரா அல்லது விஜயதசமி நாள். எனவேதான் அதைத் தெரிவு செய்தார் என்பது” இந்தப் பொய்க்கு நூலாசிரியர் அடுத்த வரியிலே சரியான விளக்கத்தைப் பதிவு செய்கிறார் “ பௌத்த மரபின் அடிப்படையில் அக்டோபர் 14 என்பது புத்தரின் 2500 வது பிறந்தநாளும், பௌத்த மன்னரான அசோகரின் மதமாற்ற நாளும் ஆகும்”.

புத்தரின் பிறந்தநாளையும், அதனாலே அந்த நாளில் மதம் மாறிய மாமன்னர் அசோகர் மதம்

மாறிய நாளையும் தேர்ந்தெடுத்து மதம் மாறிய நிகழ்ச்சியைக் கூட தங்களுக்கு சாதகமாக மாற்றும் பார்ப்பன சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளவேண்டும். தோழர் அம்பேத்கருக்கு மட்டுமல்ல, இந்து மதத்தில் உள்ள ஜாதிய வேறுபாடுகளுக்கு எதிராக சமத்து வத்தைப் பேசிய பல பேரைத் தனதாக்கிக் கொண்டது இந்துமதம்.

வைகுண்டசாமி, வள்ளலார், நாராயணகுரு ஆகியோரை இன்று தனக்கானவர்களாக மாற்றி அவர்களைப் பின்பற்றும் மக்களை ஒரு குழப்பத்தில் ஆழ்த்தி, பார்ப்பனிய வளர்ச்சிக்குப் பயன் படுத்துகிறது இந்துமதம். மேலும் சமண மதத்தை பின்பற்றக் கூடியவர்களை வளைத்துப் போட்டு இன்றைக்கு ஜெயின் சமூகம்தான் இந்துத்துவத்தைப் பரப்புவதில் முன்னிலையில் இருக்கிறது. இந்து மதத்தில் 365 நாட்களும் ஏதாவது பண்டிகைகளும், நிகழ்ச்சிகளும் இருந்துகொண்டே இருக்கும். அதற்கு மாற்றான நமக்கான விழாக்களும் இருக்கும். பொய் சொல்வதிலும் திரித்து கூறுவதிலும் வல்லவர்களான பார்ப்பனர்கள் தங்கள் சூழ்ச்சியைப் பயன்படுத்தி வென்றுவிடப் பார்க்கிறார்கள்.

இதை எப்படி முறியடிப்பது? தோழர் அம்பேத்கர் இந்து மதத்திலிருந்து பௌத்தம் மாறிய நாளன்று வெளியிட்ட 22 முழக்கங்கள் அனைத்தும் இந்து மதத்திற்கு வைக்கப்பட்ட வெடிகுண்டுகள் ஆகும். அந்த முழக்கங்களை நாம் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். தோழர் பெரியாரைப் பற்றி யாரிடம் கேட்டாலும் இந்து மதத்தின் எதிரி, பார்ப்பனர்களின் எதிரி எனப் பதிந்துள்ளதைப் போல் தோழர் அம்பேத்கரின் இந்து மத எதிர்ப்பு கருத்துக்களையும், பார்ப்பன எதிர்ப்பு கருத்துக் களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

தோழர் அம்பேத்கரை ஒரு சட்ட மேதையாக, பொருளாதார நிபுணராக மட்டும் காட்டாமல் ஆரியத்தை, அது கட்டமைத்த இந்து மதத்தை ஒழிக்க அவர் கூறிய கருத்துக்களையும் அவர் நடத்திய போராட்டங்களையும் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். தோழர் அம்பேத்கரின் பல்வேறு சிறப்புகளை மக்களிடம் பேசும் இயக்கங்கள் அவரின் இந்து - பார்ப்பன எதிர்ப்புக் கருத்துக்களை பேசுவதில்லை. இந்துக்கடவுள்களை வணங்கக் கூடாது என்றும் இந்துமத புராணங்களை, பண்டிகைகளைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்த மாபெரும் தலைவனை இந்து மதவெறிக்குள் கொண்டுவரும் போக்கிற்கு எதிராக நாம் அனைவரும் மக்களிடையே இந்து மத, பார்ப்பன எதிர்ப்பு பற்றி அம்பேத்கர் பேசியதையும் எழுதியதையும் கொண்டு செல்லாவிட்டால் இந்த ஆபத்து தொடரும்.

**அம்பேத்கர் பிரிட்டிஷ் ஆதரவாளரா?**

பார்ப்பனர்கள் தங்களின் சமூக அதிகாரத்தை ஆட்டம் காண வைத்த தலைவர்கள் மீதெல்லாம் வைக்கப்படும் குற்றச்சாட்டு தான் பிரிட்டிஷ் ஆதரவாளர் என்பதாகும். காலத்திற்கு தகுந்தாற் போல் குற்றச்சாட்டுகளை மாற்றியும் கொள்வார்கள். இன்றைக்கு பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராகச் செயல்படுபவர்களை கிறித்துவ, இஸ்லாமிய மதங்களின் கைக்கூலி, பாகிஸ்தான் ஆதரவாளர் என பல குற்றச்சாட்டு வைப்பதைப் பார்க்கிறோம். பொதுவாகவே தேசியம் என்பது குறிபிட்ட சமூகம் மக்களைச் சுரண்டுவதற்கும், அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்கும் பயன்படும் வார்த்தையாகும். இந்திய சுதந்திரப் போராட்டம் என்பதும் பார்ப்பன ஆதிக்கத்தை தக்க வைக்க நடந்ததாகும்.

எனவே பிரிட்டிஷ் ஆதரவாளர் என்றோ, பாகிஸ்தான் ஆதரவாளர் என்றோ சொல்லி விட்டால் வெகு மக்களின் கோபத்திற்கு ஆளாகி அன்னியப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் நாம் மாறி விடுவோம் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இந்தியத் துணைக்கண்டத்தில் சமூக மாற்றத்திற்காக போராடிய பெரும் தலைவர்களான அம்பேத்கரும், பெரியாரும் ஒரு சேரவே இப்படிப் பட்ட விமர்சனங்களைச் சந்தித்தனர். அம்பேத்கர் அவர்கள் பிரிட்டிஷாரை பல இடங்களில் ஆதரித்தும் இருக்கிறார், எதிர்த்தும் இருக்கிறார். தங்களுடைய சமூக விடுதலைக்கு பிரிட்டிஷ் அரசிடம் தீர்வு இல்லாத போது அவர்களைக் கடுமையாக விமர்சிக்கிறார். அந்த விமர்சனங்களைத் தோழர் பிரபாகரன் அவர்கள் தக்க ஆதாரங்களுடன் மிகத் தெளிவாக பதிவு செய்துள்ளார்.

இந்த புத்தகத்தின் 72ம் பக்கத்தில் அம்பேத்கரின் மேற்கோளை எடுத்துக்காட்டி ஜெயமோகனின் சூழ்ச்சியை முறியடிக்கிறார், "தீண்டாமை பிரிட்டிஷ்காரர்களால் தோற்று விக்கப்படாமல் இருக்கலாம். ஆனால், அன்று ஆட்சி புரிந்த அரசு என்ற முறையில் தீண்டாமையை அகற்றுவது நிச்சயமாக அவர்களின் பொறுப்பு தான்" எனக் கூறுகிறார். இதைவிடப் பல கடுமை யான விமர்சனங்கள் கூட பிரிட்டிஷ் அரசு மீது அம்பேத்கர் அவர் வைத்துள்ளதை இந்தக் கட்டுரையில் பல இடங்களில் மேற்கோளாக காட்டப்பட்டுள்ளது. மேலும் ஆங்கிலேய எதிர்ப் பாளராக அறியப்படும் காந்தி பல்வேறு நிலைகளில் பிரிட்டிஷ் ஆதரவு நிலை எடுத்ததையும் இந்த நூலில் விளக்குகிறார்.

இந்து மதத்தின் மிகக் கொடுமையான சட்டங்கள் புகுத்திய சமூக இழிவுகளையும், ஒடுக்கு முறைகளையும் வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொண்டு, பார்ப்பன, சத்திரிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடக்கூட முடியாமல் அடிமைப் பட்டு கிடந்த ஒரு சமூகத்தில் ஆங்கிலேய அரசு செய்த சமூக மாற்ற நடவடிக்கைகளால் சில நன்மைகள் நிகழும்போது அதை ஆதரிக்காமல் இருந்தால்தான் தவறு ஆகும்.

நூல் ஆசிரியர்: பா.பிரபாகரன்

நூல் கிடைக்குமிடம்: கருத்துப்பட்டறை, 2, முதல் தளம், நாகா வளாகம், திருநகர், மதுரை, செல்: 9842265884, விலை 100

-முன் அட்டை உள்பக்கத் தொடர்ச்சி

தி.வி.க தலைவர் தோழர் கொளத்தூர் மணி அண்ணன் அவர்களால் துணையேற்பு உறுதி மொழியினை ஏற்றுக்கொண்டு, தி.மு.க மாவட்டச் செயலாளர் திரு. ஐ. பெரியசாமி அவர்களால் மலர் மாலை எடுத்துக்கொடுக்க - இருவரும் மாலையை மாற்றிக்கொண்டு தோழர்கள், நண்பர்கள் உறவினர்கள் வாழ்த்துக்களோடு சிறப்பாக இவ்விழா நடைபெற்றது.

**நீங்கள் தாய்மையுற்ற காலத்தில் பெண்களை சந்தோஷப்படுத்தும் சடங்கான வளைகாப்பு நிகழ்ச்சியை ஏன் தவிர்த்தீர்கள்? அதன் காரணத்தைப் பற்றி சொல்லுங்கள்?**

திருமணத்திற்கு முன் பெரியாரியலைப் பற்றியான புரிதல் இல்லை. இயல்பாகவே இம்மாதிரியான சடங்குகளுக்குச் செல்வதைத் தவிர்த்துவிடுவேன்.

'வளைகாப்பு' என்பது ஒரு மூடத்தனமான நிகழ்வு. பொதுவாக தாய்மையடைந்த காலங்களில் பெண்களுக்கும், வளரும் கருவிற்கும் அடிப்படை தேவை; போதுமான அளவு ஊட்டச்சத்துமிக்க உணவுகள் மற்றும் கருவின் வளர்ச்சியைப் பற்றியான மருத்துவப் பராமரிப்பு மட்டுமே. அதைத் தவிர்த்த வளைகாப்பு என்ற பெயரில் நடக்கும் சம்பிரதாயச் சடங்குகள் தேவையில்லாதவை.

வளைகாப்பு என்பது ஆண்மை மற்றும் பெண்மை என்னும் கற்பிதத்தை வலியுறுத்துவதால் தவிர்த்தோம். மேலும் 'பூப்படைதல்' எனும் சடங்கு தாய்மையடையத் தயாராகிவிட்டாள் என்பதைத் தெரியபடுத்த நடத்தப்படுவது போல் 'வளைகாப்பு' சடங்கும் அதனோடு தொடர்புடைய தாய்மை அடைதலை உறுதிபடுத்தவும் நடத்தப்படுகிறது. இருவரும் புரிந்துகொண்டு இச்சடங்கினைத் தவிர்த்தோம்.

**வளைகாப்பு வேண்டாம் என்று நீங்கள் இருவரும் சேர்ந்து முடிவெடுத்ததை உங்கள் வீட்டிலும் உங்கள் கணவருடைய வீட்டிலும் எப்படி எடுத்துக்கொண்டார்கள்?**

இரண்டு குடும்பங்களுடைய மதமும் வேறு வேறாயினும் அவரவர் சாதி சார்ந்த சடங்குகளைக் கடைபிடிப்பதில் தெளிவாகவே இருந்தனர். சடங்குகள் வேண்டாம் என்று முடிவெடுத்த பிறகு எங்களை எங்களுடைய கொள்கை சார்ந்த வாழ்வியலைக் கடைபிடிப்பதில் இடையூறாக இருக்கவேண்டாம் என்று புரிய வைத்தோம்.

வின்சென்ட் வீட்டில் அரைமனதுடன் ஏற்றுக்கொண்டுவிட்டனர். என்னுடைய வீட்டில் மட்டும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் நாங்கள் அனுமதி கொடுக்கவில்லை. மேலும் வின்சென்ட் தலைப்பிரசவம் தாயார் வீட்டில் நடத்துவதுதான் முறையென்ற முடிவினை மறுத்து, நானே மருத்துவச் செலவுகளை ஏற்று குழந்தைப் பிறப்பினைப் பார்த்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்.

**உங்களுக்குக் குழந்தைபிறந்தவுடன் நல்ல நேரம், நாள் நட்சத்திரம் பார்த்துப் பெயர் வைத்தீர்களா? அதைப் பற்றி கூறங்கள்.**

விஜிக்கு அறுவைசிகிச்சையின் மூலம் குழந்தையை எடுத்தனர். பெண் குழந்தை பிறந்த நேரத்தை செவிலியர் 2:13 பிற்பகல் என்று கூறினார். பிறகு மருத்துவமனையில் 30 நாட்களுக்குள் பிறப்புச் சான்றிதழ் வாங்க வேண்டும் இல்லையென்றால் பிறப்புப் பதிவேட்டினை நகராட்சிக்கு அனுப்பி விடுவார்கள் என்ற தகவலறிந்து பெயரினைத் தேர்வுசெய்தோம்.

இந்த 'மகிழினி' என்ற பெயர் என்னுடைய நண்பனின் குழந்தைக்குத் தேர்வு செய்த பெயர் . ஆனால், அவர்கள் சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை உடையவர்களாதலால் 'த' எனத் தொடங்கும் பெயர்தான் வைக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தனர்.

அதனால் அக்குழந்தைக்குத் 'தமிழினி' என்ற பெயர் தேர்வானது. அதனால் நாங்கள் முன்பே 'மகிழினி' என்ற பெயர் இருப்பில் இருந்ததால், இந்தப் பெயரையே வைத்தோம். மேலும் பெயருக்கு முன் இருவருடைய தொடக்க எழுத்துகளும் வர வேண்டும் என்று முடிவெடுத்தோம். ஆக, 'வி . வி. மகிழினி' என்ற பெயர் வைத்து பிறப்புச் சான்றிதழ் வாங்கி வந்து விட்டு, பின்பு தான் இருவருடைய வீட்டிலும் தெரியப்படுத்தினோம்.

**குழந்தை பிறப்புத் தொடர்பாக கிறிஸ்தவ மதத்தில் என்னென்ன சடங்குகள் உள்ளன? அவற்றை நடத்தினீர்களா?**

குழந்தை பிறந்தவுடன் 30 நாட்களுக்குக் குழந்தையுடன் எங்கும் செல்லக்கூடாது என்றனர். ஆனால் நாங்கள் அதையும் மீறினோம். குழந்தை குப்புற விழுந்து எழுந்திருக்கும் இடத்தில் குறித்து வைத்துச் சாமி கும்பிடும் பழக்கவழக்கம் சில சமுதாயங்களில் செய்வார்களாம். அதனையும் நாங்கள் செய்யவில்லை. கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைக்கு முதல் மொட்டை வேளாங்கண்ணி கோவிலிலோ அல்லது அவர்கள் வரம்வேண்டி எந்தக் கோவிலில் பிரார்த்தனை செய்தார்களோ அங்கே தான் நிறைவேற்றுவார்கள் இந்துக்கள் குலதெய்வகோவிலில் நிறைவேற்றுவார்கள்.

கிறிஸ்தவர்கள் மதத்தில் பெயர் வைப்பதற்கு 'ஞானஸ்தானம்' என்று பெயர். கோவிலில் ஞானம் பெற்றோர்கள் முன்னிலையில் அந்தச்சடங்கானது நடக்கும். ஆனால் நாங்கள் பெயரினை முன்னரே வைத்துவிட்டோம்.

**குழந்தை பிறந்தவுடன் 7 - 9 நாட்களில் தொட்டில்கட்டி அதில் படுக்க வைப்பார்கள். அப்போது தொட்டில் சீர் செய்வார்கள் அதுபோல் எதுவும் செய்தீர்களா? குழந்தைக்குக் குலதெய்வ கோவில்களில் தாய் மாமன் மடியில் வைத்து மொட்டைஅடித்தல். காதுகுத்துதல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தினீர்களா?**

தொட்டில் சீர் எதுவும் செய்யவில்லை. முதல் மொட்டை குறிப்பிட்ட காலத்திற்குள் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் மகிழினியின் முதல் பிறந்தநாளை எளிமையான முறையில் வீட்டிலேயே சிறப்பித்து விட்டு அதற்கு அடுத்தமாதம் மார்ச் 8 ஆம் தேதி மொட்டை எடுக்கலாம் என்று முடிவுசெய்தோம். மகிழினிக்கு முடி அதிகமாக வளர்ந்திருந்ததினால் தான் இந்த முடிவை எடுத்தோம்.

உடனே முடிதிருத்தம் செய்பவரை அழைத்து வீட்டின் நடுப்பகுதியில் அமர்ந்து நான் என் மடியில் அமரவைத்து பிடித்துக்கொள்ள மொட்டையெடுத்து முடித்தோம். அன்றே காது குத்தும் நண்பரை அழைத்து வந்து காதணியையும் மாட்டி விட்டோம். இது துணைவியாரின் வீட்டிற்கு தெரியாது.

இரண்டொரு நாள் கழித்து அவர்கள் வீட்டிற்கு விடுமுறைக்கு அழைத்துச் சென்றபோது தான் இப்படி சொல்லாமல் மொட்டை எடுத்திருக்கீங்களே என்று கூறி கோபித்துக் கொண்டார்கள். பிறகு பெரிய எதிர்ப்பு ஒன்றுமில்லை. துணைவியார் வீட்டில் அவர்களின் அப்பா சாஸ்திரம் சம்பிர தாயத்தில் மிகத்தீவிரமாக கடைபிடிப்பவர் ஆதலால் கொஞ்சம் எதிர்ப்பும் இருந்தது.

அதில்கூட நாங்கள் சிலவற்றைத் தவிர்த்திருக்க வேண்டும். அந்த நேரத்தில் எங்களுக்கு அவை பற்றிய போதுமான புரிதல் இல்லை. அதாவது,

என்னதான் நாம் ஜாதியே வேண்டாம் என்றாலும், மொட்டை அடிப்பது, காதுகுத்துவது போன்ற விழாக்களின் மூலம் நம்மையும் ஜாதிக்குள் இழுத்துவிடுகிறது இந்தச் சமுதாயம். என் ஜாதியைச் சேர்ந்த தாய்மாமன் மடியில் உட்கார வைப்பதால் என் ஜாதி உறவு நிலைக்கிறது. மொட்டை அடிக்கும் ஜாதியைச் சேர்ந்தவரை வைத்து மொட்டை அடிப்பதால், அந்த ஜாதியும் - காதுகுத்தும் ஜாதியைச் சேர்ந்த ஒருவரை வைத்து காது குத்துவதால் அந்த ஜாதியும் அவரவர்கள் மீது திணிக்கப்படுகிறது.

இப்படி என் ஜாதியை நான் பின்பற்றச் செய்கிறது இந்தப் பண்பாடு. மேலும் காது குத்து பவர்களும், முடிதிருத்துபவர்களும் அவரவர் ஜாதிகளையும் தவறாமல் பின்பற்றச் செய்கிறது இந்தப் பண்பாடு. நமது தோழர்கள் பலர் இவ்வாறு தாய்மாமன் மடியில் அல்லாமல், சலூன் கடைகளில் சென்று முதல் மொட்டை அடிக்கிறார்கள். அதைக் கூடத் தவிர்க்க வேண்டும்.

**சலூன் கடைகளில் முதல் மொட்டை மட்டுமல்ல; வழக்கமாக மாதம் ஒருமுறை முடிவெட்டுதல், வாரம் ஒருமுறை சேவிங் செய்தல் போன்றவையும் தான் நடக்கின்றன? அப்படியானால் அவையும் ஜாதியைத் திணிப்பவை தானா?**

நிச்சயமாக, நீங்கள் கூறுவதுதான் உண்மை. வடமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு வந்து கடும் உழைப்புகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைப் பாருங்கள். அவர்களே ஒருவருக்கொருவர் முடிவெட்டிக் கொள்வார்கள். அதைப் போல நாமும் பழகிக்கொள்ள வேண்டும். சேவிங் செய்வதைக் கூட நாமே செய்து பழகிக் கொள்ள வேண்டும். கடையில் தான் செய்ய வேண்டும் என்றால், பணம் அதிகமானாலும் பரவாயில்லை, முடிவெட்டுவதற்கு என்றே உள்ள ஜாதியினரைத் தவிர மற்ற ஜாதியினர் பணியாற்றும் பெரிய கடைகளில் சென்று முடிவெட்டிக்கொள்ள வேண்டும்.

**'தாய்மாமன்சீர்' என்பது உறவுகள் நீடித்து இருப்பதற்குதானே செய்கிறார்கள் அதை ஏன் தவிர்த்தீர்கள்?**

பொதுவாக, குழந்தை பிறந்தவுடன் மொட்டை அடித்தல், காதணிவிழா, பூப்படைதல் பின்பு திருமணம் வரையிலான நிகிழ்வுகள் வீண் செலவினையும் செலவு செய்வதற்கு மேல் வரவினை எதிர்பார்ப்பதும் ஒரு காரணமாகும்.

நாங்கள் இதையெல்லாம் தவிர்த்த காரணத்தினால் எங்களிடமிருந்து சில காலம் விலகிய நண்பர்களும் உறவினர்களும் உண்டு. நாங்கள் தாய்மாமன் சீர் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தோம்.

நம்மால் பொருளாதாரச் சிக்கல்களில் இருக்கும் பொழுது நண்பர்களிடமும் உறவினர் களிடமும் உதவியைப் பெற்றுக்கொள்வதென்பது வேறு. ஆனால் எங்கள் வீட்டில் இன்ன நிகழ்வு நடைபெறுகிறது என்று உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்து இவ்வளவு சீர் செய்ய வேண்டும் என்பதில் உடன்பாடு இல்லை. முக்கிய மாக, இவையெல்லாம் ஜாதியையும் மதத்தையும் இறுகப்பற்றிக்கொண்டு, நாம் அவற்றை விடாமல் கடைபிடிக்கச்செய்யும் சூழ்ச்சியான நடவடிக்கைகள் என்று தான் பார்க்கிறோம்.

ஆனால், நாம் (பெரியரிஸ்டுகள்) ஒவ்வொரு பழக்க வழக்கங்களுக்கும் மாற்றாக முடிவெடுக்கும் பொழுது எளிதில் செய்துவிட முடிவதில்லை. நாம் கொள்கையில் உறுதியாக இருக்கின்றோம் என்று தெரிந்தும் நம்மை நாமாக, சுயமாக வாழ்க்கையை நடத்த சமுதாயம் விடுவதில்லை. இடைமறித்துதான் நிற்கிறது. இந்தச் சாதிய சமூகமும் உறவினர்களும் முடிந்த வரையில் தொல்லை கொடுப்பதில்தான் கவனமாக இருக்கின்றார்கள். அவர்கள் வாழ்க்கை முறையை நம் மீது திணிப்பதில் இந்தச் சமூகத்திற்கு ஒரு குரூரமான ஆனந்தம். அதைப் பெரியார் தொண்டர்கள் நாள் தோறும் சந்தித்துக்கொண்டே இருப்பார்கள். நாங்களும் சமுதாய எதிர்ப்புகளைச் சந்திக்கிறோம். பெரியாரியலின் துணையோடு எதிர்த்து நின்று எங்கள் வாழ்க்கையை - நாங்களே திட்டமிட்டு வாழ்கிறோம்.

## காட்டாறு வளர்ச்சி நிதி

| | |
|---|---|
| ஓ.சுந்தரம் வழக்கறிஞர் | 1000 |
| காமராசன் மண்டக் கொளத்தூர் | 500 |
| செங்கை நிலவன் குவைத் | 5000 |

கௌசல்யா, பிரசாந்த், ப்ரியங்கா, சக்தி
அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி

# திட்டக்குடியில் அருந்ததியர் நிலத்தைக் கைப்பற்ற நடந்த ஜாதியத் தாக்குதல்

திருச்சியிலிருந்து சென்னை செல்லும் நான்குவழிச்சாலையில் உள்ள இராமநத்தத்தில் இருந்து கடலூர் செல்லும் சாலையில் உள்ளது திட்டக்குடி எனும் ஊர். அந்த ஊரைத் தாண்டி 2 கி.மீ தொலைவில் இருக்கிறது தருமக்குடிக்காடு. இது திட்டக்குடித் தொகுதியைச் சேர்ந்தது.

அந்த ஊரில், திட்டக்குடி வைத்திநாதசாமி கோயிலுக்குட்பட்ட கோழியூர் வேணு கோபாலசாமி கோயிலுக்குச் சொந்தமாக 10 ஏக்கருக்கும் மேலான நிலங்கள் உள்ளன. அவற்றில் பல தலைமுறைகளாக பிள்ளைமார் ஜாதியைச் சேர்ந்த பூமிநாதன் என்பவரின் குடும்பம் பயிரிட்டு வருகிறது. பல தலை முறைகளாக அக்குடும்பத்தின் முன்னோர்கள் வசம் இக்கோவில் நிலங்கள் அனுபவத்தில் உள்ளன.

பூமிநாதனின் தாத்தாவான வரதராஜ பெருமாள் காலத்தில், அவரது கட்டுப்பாட்டில் இருந்த இந்தக் கோவில் நிலத்தில் பணியாற்றியவர் பொன்னன். பொன்னன் அருந்ததிய ஜாதியைச் சேர்ந்தவர். அவர், வரதராஜப்பெருமாளின் பண்ணையில் கொடுத்த உழைப்புக்குக்கூலியாகக் கிடைத்தது 64 செண்ட் நிலம். பொதுவாக அந்தக் காலங்களில் எதையும் பத்திரப்பதிவாகச் செய்வது கிடையாது. எனவே, அவரிடம் பணியாற்றிய பொன்னனுக்குக் கொடுத்த 64 செண்ட் நிலம் எழுத்தில் பதிவுசெய்யப்படவில்லை. அந்நிலத்தின் சர்வே எண்: 194 /2. நில அளவு:0.25.0 ஏர்ஸ் ஆகும். பொன்னனின் மறைவுக்குப் பிறகு அடுத்த தலை முறையைக் கடந்து பொன்னனின் பேரன் சிவக் குமாருக்கு அந்த நிலம் வந்துள்ளது.

இதே பகுதியில் வசிக்கும் அலெக்சாண்டர், முத்துராஜ் ஆகியோர் இந்நிலத்தைக் கைப்பற்ற முயற்சி செய்துள்ளனர். இவர்கள் பறையர் ஜாதியைச் சேர்ந்தவர்கள். நிலத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இவர்கள், திட்டக்குடி இந்து அறநிலையத்துறையில் பணியாற்றிய ஆய்வாளர் சிவஞானம் என்பவர் மூலம் சிவக்குமாரின் பயன்பாட்டில் இருந்த 194/2 சர்வே எண்ணுள்ள நிலத்துக்கு போலியாக ஒரு வாடகை ரசீதைப் போட்டுக்கொண்டனர். 2015 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் தேதி இந்தப் போலி ரசீது போடப்பட்டுள்ளது.

அந்தப் போலிவாடகை ரசீதை வைத்துக் கொண்டு, பல தலைமுறைகளாக அந்த நிலத்தில் வாழ்ந்துவந்த சிவக்குமார், மற்றும் சில அருந்ததியக் குடும்பங்களை அந்த நிலத்தை விட்டு வெளியேறு மாறு எச்சரித்து வந்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, ஒருநாள் இரவோடு இரவாக, சிவக்குமாரின் நிலத்தில், அலெக் - சாண்டரும் அவரது சகோதரரும், இருபத்தைந்து டிராக்டர்களில் குளத்து மண்ணைக் கொண்டுவந்து கொட்டியுள்ளார்கள். பள்ளமாக இருக்கும் அந்த இடத்தை மேடு படுத்தியுள்ளார்கள். அதனைத் தடுத்து நிறுத்த வந்த சிவக்குமார் தரப்புக்கும் அலெக்ஸாண்டர் தரப்பினருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது.

27.07.2017 ம் நாள் அந்த நிலத்தருகே நடந்த வாக்குவாதத்தில் அலெக்ஸாண்டரின் சகோதரர் முத்துராஜ் சிவக்குமாரைக் கிழே தள்ளிவிட்டுள்ளார். அலெக்சாண்டரும் அப்போது உடன் இருந்துள் ளார். கீழே விழுந்த சிவக்குமாருக்குத் தலையில் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளது. அவரை அங்கிருந்து



மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். பிறகு மேல் சிகிச்சைக்காக பெரம்பலூர் மருத்துவ மனை, பிறகு திருச்சி அரசு மருத்துவமனையில் தீவிரச் சிகிச்சை பிரிவு எனத் தொடர்ந்து சிகிச்சை பெற்றும் - நான்கு நாட்களுக்குப் பிறகு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிவக்குமாருக்கு இரண்டு மகள்களும், ஒரு மகனும் உள்ளனர். இந்தத் தாக்குதல் திட்டக்குடி காவல்நிலையத்தில் குற்றஎண் 168 / 17 ல், ஐ.பி.சி 304-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர். தாக்குதல் நடந்த உடன் அங்கு விரைந்த ஆதித்தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் நாகராசன், கடலூர் மாவட்டத் தலைவர் தோழர் பக்கிரி, திருப்பூர் பொறுப்பாளர் சோழன் ஆகியோர் உட்பட எண்ணற்ற ஆதித்தமிழர் பேரவையின் பொறுப் பாளர்களின் தொடர் முயற்சிக்குப் பிறகு, இந்த வழக்கு 302- பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

சிவக்குமாரின் இறுதிநிகழ்வு மற்றும் வீரவணக்கப் பேரணியில் ஏராளமான ஆதித்தமிழர் பேரவைத் தோழர்கள் பங்கேற்றனர். காட்டாறுகுழு தோழர் தி.தாமரைக்கண்ணன், திட்டக்குடி த.நா.மா.லெ.க தோழர் குறள்நம்பி ஆகியோரும் பங்கேற்றனர்.

தாக்குதல் நடந்த நாளில் (27.07.2017) இருந்து இறுதி நிகழ்வுகள் (05.08.2017) வரை, தமிழ்நாட்டில் ஜாதி தீண்டாமைகளுக்கு எதிராகக் களமிறங்கிக் கொண்டிருக்கும் பல அமைப்புகள் இந்தத் தாக்குதல் பற்றி எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை. கண்டுகொள்ளவே இல்லை என்பது, அப்பகுதி அருந்ததிய மக்களுக்குப் பெரும் அச்சத்தைக் கொடுத் திருக்கிறது.

இந்தக் கடலூர் மாவட்டத்தில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பஞ்சமி நிலங்களாக வழங்கப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் வன்னியர்கள் பஞ்சமி நிலங்களை ஆக்கிரமித்துத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள். அப்படி வன்னியர்களால் வைப்பற்றப்பட்ட பஞ்சமி நிலங் களை மீட்கப் போராட வேண்டிய தோழர்கள், சமுதாயத்தில் தங்களுக்குக் கீழே ஒடுக்கப்பட்டுள்ள அருந்ததிய மக்களின் சிறு சிறு வாழ்வாதாரங் களைப் பறிக்கத் துடிப்பது மிகவும் கண்டனத்துக் குரியது.

**ஆதித்தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் நாகராசன் அவர்கள் காட்டாறு குழுவுடன் பகிர்ந்து கொண்ட செய்திகள்:**

கடலூர் மாவட்டம் திட்டக்குடிக்கு அருகில் உள்ள தருமக்குடிகாடு பகுதியில் சுமார் 45 அருந்ததியர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள வேணுகோபால்சாமி கோவிலுக்குச் சொந்தமான, அறங்காவல்துறையின் கட்டுப் பாட்டி லுள்ள 64 செண்ட் நிலத்தை 70 ஆண்டுகளாக பரா மரித்து வந்ததால் திரு.சிவக்குமார் அவர்களுடைய குடும்பத்தினருக்குத் தானமாக வழங்கியுள் ளனர். அதை அவர்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தி வந்தனர்.

மூன்று தலைமுறைகளாக பயன்படுத்திய நிலத்தைச் சமீபத்தில் விடுதலைசிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த தொகுதிப் பொறுப்பாளர் அலெக்சாண்டர் என்பவரும் அவரது சகோதரரும் இணைந்து ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்துடனும், அதிகாரிகளின் துணையுடனும் தவறான பத்திரத்தைத் தயாரித்துள்ளனர். அந்தப் பத்திரம் தவறு என்பதைத் தொடர்ச்சியாக ஆட்சியரையும், காவல்துறை கண்காணிப்பாளரையும் அணுகி உறுதி செய்தோம்.

> **“ ஜனநாயகப் போராட்டத்தை தலைவர் அதியமான் தலைமையில் நடத்த உள்ளோம். இந்தப் போராட்டத்திற்கு திருமாவளவன் அவர்களுக்கும் அழைப்பு விடுப்போம்.**

அந்தப் பத்திரம் போலியாக பெறப்பட்டது என்று சான்றும் அளித்தனர். இந்தச் சூழலில் கடந்த மாதம் 27 ந் தேதியன்று இந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்தோடு 25 வண்டிகளில் மணலைக் கொண்டுவந்து அந்த இடத்தில் கொட்டும் போது அதை சிவக்குமார் அவர்கள் தடுக்க முயன்றபோது அலெக்சாண்டரும் அவரது தம்பியும் திட்டமிட்டு சிவக்குமாரை கொலை செய்யும் நோக்கத்தோடு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதில் பலத்த காயம் ஏற்பட்ட சிவக்குமாரை அருகில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். மேல் சிகிச்சைக்காக பெரம்ப லூருக்கும், பின்னர் திருச்சி அரசு மருத்துவ மனைக்கும் எடுத்துச் சென்றுள்ளனர். அங்கு நான்கு நாட்கள் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி கடந்த 2ம் தேதி சிவக்குமார் உயிரிழந்தார். இது தொடர்பாக, விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் அவர்களுக்கும் தகவல் அளிக்கப் பட்டுள்ளது. ஆனால் இதுவரையிலும் அவர் எந்த ஒரு அறிக்கையும் வெளியிடாமல் இருப்பது வருத்தமளிக்கிறது.

சிவக்குமார் அவர்களின் குடும்பத்தைப் பாதுகாக்க அவரது மூன்று குழந்தைகளுக்கும், இரு பெண் குழந்தைகள் (10, 9 ம் வகுப்புகள்) 7ம் வகுப்பு படிக்கும் ஒரு ஆண் குழந்தை உட்பட அவர்களது கல்வி உதவியை உறுதி செய்கிறோம்.

கூடுதலாக இந்தக் குடும்பத்தின் பாதுகாப்புக் கான நிதியைத் திரட்டித் தருவதற்கான சில யுக்திகளை வகுத்துள்ளோம். இந்த ஊர் மக்களின் துணையுடன் அதையும் செய்து முடிப்போம். குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி ஒரு பெரிய ஆர்ப்பாட்டத்தை, ஜனநாயகப் போராட்டத்தை தலைவர் அதியமான் தலைமையில் நடத்த உள்ளோம். இந்தப் போராட்டத்திற்கு திருமாவளவன் அவர்களுக்கும் அழைப்பு விடுப்போம்.



கணியூர் தமிழ்ச்செல்வன்

# ஆரியர்கள்: ஆக்கிரமிப்பாளர்களே!
## உறுதிப்படுத்தும் மரபணு ஆய்வுகள்

ஆரியர் வருகை என்ற சொல்லை நம்மில் பெரும்பாலானவர்கள் பாடப்புத்தகத்திலும், திராவிடர் இயக்க மேடைகளிலும், ஏடுகளிலும் கேட்டறிந்திருப்போம். எனக்கும் இந்தச் சொல் அப்படித்தான் அறிமுகமானது. கிட்டத்தட்ட ஏழாவது படிக்கும்போது ஆரியர் வருகை என்ற தலைப்பில் சமூக அறிவியல் பாடத்தில் ஒரு கட்டுரை இருந்தது.

அதில் ஆரியர்களின் பூர்வீக உணவு என்று மாமிசத்தைக் குறிப்பிட்டிருந்தார்கள். எனக்கு ஒரு மிகப் பெரிய சந்தேகம் வந்தது. அதற்குக் காரணம் எங்கள்ஊரில் திராவிடர் கழகத் தோழர்கள் நிறையப் பேர் இருந்தார்கள். அவர்களின் மூலமாக ஆரியர் என்றால் பார்ப்பனர்களைக் குறிக்கும் என்று அறிந்திருந்தேன். ஆனால் எனக்கு மிக நன்றாகத் தெரியும் பார்ப்பனர்கள் மாமிசம் உண்ண மாட்டார்கள் என்று. அன்றுமாலையே என்னுடைய அப்பாவிடம்கேட்டேன்.

நான் : அப்பா, ஆரியர் என்றால் பார்ப்பனர்கள் தானே?

அப்பா : ஆம் அவர்கள்தான்.

நான்: ஆனால் என்னுடைய பாடப்புத்தகத்தில் ஆரியர்களின் பூர்வீகஉணவு மாமிசம் என்று போட்டிருக்குது? அதுசரியா? தவறா?

அப்பா: அதுசரிதான், அவர்கள் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டு இந்தியாவுக்கு வரும்போது அதைத்தான் உண்டார்கள். பிறகு மாறிவிட்டார்கள்.

பிறகு இந்தச் சிந்தனை வளர்ந்து கொண்டே இருந்தது. அதற்கு இரண்டு காரணங்கள்.

1. எங்கள் ஊரில் பெரிய அக்ரஹாரம் ஒன்று இருந்தது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் எங்கள் மாவட்டத்திலேயே சொல்லிக்கொள்ளும் அளவுக்குப் பெரியது.

2. திராவிடர்கழகத் தோழர்களின் பிரச்சாரம்

நாளுக்குநாள் நான் அவர்களின் உருவம்,பழக்கவழக்கங்கள், கல்விஅறிவு, சமுதாயஅந்தஸ்து ஆகிவற்றைச் சற்று உற்றுநோக்க ஆரம்பித்தேன். அதில் எனக்கு முதலாவதாகப்பட்டது அவர்களின் உருவம்தான். அதாவது சுமார் பத்தாயிரம்பேர் இருக்கக் கூடிய ஊரில் சிலநூறு பேராக இருக்கக் கூடிய பார்ப்பனர்கள் சற்று வித்தியாசமாக இருந்தார்கள். அதில் முக்கியமாக

1. அவர்களில் 90% மேற்பட்டவர்கள் வெள்ளை நிறத்துடன் இருந்தார்கள். ஆனால் இதுவே பார்ப்பனரல்லாத மக்களில் 5 சதவிகிதத்துக்கும் குறைவானவர்களே சற்று வெள்ளை நிறத்துடன் இருந்தார்கள்.

2.பெரும்பாலான பார்ப்பனர்கள் நல்ல உயரத்துடன் சுமார் ஆறுஅடி வரை இருந்தார்கள். ஆனால் இதுவே பார்ப்பனரல்லாத மக்களில் குறைவான நபர்களே ஆறுஅடிக்கு அருகில் இருந்தார்கள்.

அதற்குஅடுத்தபடியாக, வடஇந்தியர்களைப் பற்றிய பார்வையில், சிறுவயதில் வடஇந்தியர்கள் எல்லோருமே

சிவப்பாகவும் மற்றும் நல்ல உயரத்துடனும் இருப்பார்கள் என்று நினைத்திருந்தேன். ஆனால், நான் சில ஆண்டுகள் வட மற்றும் மேற்கு இந்தியாவில் தங்கியிருந்த போதுதான் தெரிந்தது தென்இந்தியா அல்லாத பகுதிகளில் வாழ்கிற மக்களிலும் அதிகமான நபர்கள் குறிப்பாகப் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்கள் நம்மைப் போலவே சற்று கறுத்த மற்றும் நடுத்தரஉயரம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்று அறிந்தேன்.

(ஒப்பீட்டு அளவில் இது தென்இந்திய மக்களுடன் சற்றுக்குறைவு) தமிழ்நாடு அல்லாத பகுதிகளில் வாழும் மக்கள் தங்களின் பெயருக்குப் பின்னால் சாதிப்பெயரை இன்னும் பயன்படுத்துவதால் எனக்கு அவர்களின் வர்ண நிலையை அறிந்துகொள்வது சற்று எளிதாக இருந்தது. ஆனால், இதுவே வடஇந்திய உயர்சாதியினர்களில் பெரும் பான்மையினர், பார்ப்பனர்கள், ஜாட், ராஜ்தூத், அகர்வால் போன்ற ஜாதியினர் சிவப்பு நிறத்துடனும் உயரமாகவும் இருந்தார்கள். தமிழ் நாட்டில் வாழும் பார்ப்பன உயர் சாதியினர் வெறும் 5 %, ஆனால் ஒருசில வடமேற்கு இந்திய மாநிலங்களில் 20முதல் 35 % வரை உயர்சாதியினர் உள்ளார்கள்.

அவர்கள்தான் அங்கு அனைத்துத்துறைகளிலும் (சினிமா, ஊடகம், அரசியல்) சுமார் 98 சதவிகிதம் ஆக்கிரமித்து உள்ளார்கள். ஆகையால் தான் நான் அப்படி சிறுவயதில் உணர்ந்தேன் என்று புரிந்து கொண்டேன்.

**கால்டுவெல்லின் மொழிஆராய்ச்சி, ஹரப்பா – முஹஞ்சதாரோ ஆய்வுகள்**

நான் மேலே குறிப்பட்ட கருத்தியலை என்னுடைய கல்லூரிக் காலங்களில் அறிந்த கால்டுவெல்லின் மொழி ஆராய்ச்சி, ஹரப்பா - முஹஞ்ச தாரோ ஆய்வுகளுடன் ஒப்பிட்டுக் கொண்டேன். அதாவது 18 ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டு மொழியியல் அறிஞர்கள் கால்டுவெல் - எல்லீஸ் இருவரும் இந்திய மொழிகளை ஆராய்ந்து தமிழ் உள்பட தென்னிந்திய மொழிகள் அனைத்தும் சமஸ் கிருதத்தில் இருந்து தோன்றியவை அல்ல. இவை அனைத்தும் சமஸ்கிருதத் தில் (இந்தோ-ஐரோப்பிய) இருந்து முற்றிலும் வேறுபட்டுத் தனித்தன்மையான ஒரு மூல (திராவிட) மொழியில் தோன்றி யவை என்று தங்களின் ஆய்வு முடிவுகளைச் சமர்ப்பித்தார்கள்.

அதற்கு அடுத்தபடியாக ஹரப்பா - முஹஞ்சதாரோ பகுதி களை ஆராய்ந்த மேலைநாட்டு தொல்லியல் ஆய்வாளர்கள் இந்தப் பகுதிகளில் சிலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு (சுமார் மூவாயிரம் ஆண்டு) இங்கு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் என்றும், சிந்துச்சமவெளி நாகரீகம் என்பதே திராவிட நாகரீகம்தான் என்றும் தங்க ளுடைய ஆய்வில் கூறினார்கள். ஹரப்பா - முஹஞ்சதாரோ போன்ற பகுதிகள் தற்போது முறையே குஜராத் - பாகிஸ்தானில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

**ஆரியர் இடப்பெயர்வு பற்றிய விவாதத்தைத் தீர்மானிக்கும் மரபணு**

2017 ஜூன் 17 அன்று இந்து ஆங்கில நாளேட்டில் டோனி ஜோசப் அவர்களால் எழுதப் பட்ட How Genetics is settling the Aryan migration debate என்ற கட்டுரை எனது கவனத்தை ஈர்த்தது. இந்தக் கட்டுரையைப் படித்த பொழுது ஆரியர் வருகை பற்றி மேலும் பல அரிய தகவல் களை நாம் அறிந்து கொள்ள ஏதுவாக இருந்தது.

இந்தக் கட்டுரையானது மார்ச் மாதம் பேராசிரியர் மார்டின் ரிச்சர்ட் அவர்களின் தலைமையில் பதினாறு மரபணு அறிவியல் ஆய்வாளர்கள் தங்க ளுடைய ஆய்வுகளை "A genetic chronology for the Indian Subcontinent points to heavily sex-biased dispersals" (இந்தியத் துணைக்கண்டத்திற் கான ஒரு மரபியல் காலவரிசை, பாலியல் சார்புடைய பரவலைச் சுட்டிக்காட்டுகிறது) என்ற தலைப்பில் BMC Evolutionary Biology என்கிற பரிணாம உயிரியல் சார்ந்த இதழில் வெளிவந்த ஆய்வு களைப் பற்றியதாக இருந்தது. அந்த ஆய்வு பற்றிய கட்டுரையை சற்று விரிவாக பார்போம்.

(குறிப்பு : ஆய்வாளர்கள் இந்த ஆய்வுக்காக சுமார் பதினா றாயிரம் நபர்களுடைய மரபணு வை எடுத்து உள்ளார்கள், மேலும் அதில் இந்தியாவின் பல பகுதி மக்களும் அடங்குவர்.)

**ஆரியர் வருகை என்பது உண்மைதானா?**

ஆம் . ஆரியர்கள் சுமார் கிமு 1500 முதல் கிமு 2000 ஆண்டுகளில் மத்திய கிழக்கு ஆசியாவில் இருந்து இந்தியாவில் குடியேறி இருக்கலாம் என்கிறது இந்த ஆய்வு. அதாவது இந்தியாவில் உள்ள சுமார் 17 % ஆண்களிடம் ஐரோப்பிய (ஆரிய) மக்களின் மரபணு உள்ளது .

**அது என்ன குறிப்பாக ஆண் மரபணு** (Y-DNA , transmitted only from father to son) *?*

ஏனென்றால் பொதுவாக மரபணு ஆராய்ச்சி என்றால் பெண் மரபணுவை (mt DNA) தான் அதிகம் எடுத்துக்கொள்வார்கள். அதன்படி இங்கும் சில ஆண்டு களுக்கு முன்பு இந்தியாவில் உள்ள பெண் மரபணுவை (mtDNA - matrilineal DNA, transmitted only from mother to daughter) ஆராய்ந்ததில் சுமார் கடைசி பனிரெண்டாயிரம் ஆண்டுகள் குறிப்பிடத்தகுந்த அளவு எந்த ஒரு குடியேற்றம் / இனக் கலப்பு எதுவும் நடைபெற வில்லை என்றே ஆய்வு முடிவுகள் தெரிவித்தன.

பிறகு ரிச்சர்ட் தலைமை யிலான குழு இந்தியாவில் உள்ள ஆண் மரபணுவை ஆராய்ந்த போதுதான் 17% இந்திய ஆண்களிடம் R1a haplogroup எனப்படும் ஐரோப்பிய மரபணு கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் மேல்சொன்ன கால இடை

வெளியில் (4000 years ago or bronze age) இந்தியாவிற்கு வந்த ஆரியர் களில் மிகப் பெரும்பான்மையாக ஆண்களே இருந்தார்கள் என்ப தாகும்.

**R1a என்றால் என்ன ?**

Pontic Caspian Steppe எனப்படும் பகுதியில் வாழ்ந்த மக்களிடம் இருந்து தோன்றிய ஆண் மரபணுவின் (Y-DNA) பெயர். Pontic Caspian Steppe எனப்படும் இந்தப் பகுதியானது கருங் கடலுக்கு வடக்கேயும், காஸ்பியன் கடலுக்குக் கிழக்கேயும், மேற்கு உக்ரேனில் இருந்து, தற்போதைய ரஷ்யாவில் உள்ள வோல்கா பெடரல் மாவட்டம் வரை உள்ள புல்வெளிப் (Grossland) பகுதியாகும். அதாவது R1a என்பது ஆரிய மூதாதையர் களின் ஆண் மரபணுவின் பெயர் என்றும் சொல்லலாம்.

**R1a haplogroup என்றால் என்ன?**

A haplogroup is a genetic population group of people who share a common ancestor on the patriline or the matriline, haplogroup என்பது ஒரு பொதுவான ஆண்அல்லது பெண் மூதாதையர்களின் மரபணுவை பகிர்ந்துக்கொள்கிற ஒரு மரபணு மக்கள் குழுமம் ஆகும். இதன்படி R1a haplogroup என்பது R1a என்ற ஆண் மூதா தையர்களின் மரபணுவைப் பகிர்ந்துக்கொள்கிற மரபணு மக்கள் குழுமம். அதாவது ஆரிய ஆண் மூதாதையர்களின் மரபணுவைப் பகிர்ந்துக் கொள்கிற மக்கள் குபமம்.

உலகம் முழுவதிலும் செய்த மரபணு ஆராய்ச்சிபடி, இந்த R1a haplogroup, pontic caspian steppe எனப்படும் பகுதியில் இருந்து சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடர்ச்சியாக, கிழக்கு, வடக்கு, தெற்கு என பல பகுதிகளுக்குப் பரவியுள்ளது. தற்போது இந்த மரபணுவானது ஐரோப்பா, மத்திய ஆசிய மற்றும் கிழக்காசிய நாடுகளில் பரவலாக உள்ளது.

**R1a haplogroup ன் பிரிவுகள்**

மூன்று வருடங்களுக்கு முன்பு டாக்டர் பீட்டர் அண்டர்ஹில் (Pete r A Underhill, Stanford University, Stanford , Department of Genetics, US) தலைமையிலான 32 ஆராய்ச்சி யாளர்களைக் கொண்ட குழு, ஆசிய ஐரோப்பியக் கண்டத்தில் 126 பகுதிகளில் உள்ள 16,000 ஆண்களின் மரபணுக்களைச் சோதித்து, R1a மரபணுவின் பரவல் மற்றும் தொடர்பு பற்றிய ஆய்வு அறிக்கையைச் சமர்ப் பித்தது (distribution and linkages of R1a) .

அதில் R1a haplogroup ன் இரண்டு பிரிவுகளாக Z 282 and Z 93 என்கிற துணை haplogroup ஐக் கண்டறிந்தார்கள். அதில் Z 282 என்கிற துணை haplogroup ( sub-haplogroup) ஐரோப்பாவில் உள்ள மக்களிடம் மட்டும் உள்ள தென்றும், அதற்குஅடுத்தபடியாக உள்ள Z 93 என்ற துணை haplogroup ( sub-haplogroup) மத்திய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் வாழும் மக்களில் உள்ளது என்றும் கண்டறிந்தார்கள். மேலும் Z 93 ன் முக்கிய மூன்று பிரிவுகள் முறையே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்திய மற்றும் இமாலயப் பகுதிகளில் உள்ள மக்களிடம் உள்ளதென்றும் கூறினார்கள். ஆகையால் இந்தியாவில் உள்ள ஆரியர்களின் மரபணு Z 93 என்ற Sub-Haplo group சார்ந்தது.

**ஆரியர் ஆக்கிரமிப்பும் – சிந்துச்சமவெளி நாகரிகத்தின் வீழ்ச்சியும்**

ஆரியர் வருகையும் சிந்துச் சமவெளி நாகரீகத்தின் வீழ்ச்சியும் கிட்டத் தட்ட ஒரே கால கட்டத்தில் நடந்தனவா? ஆம் என்கிறது அறிவியல் ஆய்வுகள். இங்கு நாம் இரண்டு நிகழ்வுகளையும் இரு வேறு விதமான அறிவியல் ஆய்வுகளில் இருந்து அறியலாம்

1. சிந்துச் சமவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி என்பது தொல்லியல் துறையின் ஆய்வுகளின் அடிப்படையில் குறிப்பாக ஹரப்பா முஹன்ஜதரா ஆய்வுகளில் சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு (Between 1900 and 1700 BC) முன்பு அதன் அழிவு தொடங்கிற்று என்று அறியப்படுகிறது. அதாவது சிந்துச் சமவெளி நாகரிகத்தின் சிறப்புகளில் ஒன்றான நகர்ப்புற வாழ்வு அழிந்து, அங்கு வாழ்ந்த மக்கள் கிராம / நாட்டுப்புறப் பகுதிகளைநோக்கிஇடம்பெயர்ந் தார்கள்(de-urbanization)

2. தோராயமாக Z 93 என்ற மரபணு வகை எப்போது தனக்குள்ளேயே சில பிளவுகளை உருவாக்கிக் கொண்டதோ - அப்போதுதான் ஆரியர்களின் வருகை சிந்துச் சமவெளி பகுதிகளில் நடந்திருக்கலாம் என கணிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் பார்த்தால் அந்த நிகழ்வு சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு என்று மரபணு ஆய்வுகள் கூறகின்றன.

இந்த இரண்டு வகை அறிவியல் ஆய்வுகளின்படி ஆரியர் வருகையும் சிந்துச் சமவெளி நாகரீகத்தின் வீழ்ச்சியும் கிட்டத்தட்ட ஒரேகால கட்டத்தில்தான் நடந்துள்ளது என்ற முடிவை அறிவியல் உலகம் சுட்டிக்காட்டுகிறது.

**குறிப்பு:** இங்குகவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் ஆரியர் வருகையால்தான் சிந்துச் சமவெளி அழிந்தது என்றோ அல்லது ஆரியர்கள்தான் சிந்துச் சமவெளி நாகரீகத்தைச் சண்டையிட்டு அழித்தார்கள் என்பதற்கான எந்த ஒரு அறிவியல் முகாந்திரம் எதுவும் இப்போது வரை கிடைக்க வில்லை.

**ஆரியர் ஆக்கிரமிப்பால் வந்த கேடுகள்**

உலகில் மனித இனத்தின் இடப்பெயர்வு என்பது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்ற ஒன்று. ஆகையால், வரலாற்றில் எந்த ஒரு இனமும் நூறு சதவீதம் சிறு கலப்பு கூட இல்லாமல் எந்த ஒரு நாடு / பகுதி முழுவதும் வாழ்வது என்பது சாத்தியமற்றதாக உள்ளது.

அதேபோல்தான் இந்தியா விலும் ஆரியர் அல்லாத பல மனித இனக்குழுக்கள் வருகை

புரிந்துள்ளனர். உதாரணமாக, சுமார் 55,000 முதல் 65,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவில் இருந்து வந்தவர்கள் தான் பெரும்பான் மையான இந்திய மக்களின் மூதாதையர்கள் ஆவர்.

அதன் பிறகு சுமார் 10,000 ஆண்டுகளுக்கு (இந்த கால அளவு இன்னும் சரியாக உறுதிப் படுத்தப்படவில்லை) முன்பு மேற்கு ஆசியாவில் இருந்து குடியேறிய மக்கள் ஏற்கனவே இங்குள்ள மக்களிடம் கலந்து பல விவசாய யுத்திகளை அறிமுகப்படுத்தி உள்ளார்கள். அதன் பிறகு வணிகம் சார்ந்தும் மற்ற பலவற்றிற்காகவும் பல இனக்குழுக்கள் வந்துள்ளார்கள்.

ஆனால், நம்மால் மற்ற இனக்குழுக்களின் வருகையைப் போல் ஆரியர் வருகையைப் பார்க்கமுடியாது. அதற்குக்காரணம் ஆரியர்கள் சமஸ்கிருதம் என்ற மொழியுடம் அன்றைய சிந்துச் சமவெளி மக்களுக்கு முற்றிலும் மாறுபட்ட பிறவி ஏற்றத்தாழ்வு கொண்ட ஒரு புது வகையிலான வாழ்க்கை முறையைப் புகுத்தி உள்ளார்கள்.

ஆம், ஆரியர்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்கு வர வில்லையென்றால் இந்தியாவில் சாதி என்பதே இருந்திருக்காது என்று ஆய்வுகள் நமக்கு புரிய வைக்கிறது. குறிப்பாக ஆரியர் வருகை புரிந்த காலமும் 'ரிக் வேதம்' தோன்றிய காலமும் கிட்டத்தட்ட ஒரே காலமாகும். ஆரியர்கள் வந்திருக்கா விட்டால், இந்தியாவும் மற்ற நாடுகளைப் போல் சாதி என்ற பிறவி ஏற்றத் தாழ்வு எதுவும் இல்லாத நாடாக இருந்திருக்கும்.

**பார்ப்பனர் எதிர்ப்பு சரியா ?**

இன்றுவரை பலர் திராவிடர் இயக்கத்தின் மேல் வைக்கும் குற்றச்சாட்டு - பார்ப்பனர்களை எதிர்ப்பது பற்றி, அதாவது.

**இந்தியாவில் எல்லோரும் தான் சாதி பார்க்கிறார்கள். ஆனால் நீங்கள் ஏன் சாதி ஒழிப்பு, சமத்துவம், பகுத்தறிவு பற்றிய பரப்புரைகளில் குறிப்பாக பார்ப்பனர்களை மட்டும் அதிகமாகத் தனிமைப்படுத்திப் பிரச்சாரம் செய்கிறீர்கள்?**

ஆம். உண்மைதான். திராவிடர் இயக்கம் தான் இந்தியத்துணைக்கண்டத்தில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மற்ற இயக்கங்களைவிட பார்பனர்களை மிகக் கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருக்கிறது . அதற்குக் காரணம் ஆரியப்பார்ப்பனர் களின் ஆதிக்கத்திலிருந்து பார்ப்பனர் அல்லாத திராவிட மக்களை மீட்டெடுப்பதுதான்.

அதாவது, இன்றுவரை பெரும்பான்மையான பார்ப்ப னர்கள் தங்களை 'இந்து' என்றோ, தமிழர்/தெலுங்கர் / மலையாளி / வங்காளி என்று உணர்வதைவிட, தங்களை 'ஆரியர்' என்றுதான் உணர்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அனைத்துப் பார்ப்பனர்களும் தங்களைவெளிப்படையாகவே 'ஆரியர்' என்றுதான் அடையாளப்படுத்தி கொண்டார்கள்.

பிறகுதான், மாறிவரும் சூழலுக்கு ஏற்றபடி, தங்களையும் 'இந்து' என்று அடையாளப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் அவர்கள் எந்த மாநிலத்தில் வாழ்ந்தாலும், எந்த ஒரு மொழி பேசினாலும் இந்தோ ஐரோப்பிய மொழியான - ஆரியர்களின் மொழியான சமஸ்கிருதத்தை மட்டுமே தங்களின் தாய் மொழியாக மனதார ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள்.

அதன் காரணமாகவே மக்கள் பயன்பாட்டில் இல்லாத மொழியான சமஸ்கிருதத்தைத் தெய்வ பாசை, அறிவியில் மொழி என்றெல்லாம் முட்டுக் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாகவே இந்தியாவில் உள்ள திராவிட மொழிகளில் கூட தங்களின் சமஸ்கிருதத்தைத் தங்களால் முடிந்த அளவு பல நூற்றாண்டு காலமாகத் திணித்துள்ளார்கள். உதாராணமாக, இந்தியாவின் முதல் செயற்கைக்கோளுக்கு 'ஆரியப்பட்டா' என்று தங்களின் இனப்பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

பார்ப்பன எதிப்பு இல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த ஒரு சமத்துவ சமுதாய அல்லது சமுதாய மறுமலர்ச்சி சாத்தியமில்லை. அதற்கு உதாரணம். கிட்டத்தட்ட அரை நுற்றாண்டு காலத்தில் கறுப்பின விடுதலை என்பது அமெரிக்காவில் சாத்திய மாயிற்று. அதற்கு முக்கியக் காரணம் கறுப்பின மக்களின் போராட்டம் மட்டுமில்லாமல் அங்குள்ள வெள்ளை நிற மக்களில் பெரும்பான்மையினர் நிற அடிப்படையில் மனிதர்களிடம் பாகுபாடு பார்ப்பது தவறு என்று உணர்ந்ததும்தான்.

ஆனால் இங்கு நடப்பது வேறு. தோழர் பெரியார் அவர்கள் கூறுவது போல, இன்றுவரை ஊரு ஊருக்கு இருக்கும் பார்ப்பனர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் எந்த ஒரு பெரிய சமுதாய மாற்றம் நிகழாமல், தங்களின் ஆதிக்கம் குறையாதபடி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இறுதியாக, இந்த கட்டுரையின் நோக்கம் எந்த ஒரு மனித இனத்தையும் இரத்தப் பரிசோதனை அடிப்படையில் பிரித்துக் காட்டுவது அல்ல. மாறாக பார்ப்பனர் அல்லாத திராவிட மக்களிடம் ஐரோப்பாவில் இருந்து, மத்திய ஆசியா - கைபர் போலன் கணவாய் வழியாக வந்த ஆரியக் கூட்டம்தான் நம்மில் பிறவி ஏற்றத்தாழ்வான சாதியைத் திணித்து, தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி உள்ளார்கள் என்பதை உணர்த்துவதுதான்.

# துக்கநாள் ஒழிக!

## உண்மைச் சுதந்திரநாள் தோன்றுக!

தோழர் பெரியார்

ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி சுதந்திரதின வெள்ளிவிழாவைக் கொண்டாட அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதாவது இந்தியாவுக்குப் பல நுற்றாண்டு காலமாக இருந்து வந்த அந்நிய நாட்டான் ஆட்சி ஒழிந்து நம்நாட்டை நாமே ஆளும்படியான சுதந்திர சுயாட்சி ஏற்பட்டு 25 ஆண்டுகள் ஆனதாகவும், அதற்காக சுதந்திரதின வெள்ளிவிழாக் கொண்டாடுவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் நான் இதை 'சுதந்திரம் பெற்றநாள்' என்று சொல்ல மாட்டேன். மற்றென்னவென்றால் அடிமையும், மடமையும், ஒழுக்கக்கேடும், நேர்மைக்கேடும் ஏற்பட ஏதுவான துக்கநாள் துவங்கிய 25 ஆம் ஆண்டு துக்கநாள் என்றுதான் சொல்வேன்.

இதை இன்றுமாத்திரம் சொல்லவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரம் என்று என்றைக்கு வெளியிடப்பட்டதோ அன்றே சொன்னவன் நான். சுதந்திரம் என்று முதலில் விஷயம் வெளியானவுடன் உயர்திரு. அண்ணா அதைச் 'சுதந்திரநாள்' என்று பாராட்டினார். அதைக் காங்கிரசுக்காரர்கள் பெரிதாகப் பாராட்டி, துணித்தோரணங்களில் 'இது சுதந்தரநாள்' என்று எழுதி 'அண்ணாதுரை' என்றும் எழுதி அவற்றைத் தெருத்தெருவாகக் கட்டி வைத்தார்கள். பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் போல் பிரசுரித்தார்கள்.

அநேகமாக, அந்தச்சம்பவம்தான் அண்ணா துரைக்கும் நமக்கும் மாறுபாடு வெளியான சம்பவமாக இருக்கலாம். அதுமாத்திரமல்லாமல், அடுத்தவிஷயத்தை மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன், அவர்கள் ஒரு கூட்டத்தில் (பொள்ளாச்சி கூட்டத்தில் என்பதாக ஞாபகம்) 'இதுசுதந்திரநாள்' என்று பேசினார் என்பதைக் கேள்விப்பட்டு, நான் கண்டித்தேன். .அப்போது, அதற்குப் பதில் என்பதாக நாவலர் அவர்கள், "ஒரு விஷயத்தில் தலைவர் ஒரு கருத்துக் கொண்டால் அதை மக்களுக்குத் தெரிவித்திருக்க வேண்டாமா? தலைவர் கருத்து இப்படிப்பட்டது என்று எங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று சொன்னார்

ஆகவே இது துக்கநாள் என்பதைச் சுதந்திர அறிக்கை வெளியிடப்பட்ட நாளிலேயே, "இது துக்கநாள். நாட்டிற்கும் மனித சமுதாயத்திற்கும் கேடான நாள்" என்றுசொன்னேன். இதை அந்தநாள் குடிஅரசுப் பத்திரிக்கையில் பார்த்தால் நன்றாக விளங்கும். அதுஎப்படியோ இருக்கட்டும்.

இன்று இந்தநாட்டில், ஓர்ஆட்சிக்கு இருக்கக் கூடாத எந்த அயோக்கியத்தனமும், ஒழுக்கக்கேடு, நாணயக்கேடு, புரட்டு, பித்தலாட்டம், மானங் கெட்டதனம், கட்சிக்குத் துரோகம் இழிதன்மை யான சுயநலம், அபாண்டமாய்க் குறைகூறல் முதலிய கூடாஒழுக்கக் காரியங்கள் எந்தக்கட்சியில் - யாரிடம் இல்லாமல் இருக்கின்றன? இப்படிப்பட்ட காரியத் துக்காக யார் வெட்கப் படுகிறார்கள்?

இன்று அரசியல் கிளர்ச்சி என்றாலே காலித் தனம், அயோக்கியத்தனம், மோசடி, துரோகம் முதலிய தன்மைகள் இல்லாமல் யாரால் நடந்துக் கொள்ள முடிகிறது?

முதலாவதாக, அயோக்கியத்தனத்துக்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன். இந்த தேசத்தில் எவன் ஒருவன் தன்நாட்டுக்குச் சர்வசுதந்திரம் கேட்கிறோனா அவன் ஏழு ஆண்டுகள் வரை தண்டிக்கத் தக்க குற்றவாளியாக ஆக்கப்படுவான் என்ற சட்டம் உலகில் எந்த நாட்டில், தேசத்தில் இருக்கிறது?

அடுத்துச்சொல்கிறேன்,

எவனொருவன் தன்நாட்டுக்குத் தொண்டு செய்ய, எந்த ஸ்தாபனத்தின் தேர்தலில் ஓர் அபேட்சகராக நிற்பதனாலும், அவன் பத்தாயிரம் ரூபாய் முதல் மூன்று இலட்சம் ரூபாய்வரையில் செலவு செய்துதான் வெற்றி, தோல்வி அடைய முடியும் என்ற நிலை எப்படி யோக்கியமான நிலை யாகும்?

காலித்தனத்துக்குப் பெயர் வேலைநிறுத்தம்; அயோக்கியத்தனத்திற்குப் பெயர்அகிம்சை; சண்டித் தனத்திற்குப் பெயர் சத்தியாக்கிரகம்! தான் பதவி பெற்ற கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டு எதிர்க்கட்சி ஆளாவது முதலிய அயோக்கியத் தனங்கள் எப்படி யோக்கியமாக இருக்கமுடியும்?

மற்றும் இன்றைய சுதந்திரம் என்பதில், எந்த அயோக்கியத்தனமான காரியம் விலக்கப்பட்டிருக் கிறது என்று சொல்லமுடியும்? இவைகள் ஒருபுற மிருக்க;

தேசத்துக்குப் பூரணசுதந்திரம் கிடைத்து. இன்றைக்கு 25 ஆண்டுகள் ஆனபிறகும், இந்தப் பூரணசுதந்திரம், உள்ள நாட்டில் 54 கோடி மக்களில்

*39 கோடிப்பேர் தற்குறி என்றால் -100க்கு 70-மக்கள் கையெழுத்துப் போடத்தெரியாத தற்குறிகளாக இருக்கிறார்கள் என்றால், அதிலும் மொத்த ஜனத் தொகையில் சரிபகுதிப் பேர்களான பெண்கள் 100 கு 82 சதவீதம் தற்குறி என்றால், அதுவும் தேசம் பூரண சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலை என்றால் இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா? அடிமை ஆட்சியா? என்றுகேட்கிறேன்.*

*இதைச் சுதந்திரஆட்சி என்று- வயிற்றுப் பிழைப்பு, பதவிவேட்டை தேசியவாதிகளும், மக்களுந்தான், சொல்லிக்கொள்ள முடியுமே தவிர, நேர்மையான, அறிவுள்ள ஜனசமுதாயத்தான் சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.*

*இந்தநிலையில், இந்தநாட்டில் இலட்சக்கணக் கான கடவுள்கள் பல்லாயிரக்கணக்கான தேர்த் திருவிழாக்கள், கடவுள் கலியாணங்கள், நித்தியமும், 5 வேளையும் பூசைகள் முதலிய ஆடம்பரங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றனவென்றால், இந்த தேசத்தை மக்கள் ஆள்கிறார்களா? பிசாசுகள் - மனிதத் தன்மையற்றவர்கள் ஆள்கிறார்களா? இந்த நாட்டில் சுதந்திரம் இருக்கிறதா, அடிமைத் தன்மைக்கு ஆதிக்கம் இருக்கிறதா என்றுதான் சிந்திக்க வேண்டியிருக்கிறது.*

*தவிர, இந்தச் சுதந்திரத்தின் காரணமாக இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவு மானம், ரோஷம் இருக்கிறது என்றால், இந்த நாட்டு மனிதசமுதாயம் இருபிரிவாகப் பிரிந்து, ஒருபிரிவு நூற்றுக்கு 3 பேர் என்கிற பார்ப்பனர் - மற்றொரு பிரிவு 100 க்கு 97 பேரான சூத்திரர். பார்ப்பனர் என்றால் மேல்சாதி. சூத்திரன் என்றால் கீழ்சாதி (இழிமகன்) ஆவான்.*

*இந்தப்படியானநிலை, சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கிறது என்றால், இந்தத் தேசம் ஒரு சுதந்திரம் பெற்ற தேசம், நாடு ஆகுமா? அடிமைச்சாசனம் பெற்ற தேசம், நாடுஆகுமா? இதற்கு மேலும் நம் சுதந்திரத்தை சுதந்திரநாள் விழாவைப் பற்றி விளக்குவது என்றால் நம்மனம் மிகுந்த பரிதாபப்படுகிறது, இரக்கப் படுகிறது.*

*தோழர்களே! இப்படிப்பட்ட நிலை பற்றி எந்தக் குடிமக்களாவது வெட்கப்படுதாக இருந்தால் அந்த வெக்கத்தைத் தமது சமுதாயத்திற்குக் கேடாகவும் தங்கள் சமுதாய உயர்வாழ்வுக்காகவே நடத்தப் பட்டுவரும் பார்ப்பனப் பத்திரிகைகளை வாங்குவதில்லை, படிப்பதில்லை என்று உறுதி எடுத்துக் கொள்வதன்மூலம் காட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுதான் இன்று பொது மக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளும் (இன்ஜெக்ஷன்) செய்தியாகும். துக்கநாள் ஒழிக! உண்மைச் சுதந்திரநாள் தோன்றுக!*

*- தோழர் பெரியார் - விடுதலை- 15.08.1972*

# கோரக்பூர்:

## ஊடகங்களின் அமைதி? காலதாமதம்?

மௌ.அர.ஜவஹர்

1. பார்ப்பனரல்லாத தமிழர்களின் முதலீட்டில் நடத்தப்படும் தொலைக்காட்சிகளில் உள்ள உயர் பொறுப்புகளில் 99 சதம் பார்ப்பனரே!

2. அதில் நடத்தப்படும் சமூக, அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அடிக்கடி Repeat ஆக வருபவர்கள் பெரும்பாலானவர்கள் பார்ப்பனர்கள், மற்றும் பார்ப்பன அடிமைகளே!

3. இந்நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாத தமிழர்களே!,

4. எந்த அரசியல் நிகழ்வு மற்றும் சமூக நிகழ்வு என்றாலும் வேகமாக முதலில் செய்தி வெளியிட ஓடும் ஊடகங்கள் - அன்றே உடனடி விவாதம் நடத்தும் ஊடகங்கள் - உத்திரப்பிரதேச மாநில கோரக்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நிகழ்ந்த கொடூரத்திற்கு மெதுவாக, அமுக்கி வாசித்தனவே? விவாதங்கள் கூட மெதுவாகத்தானே தொடங்குகிறது? ஏன்?

5. அதுவும் முதல்வர் ஆதித்யாவின் சொந்த ஊரும், சொந்தத் தொகுதியுமான கோரக்பூரில் (அரசுக்குச் சொந்தமான பாபா ராகவ் தாஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) நடந்துள்ள 65 பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது.

6.ஆரம்ப நாட்களில் குழந்தைகள் இறந்த நிகழ்வுகள் திட்டமிட்டே மறைக்கப்படுகிறது. ஒரே நாளில் 30 குழந்தைகள் இறந்தப்பின்தான் ஊடக ஜாம்பவான்கள் மெதுவாகத் தலை காட்டினர்.

7. யாருக்குப் பயந்து அல்லது அடிமைப்பட்டு மென்று விழுங்கி விசயத்தைச் சொல்கிறார்கள் இந்த ஜனநாயகத் தூண்கள்?

8. சரி இதுவே வேறு மாநிலங்களில் நிகழ்ந்திருந்தால் இந்தத் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் எப்படி யெல்லாம் ஊளையிட்டு இருக்கும்?

9. ஆக்ஸிஜன் பற்றாக்குறைதான் காரணமாம். அதற்குக் காரணம் ஒப்பந்த நிறுவனத்திற்கு பாக்கித் தொகை வைத்ததுதானாம். இது அல்லாமல் மூளையில் ஏற்பட்ட நோய்த் தொற்றாலும் சில குழந்தைகள் இறந்துள்ளார்களாம்.

10. ஆறு மாதத்திற்கு முன்பே ஆக்ஸிஜன் சப்ளை நிறுவனம் நிலுவைத் தொகைக்காக நீதிமன்ற நோட்டீஸ் விட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

11. இந்த நரபலிக்கு ஊழல் ஒழிப்பு உலகநாயகன் கமல்ஹாசன் வாய்திறந்து ஒரு வார்த்தை கூட பேச வில்லையே? இது இங்கு நிகழ்ந்திருந்தால் விஸ்வரூபம் எடுத்திருப்பாரே? இப்போதைய மௌனம் எஜமான விசுவாசத்தின் வெளிப்பாடா?



# மத்தியஅரசின் போலிஅறிவியல் பரப்புரை:
# இந்திய விஞ்ஞானிகளின் எதிர்ப்பு

யாழ்மொழி

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாளன்று, உலகெங்கிலும் உள்ள 600 கும் மேற்பட்ட நகரங்களில், அந்தந்த நாட்டின் அரசுகள், அரசாங்கக் கொள்கைகளை வகுக்கும் போது அறிவியலை ஒரு முக்கியக்கூறாகக் கருத வேண்டும் என்று வலியுறுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் "GLOBAL MARCH FOR SCIENCE" என்ற போராட்டத்தை நடத்தினர். அப்போது இந்தியா அதில் பங்கேற்கவில்லை.

ஆனால், நாட்டின் அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சிக்கழகத்தின் (CSIR : Council for Scientific and Industrial Research) ஆய்வகங்களுக்கும், பிரதான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் சரிவர நிதிகள் ஒதுக்காததாலும், கல்விவளாகங்களில் போலி-அறிவியல் கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருப்பதாலும், மதநூல்களிலிருந்து முட்டாள்தனமான கருத்துக்களைத் தொடர்ந்து அரசாங்கம் வலியுறுத்திக் கொண்டிருப்பதாலும், இந்திய விஞ்ஞானிகளும் ஆய்வுமாணவர்களும் இந்தியாவில் இப்போராட்டத்தை நடத்தவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. நாடுமுழுவதும் பல்வேறு அறிவியல் அமைப்புக்களுடன் சேர்ந்து, "Breakthrough Society" என்ற அமைப்பு ஆகஸ்ட் 9 ம் தேதி இந்தியாவில் 'MARCH FOR SCIENCE' போராட்டத்தை நடத்தியது.

நாட்டின் முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்களான IISc, IIT, CSIR, IISER, TIFR மற்றும் பல கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்களும் மாணவர்களும் இணைந்து 20க்கும் மேற்பட்ட நகரங்களில் இப்போராட்டத்தை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கணக்கான பள்ளி மாணவர்களும் அணிவகுப்பில் கலந்துகொண்டு நரேந்திர தபோல்கர், யு.ஆர்.ராவ், யாஷ்பால் மற்றும் புஷ்ப மித்திரா பார்கவா ஆகியோரின் பெருமை யைப் போற்றும் வகையிலும், மூடநம்பிக்கைகள், பில்லி சூனியம் மற்றும் மதப்பிரச்சாரங்களுக்கு எதிராகவும் முழங்கினர். நாட்டின் முக்கிய விஞ்ஞானிகளான திப்பாங்கர்சாட்டர்ஜி, ரவிவர்மா குமார் மற்றும் டி.வி.ராமசந்திரா ஆகியோரும் இந்த அணி வகுப்பில் கலந்துகொண்டனர்.

அவர்கள் பொதுமக்களிடையே அறிவியலுக்குப் புறம்பான கருத்துகளைப் பரப்புவதைக் கண்டித்தும், சுற்றுச்சூழல்சீர்கேடுகளைக் கண்டித்தும் பேசினர். மேலும் அறிவியல் தரவுகளையும், கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு அரசாங்கக் கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆசியாவிலுள்ள மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் மிகக்குறைவான நிதியே (0.8-0.9சதம்) அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால்,



நாட்டின் ஆய்வுமுடிவுகள் மட்டும் மற்றவர் களைவிட முன்னணியில் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அரசாங்கம் 3 சதமாக அந்நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

**போராட்டத்தில் பங்கேற்ற பல்வேறு விஞ்ஞானிகளின் கருத்துகள்:**

அமெரிக்காவில் நடந்த *"March for Science"* போராட்டம் 'டொனால்ட்ட்ரம்ப்'-இன் ஆட்சி தட்பவெட்ப மாற்றத்திற்கான (*Climate Change*) விஞ்ஞானத்திற்கு எதிராக இருப்பதால் நடத்தப் பட்டது. ஆனால், இந்தியாவில் இப்போராட்டம், போலிஅறிவியல் மற்றும் மாட்டின் சிறுநீருக்கு அரசாங்கம் கொடுக்கும் முக்கியத்துத்தை எதிர்த்து நடத்தப்படுகிறது.

அறிவியல்என்பது "இயற்கையான நிகழ்வு களுக்கு அறிவியல் ரீதியான தரவுகளைக் கொண்டு முறையான மற்றும் பகுத்தறிவு விளக்கங்களை உருவாக்குவதாகும்". அவ்விளக்கங்கள் பல்வேறு அறிவியல் விதிகள் மற்றும் கோட்பாடுகளைக் (*science laws and principles*) கொண்டு நிறுவப்படும். அறிவியல் நிலையானதல்ல; அதன் விளக்கங்கள் மற்றும் கோட்பாடுகள் புதிய தகவல்களின் அடிப்படையில் எப்போதும் மாறக்கூடியவை.

ஆனால், தற்போது இந்தியாவில் நிலவும் அரசியல் சூழ்நிலையானது, மதகோட்பாடுகளை உண்மையாக்க பல திட்டங்களை நடைமுறைப் படுத்தக்கோரி, மூடநம்பிக்கைகளுக்கிடையில் அறிவியல் நிறுவனங்களைச் சிறைப்படுத்தியுள்ளது.

மக்களும் அரசியல்வாதிகளும் பலநேரங்களில் புராணங்களை அறிவியலோடு குழப்பிக் கொள் கின்றனர். இந்தியாவில் அறிவியல் மனப்பான்மைக்கு முட்டுக்கட்டை போடுவது இங்குள்ள கல்விமுறை யாகும். கல்வியில் முறையான மாறுதல்களைக் கொண்டுவருவதன் மூலம், மக்களை கயிறுகளைக் கட்டிக் கொள்வதற்கு முன்பும், ஜோதிடம், நியூமராலஜி போன்ற மூடநம்பிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்பும் "ஏன்? எதற்கு?" என்ற கேள்விகளைக் கேட்கவைக்கலாம்.

அறிவியலும், அதன் ஆய்வுகளும் மக்களிட மிருந்து துண்டிக்கப்பட்டுத் தனித்து இயங்குகிறது. அறிவியலை அரசியல் படுத்தவேண்டும். அதுவே அறிவியலைப் போற்றும் விதமாகும்.

மாட்டின் சிறுநீரைப் பயன்படுத்துவதன் நன்மைகளைக் கண்டுபிடிப்பதற்கான அரசாங் கத்தின் அர்ப்பணிப்பு மிகவும் ஆபத்தானதாகும். அது அறிவியலுக்கும் அடிமுட்டாள்தனத்திற்கும் இடையே உள்ள கோட்டை முற்றிலும் அழிக்கும் அரசின் முன்னெடுப்பாகும்.

காசநோய்க்கான ஆராய்ச்சிநிதி குறைந்து விட்டது; ஆனால் அதேநேரத்தில் மாட்டுக் கொட்டகைகளுக்கு (*gow-shalas*) நிதிஒதுக்கீடு அதிகரித்துள்ளது.

இந்திய அறிவியல் காங்கிரஸ் (*Indian Science Congress*) என்ற நிகழ்வில் பழங்காலத்திலேயே இந்தியர்கள் ரதங்களைக் கொண்டு விண்வெளியில் பறந்ததாகவும், விநாயகரை எடுத்துக்காட்டாகக் கொண்டு இந்தியர்கள் பிளாஸ்டிக் சர்ஜரியில் நிபுணத்துவம் பெற்றிருந்ததாகவும் கூறியது அபத்தமாக இருந்தது.

**மக்களும் அரசியல்வாதிகளும் பலநேரங்களில் புராணங்களை அறிவியலோடு குழப்பிக் கொள் கின்றனர். இந்தியாவில் அறிவியல் மனப்பான்மைக்கு முட்டுக்கட்டை போடுவது இங்குள்ள கல்விமுறையாகும்.**

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம், புனேயில் உள்ள *"Indian Institute of Tropical Meteorology"* என்ற நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், இந்தியாவில் காற்று மாசுபாடுதல் காரணமாக இறப்பவர்கள் பற்றிய ஒரு ஆய்வறிக்கையை, ஜியோ ஃபிசிக்கல் ரிசர்ச் லெட்டர்ஸ் (*Geophysical Research Letters*) என்ற உலகப் பெருமை வாய்ந்த ஆய்விதழில் வெளி யிட்டனர். ஆனால் அந்த ஆய்வை, "இந்தியாவின் பெருமையைத் தாக்கும் முயற்சி" என்றுகூறி இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நிராகரித்தது. இதற்கு முரணாக, மோடி அவர்கள் டெல்லியில் நிலவும் காற்று மாசுபடும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானிகள் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

எவ்வித அறிவியல் கோட்பாடுகளின் அடிப் படையும் இல்லாத ஆயுர்வேதா, யோகா மற்றும் ஹோமியோபதி போன்ற உள்நாட்டு ஆராய்ச்சிக்கு அரசு முக்கியத்துவம் அளிப்பது வேதனை அளிக்கிறது.

உலகிலேயே இந்தியாவில் மட்டும்தான், அரசியலமைப்புச் சட்டத்தில் குடிமக்களின் அடிப் படைக் கடமைகள் என்றபிரிவில், ஒரு கடமையாக "அறிவியல் மனப்பான்மை, மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்க்கவேண்டும் ( *Article 51A, Sub-clause (h), on 'Fundamental Duties' :- "It shall be the duty of every citizen of India to develop scientific temper, humanism and the spirit of inquiry and reform)* என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இப்படிப்பட்ட ஒருநாட்டில் சமீபகாலமாக நிலவும் அனைத்தும் மிகவும் ஆபத்தானது. விஞ்ஞானம் உலகளாவியது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்தியா மற்ற நாடுகளுக்கு ஒரு நகைச்சுவைப் பொருளாகி விடக்கூடாது.

"வேதங்களிலேயே அனைத்து அறிவியல் கூறுகளும் உள்ளன" என்றுகூறி முட்டாள்தனமான போலி அறிவியல் கூற்றுகளை நாட்டு மக்களிடையே பரப்பி, நவீனஅறிவியல் ஆராய்ச்சிகளைப் புறந்தள்ளும் பா.ஜ.க. வைச் சேர்ந்த அனைவரையும் முகத்தில் அறைந்தாற்போல் இப்போராட்டம் நாடெங்கிலும் நடந்துள்ளது.

நன்றி : www.outlookindia.com, www.scroll.in , www.thewire.in

பொற்கொடி



சிறுகதை

# ஆதலினால் காதல் செய்வீர்

அய்யோ, அம்மா, அடிக்காதீங்க, அடிக் காதீங்க, விட்டுருங்களேன், வலிக்குதே.........

கரு, கருவென்று நீண்டு வளர்ந்த மனிதன் - கண்களில் சாதி வெறி சிவப்பேறிக் கிடக்க, கையில சாட்டையோடு..... சிவக்குமாரும், வள்ளியும் ஆல மரத்தில் கட்டப்பட்டு உடல் முழுக்க இரத்தம் சொட்டச் சொட்ட நடுங்கியபடியே... 'திடுக்'' என கண் விழிக்கிறான் சிவா.

சே! கனவு.. நல்லவேளை கனவுதான். மார்கழி மாதக் குளிரிலும் வியர்த்துக் கொட்டுகிறது. சிவா படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தான்.

ஆயிற்று அந்த சம்பவம் நடந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. ஏன்?ஏன்? இப்படி நானும் வள்ளியும் செய்த தப்பு தான் என்ன? தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தது எங்கள் தப்பா? வள்ளியும், சிவாவும் அத்தை மகளும் மாமன் மகனும் தான். ஒரே ஊர். மதுரைப் பல்கலைக்கழகத்தில் சிவக்குமார் எம்ஃபில் படிக்கிறான். வள்ளி முதுகலை முதலாமாண்டு படிக்கிறாள். இரண்டுபேரும் காதலர்கள் அல்ல. ஆனால் சிவாவும், வள்ளியும் தான் கணவன் மனைவி எனத் தீர்மானம் செய்தது அவர்கள் குடும்பம்.

இராசபாளையம் பக்கத்தில் ஓர் அழகான சிற்றூர் சின்ன ஓடைப்பட்டி. ஊர் முழுக்க ஒரே சாதியினர் 'பள்ளர்கள்' தான் வாழ்கிறார்கள். தெற்கே சாதிக்கலவரம் நடக்கும் போதெல்லாம் இவர்களுக்கு எந்தப் பாதிப்பும் தெரியாது. அதற்கு முக்கியக் காரணமே இந்த ஊரைச் சேர்ந்த பள்ளர்களைப் பிற சாதியினர் கீழ் சாதி என்று நினைத்தாலும் இவர்களிடம் எந்த வம்பும் வைத்துக் கொள்ள முடியாது. காரணம், இந்த ஊரில் பலரும் படித்தவர்கள்தான். அரசாங்க வேலையிலும் இருப்பவர்கள். நிலம், சொத்து சுகத்தோடு, வசதியாக வாழ்பவர்கள்.

நூறு வருசத்துக்கு முன்னால் கிறித்துவ மிசினரிகள் இங்கு வந்தபோது இந்த ஊர்ப் பள்ளர்களின் நிலைமை படுமோசமாகத்தான் இருந்தது. சாதி இந்துக்களுக்குப் பயந்து அடிமை யாய்த்தான் வாழ்ந்தார்கள். ஆனால் இங்கு வந்த கிறித்துவப் பாதிரிகளும், கன்னியாஷ்திரிகளும், பள்ளிக்கூடம் மருத்துவமனை ஆரம்பித்தார்கள். சிவக்குமார், வள்ளியின் தாத்தா, பிச்சைமுத்து மிசினரிகளின் அன்பாலும், அரவணைப்பாலும் படித்து ஆசிரியராகத் தன்னை உயர்த்திக் கொண்டார். கிறித்துவராகவும் மாறினார். கிறித்துவ மிசினரிகளின் புண்ணியத்தால் அந்த ஊர் மக்கள் கல்வியறிவு பெற்றனர். வேலைக்குப் போனார்கள். பொருளாதார வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்டார்கள். ஆனால் அவர்களைப் பிறசாதி யினர் இழிசாதியாய்த்தான் பார்த்தார்கள். அதைப் பற்றி அவர்கள் அக்கறை கொள்ளவில்லை.

வசதிபடைத்த 'பள்ளர்கள்' அடுத்த ஊரைச் சார்ந்த ஏழைப் பறையர்களை, சக்கிலியர்களைத் தங்களுக்கு அடிமையாய், இழிவாய்த்தான் நினைத்தார்கள் என்பதும் உண்மை.

இராசபாளையத்தைத் தாண்டினாலே மேல் சாதியினரின் அட்டூழியம் கொடிகட்டிப்பறக்கும். ஆனால், சின்ன ஓடைப்பட்டிக்காரர்கள் பண்ணை வேலைக்காக மேல் சாதியினரிடம் 'கை' கட்டி நிற்க வேண்டியதில்லை. ஆதிக்க சாதிகளைச் சார்ந்து வாழத் தேவையில்லை என்பதாலோ, என்னவோ இவர்கள் தங்களைப் 'பள்ளர்' எனக் கூறிக்கொள்வ தில்லை. அதிலும் இளைஞர்கள் தங்களை "தேவேந்திர குல வேளாளர்" என்று தான் நெஞ்சை நிமிர்த்தி சொல்லிக் கொள்கிறார்கள்.

இப்படியாக, இவர்கள் தங்களை உயர்ந்தவர்களாக நினைத்துக் கொண்டாலும்

அக்கம், பக்கத்து ஊர்களைச் சேர்ந்த 'மறவர்கள்' இவர்களைச் கீழ்சாதி என்றும், ஹரிஜன் என்றும் தான் சொல்லுவார்கள். எப்போதாவது வாய்க் கொழுத்துப்போன ஆதிக்க சாதி வாலிபப் பிள்ளைகள் அப்படி 'பள்ளர்' கீழ் சாதி என்று கிண்டல் செய்யும் போதும், அதை அவர்கள் எதிர்க்கும் போதும் தான், சாதிக் கலவரமாக வெடித்துப் பரவும். விளைவு சில உயிர்களைக் காவு கேட்கும். பெரும்பாலும் சாதிக் கலவரங்களில் மடிந்து மண்ணாய்ப் போகிறவர் கீழ் சாதி எனப்படும் உழைக்கும் மக்கள் தான்.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் சிவா வள்ளிக்குத் தன் 'சாதி' பற்றி ஒன்றும் வருத்தமோ, அக்கறையோ இருந்ததில்லை. பிற சாதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கூட அம்பேத்கர் மாணவர் மன்றத்தில் இருந்தார்கள். படிக்கும் மாணவர் ஆதிக்க சாதி, கீழ்சாதி எனப் பிரிந்தே இருப்பார்கள். அடிக்கடி 'சாதி'யைப் பற்றி விமர்சனங்களும், சண்டை சச்சரவுகளும் இருந்த வண்ணமே இருக்கும்.

'டேய்' சிவா, இன்னைக்கு சாய்ந்தரம் அம்பேத்கர் மாணவர் மன்றக்கூட்டம் இருக்கு, நீயும் வாயேன். கூப்பிட்டவன் வகுப்பு நண்பன் முத்துக் குமார் "நா வரலைடா ஒனக்கு வேற வேலையே இல்லையாடா?"

எதோ எங்க தாத்தா, பாட்டன் காலத்துல கீழ்சாதி மக்களை அடிமையா வச்சிருந்தாங்க உண்மை தான், இப்ப நல்லாத்தான் இருக்கோம்.

ஒழுங்காப்படிச்சு வேலைக்குப் போற வழியைப் பாருங்க, எப்பப்பாரு 'பெரியார்' அதச் சொன்னாரு, அம்பேத்கர் இதச் சொன்னாருனுட்டு...

கடுகடுப்பான் சிவா.

இருடி மச்சி! ஒரு நாளக்கி, புரிஞ்சுக்குவ, அப்ப நாங்க தான் ஒனக்குத் துணையா வரமுடியும். சிரித்துக் கொண்டே சொல்வான் முத்து.

சரிதான்! ஒருநாள் 'அந்த' உண்மை தன்னைச் சுட்டுப் பொசுக்கிய போதுதான் அவனுக்கு உறைத்தது. டேய்! எங்க ஊர்ல ஜல்லிக்கட்டு, சூப்பரா இருக்கும்டா, எல்லோரும் வாங்கடா, வகுப்புத் தோழன் பாண்டியும், மாடசாமியும் அன்பாய்த் தான் அழைத்தார்கள்.

மாணவ, மாணவியர் பட்டாளத்தோடு வள்ளியும், சிவாவும் அங்கே போனார்கள். இரண்டு நாள் பொழுது போனதே தெரியவில்லை. மாணவப் பட்டாளம் ஒன்று சேர்ந்ததால் மகிழ்ச்சிக்கு அளவேது.

மூன்றாம் நாள் தான் 'அது' நடந்தது. 23 வயது சிவாவையும், 20 வயது வள்ளியையும் நெஞ்சு பதற வைத்தது.

மாமா! மாமா! வாங்க மாமா. பாண்டி வந்தவரை வரவேற்று தன் நண்பர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறான்.

இவரு என் தாய்மாமன் செல்வம். பக்கத்து ஊரு, மாட்டுத் தரகரா இருக்காரு.

வாட்ட, சாட்டமாய் கருகருவென்றிருந்த செல்வம், கல்லூரிப் பிள்ளைகளைப் பார்த்ததும் உற்சாகமாகிப் போனார், எல்லோரையும் விசாரித்தார்.

வள்ளி, சிவாவை விசாரித்த போது தான் விசயமே வில்லங்கமானது.

சிவாத் தம்பி இராசபாளையம் பக்கம் சின்ன ஓடைப்பட்டின்னா சொன்னீங்க, அங்க நான் அடிக்கடி மாடுவாங்கப் போவன்ல...

அங்க யாரு மகன்...நீங்க...சிவா பெருமையாய் தன் தாத்தா, தந்தை பற்றிக் கூருகிறான்.... அவ்வளவு தான்...மாட்டுத் தரகர் செல்வத்தின் கருத்த மூஞ்சி மேலும் கருத்துப் போனது.

நீ, நீ...அந்த பள்ளப்பய....கீழ்சாதிக்காரன் மவனா....எலே பாண்டி ஒனக்கென்ன புத்தி கித்தி கெட்டுப் போச்சாலே, எதோ பெரிய படிப்பு படிக்கிற, படிக்கிற எடத்துல சரி...நம்ம வீட்டுக்குள்ள இப்படி கீழ் சாதிப் பசங்களக் கூட்டிக்கிட்டு வந்து....

மொதல்ல 'இதுகள' வெளியே அனுப்புறியா இல்ல....மாட்டுத் தரகர் செல்வம் மாடு போல குரல் உயர்த்திக் கத்துகிறார்.

மாணவர்கள் அத்தனை பேர் முகத்திலும் அவமானம் தெரிந்தாலும், சிவா, வள்ளி இருவரும் துடிதுடித்துப் போகிறார்கள். ஆடையின்றி, அம்மணமாய் முச்சந்தியில் நிற்க வைத்ததைப் போலக் கூசி, கூனிக் குறுகிப் போனார்கள். கண்களில் தாரை தரையாய் நீர் வழிய அவசர அவசரமாகத் துணிமணிகளை எடுத்து வைத்து கிளம்பத் தயாரானார்கள். அக்கா, அண்ணா சாப்பிட்டுப் போங்க அம்மா கூப்பிடுச்சு.....தகவலாய்ச் சொன்னான் பாண்டியின் தம்பி. திரும்பிப் பார்த்த சிவா-வள்ளி இருவரும் பதை பதைத்துப் போகிறார்கள். வீட்டிற்குள் மற்றவர்களுக்குப் பெரிய பெரிய சில்வர் தட்டுகளில் சாப்பாடு பரிமாறுகிறாள் பாண்டியின் தாய்.

வெளியே....

திண்ணையில்.....இரண்டு இலைகளில் இட்லி, பொங்கல்...சிவக்குமாருக்கும், வள்ளிக்கும்.

வள்ளிக்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. ஓவென்று கதறி அழுதபடித் தங்கள் பைகளை அள்ளிக்கொண்டு, சிவாவின் கரம் பற்றி இழுத்துக்கொண்டு, பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடந்தாள்...இல்லை....

ஓட்டமாய் ஓடி வருகிறாள்.கூடவே அத்தனை நண்பர்களும் பாண்டியையும், அவன் மாமனையும் முறைத்தபடியே தங்கள் உடைமைகளையும் அள்ளிக் கொண்டு சிவா, வள்ளியைப் பின் தொடர்கிறார்கள். ஓராயிரம் முறை நினைத்துப் பார்த்து விட்டான் சிவா. நினைக்க மனசு வலித்தது. என்ன குறை எனக்கு?பாண்டியை விட நன்கு படிப்பவன் சிவா. எல்லாவற்றிலும் பாண்டியை விடத் திறமையும் தகுதியும் வாய்ந்தவன் சிவா. இன்னும் சொல்லப் போனால் பாண்டி ஒல்லியாக இருப்பான். ஆனால் சிவா ஆளும் பார்க்க நன்றாக இருப்பான்.

சரி! குடும்பம் என்று எடுத்துக்கொண்டாலும்

சிவாவின் அம்மா, அப்பா இருவரும் ஆசிரியர்கள். அக்கா, அண்ணன் அனைவரும் படித்தவர்கள். நல்ல நிலையில் இருப்பவர்கள். ஆனால் பாண்டியின் பெற்றோர், குடும்பத்தார் யாருமே படித்தவர்கள் அல்ல. சரி! சொத்து, வசதி என்று பார்த்தாலும் பாண்டியை விட வீடு, நிலம் சொத்து என சிவா வசதியானவன் தான். பிறகு எப்படி?அவர் சிவா வீட்டில் நுழைய என்ன தகுதி எனக்கு இல்லை? நினைக்க நினைக்க கோபமும் ஆத்திரமும் பொத்துக் கொண்டு வந்தது சிவாவிற்கு. பாண்டியை விட நான் எதில் குறைந்தவன்? பாண்டி என்னை விட எதில் உசத்தி....தூங்காமல், சாப்பிடாமல், சோர்ந்து போன முகத்தோடு விடுதி அறையிலேயே அடைந்து கிடந்தான் சிவா.

என்னடா மாப்ள! பாண்டி வீட்ல வரவேற்பு தடபுடலா இருந்துச்சாம்ல...இப்பப் புரிஞ்சிருக்குமே 'சாதி'ன்னா என்னன்னு...திடுக்கிட்டு நிமிர்ந்தான் சிவா.

நக்கலாய் ஆரம்பித்தாலும், முத்துக்குமார் சிவாவின் மனநிலை அறிந்து மெதுவாக, ஆனால் அழுத்தமாக விசயங்களைச் கூறினான்.

முத்துக்குமார், தோளில் சாய்கிறான் சிவா.

சிவாவின் கண்ணீர் முத்துக்குமார் தோளில் பட்டு முதுகில் சிதறி வழிகிறது.

இல்லடா..., இல்லடா முத்து. என்னதான் நாங்க படிச்சாலும், ஊரையே ஆண்டாலும், இந்த ஊரு உலகம் எங்களை கீழ்சாதியாத்தான் பாக்குது. இந்த அவமானம் என்னோட போகட்டும்.

எனக்குப்பின்னால் எங்க சந்ததிக்கு இந்த "கீழ்சாதி" ங்கிற அடையாளம் வேணாம். அதுக்கு என்ன செய்யனும்னு சொல்லு முத்துக்குமார், சொல்லு நீ என்ன சொன்னாலும் நான் கேப்பேண்டா....

ரிலாக்ஸ்டா மச்சான்!

உணர்ச்சி வசப்பட்ட சிவாவை, ஆறுதல் படுத்துகிறான் முத்து. ஆமா! நம்ம கண்ணன் பிரண்டு தமிழ்ச்செல்வனைத் தெரியுமா? சிவாவிடம் கேட்கிறான் முத்து.

தமிழ்ச்செல்வனா...

எப்பவும் கலகலன்னு அரட்டையடிச்சிக்கிட்டு அவனச் சுத்தி ஒரு கூட்டம் இருக்குமே....

அவனே தான்...

அந்த தமிழ்ச்செல்வன் தான் ஒன் பிரச்சனைக்கு இல்ல....இல்ல....ஒங்க சமூகத்தோட பிரச்சனைக்கே அவன் தான் தீர்வு...

தமிழ்ச்செல்வனா? அவன் சாதாரண ஸ்டுடண்ட்; அவன் என்ன தீர்வு சொல்லப் போறான் புரியாமல் கேட்டான் சிவா...

அவங்க குடும்பக் கதையைக் கேட்டா....நீயே அசந்துருவ...

அவ்வளவு சுவாரஸ்யம்.அவன்ட்டப் போயி நீ என்ன சாதின்னு கேட்டுப்பாரு

ஏன் கேட்டா என்ன?

குழம்பிக் போகிறான் சிவா.

'சாதி'யான்னு விழுந்து விழுந்து சிரிப்பான் அந்தத் தமிழ். எனக்கு சாதியே இல்லைன்னு வேற சொல்லுவான். முத்து என்னடா சொல்ற....ஒன்னும் புரியலையே,

ஏன் தமிழ்ச்செல்வன் அம்மா, அப்பா இல்லாத அனாதையா?

நல்லா கேட்ட போ, அவன் குடும்பம் ரொம்பப் பெரிசுடா, அவனுக்கு எல்லா உறவுமே இருக்கு. நிதானமாக தமிழ்ச்செல்வனின் குடும்பக் கதையை அவிழ்த்து விட்டான் முத்து.

முத்துக்குமாரின் தாத்தா சங்கிலிக்கு சொந்த ஊர் கோவைப்பக்கம் ஒரு கிராமம். ஏணிப்படிகள் போன்ற சாதிப்படிக்கட்டில் கடைசி.... 'சக்கிலியர்' சாதியைச் சார்ந்தவர்தான் அவர். அய்ம்பதுகளில் பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்களால் ஈர்க்கப் பட்டவர். பணக்கார விதவை, பிராமணப் பெண்ணைப் பெரியார் தலைமையில் திருமணம் செய்தவர்.

5 மகள்கள் 4 மகன்கள் என்று குறையாத செல்வம் அவருக்கு. எண்ணெய் வியாபாரம் செய்து வந்தார். தன் எல்லாப்பிள்ளைகளுக்கும் வேறு வேறு சாதியில் தான் திருமணம் செய்து வைத்தார். அவர் குடும்பத்தில் போன தலைமுறையில் 11 சாதிகள் கலந்து விட்டன. அதன் பிறகு பேரன், பேத்திகள் அனைவருக்கும் வேறு வேறு சாதியில் தான் திருமணம். நம் நாட்டில் தான் சாதிகளுக்குப் பஞ்சமில்லையே. நம்ம தமிழ்ச்செல்வன் சங்கிலியின் கடைசி மகள் வயிற்றுப் பேரன்.

தமிழ்ச்செல்வனின் அம்மா ஒரு தலித் - பார்ப்பனப் பெண் கலப்பில் பிறந்தவர். தமிழ்ச் செல்வனின் அப்பா கவுண்டர். தமிழ்ச்செல்வனின் பெரியம்மா கணவர்கள் அதாவது, அவனது பெரியப்பாக்கள் எல்லாரும் வேறு வேறு சாதி. அம்மா கூடப்பிறந்த தாய்மாமனின் மனைவிமார்கள் அதாவது அத்தைகள் ஆளுக்கொரு சாதி.

**என்னடா மாப்ள! பாண்டி வீட்ல வரவேற்பு தடபுடலா இருந்துச்சாம்ல...இப்பப் புரிஞ்சிருக்குமே 'சாதி'ன்னா என்னன்னு...**

இப்ப சொல்லு நம்ம தமிழ் என்ன சாதி?

தமிழ்ச்செல்வனின் தாத்தா தன் பிள்ளை களுக்குப் பள்ளிக்கூடச் சான்றிதழில் சாதியைக் குறிப்பிட மறுத்திருக்கிறார். ஆனால் அப்போது அதற்கு வழியில்லையாம். பின்னாளில் 1973. பள்ளிச் சான்றிதழில் விருப்பம் இல்லையெனில் சாதி போடாமல் சேர்க்கலாம் என்று விதியைத் தெரிந்து கொண்டவர், தன் பேரன், பேத்திகள் அனை வருக்கும் 'சாதி' குறிப்பிடவில்லை. இப்போது மொத்த தமிழ்ச்செல்வனின் குடும்பத்திலும் பார்ப்பனர் முதல் கவுண்டர், வன்னியர், பறையர்,

சக்கிலியர் வரை சுமார் 30, 40 சாதிகள் பிண்ணிக் கிடக்கின்றன.

எந்தக் கிராமம் தன்னை இழிவாக நடத்தியதோ, அதே கிராமத்தில் சங்கிலி 80 வயதுக்கு மேல் திடகாத்திரமாக சொத்துசுகத்தோடு, மதிப்பு மரியாதையோடு வாழ்கிறார். தமிழ்ச்செல்வனின் தாத்தா உயிரோடு இருக்கும் வரை வேண்டுமானால் சங்கிலி என்ற தாழ்த்தப்பட்ட சாதிக்காரனின் வாரிசுகள் என்ற அடையாளம் இருக்கலாம். ஆனால் அவரது மறைவிற்குப் பிறகு, அவரது வாரிசுகளுக்கும் சாதி அடையாளம் ஏது?

நீண்டநேரம் பேசினான் முத்துக்குமார். சிவாவும், வள்ளியும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டார்கள்.

பாண்டியின் மாமாவால் ஏற்பட்ட வலி மறைந்தது, புதிய ஒளி தெரிந்தது.

வள்ளியும், சிவாவும் இப்போது முத்துக்குமார் போன்ற நண்பர்களோடு கலந்து தோழர்களாய்ச் சுற்றித் திரிந்தார்கள். அம்பேத்கர் மாணவர் மன்றம் வளர்ந்து விரிந்தது.

தோள்களில் ஜோல்னாப்பை, பைகளுக்குள் பெரியார் - மார்க்ஸ் - அம்பேத்கர்...

வள்ளி - சிவாவின் கண்களில் தெளிவு. மனதிற்குள் சாதி விலங்கை உடைத்தே தீருவோம் என்கிற இலட்சிய வெறி.

ஆண்டுகள் மூன்று உருண்டோடி விட்டன. வள்ளி எம்.ஏ.பி.எட்., படித்துவிட்டு வேலைதேடிக் கொண்டிருக்கிறாள். சிவாவிற்கு அரசு வேலை கிடைத்துவிட்டது. முத்துக்குமார் தனியார் கல்லூரியில் வேலை செய்கிறான். அவர்கள் முடிவு செய்தபடி நாளை திருமணம். சிவா அவர்களின் நட்பு வட்டத்திலுள்ள மலர்விழியைக் காதலித்துத்தான் மணக்கப்போகிறான். மலர்விழி உசிலம்பட்டி கள்ளர் சாதிப்பெண். வள்ளி-முத்துக்குமார் 3ஆண்டுகளாக காதல் செய்தவர்கள்.

முத்துக்குமார் செட்டியார் சாதியைச் சார்ந்தவன். சாதிகளை உடைத்து இவர்கள் செய்யும் திருமணங்களை, இந்தச் சமூகமும் அவர்களின் குடும்பமும் வேண்டுமானால் ஏற்காமல் போகலாம். நாளடைவில் ஏற்கவும் செய்யலாம்.

ஆனால் எங்கள் பிள்ளைகளுக்கு கீழ்சாதிப் பட்டம் இனி வேண்டவே வேண்டாம்.

சிவா - வள்ளியும் தங்கள் காதல் ஜோடிகளோடு மகிழ்ச்சியாக, மன உறுதியோடு, தங்கள் பெற்றோர்களைச் சந்திக்க இதோ ஊருக்கு புறப்படுகிறார்கள்.

**துணைவர் தேவை**

திருச்சியைச் சேர்ந்த 46 வயதான பெண்ணுக்குத் துணைவர் தேவை. எம்.பி.சி. – சட்டப்படி விவாகரத் தானவர். குழந்தை இல்லை

கல்வித்தகுதி – எம்.ஏ., எம்.பில்,

வாழ்க்கைத்துணைவரிடம் எதிர்பார்ப்பு-பெரியார் கொள்கையில் தீவிர ஈடுபாடு உடையவராய் இருத்தல் வேண்டும். தொடர்பிற்கு – 81109 69860

## கமிஷன் கிடைக்காததால் கொல்லப்பட்ட 71 குழந்தைகள்:



கோரக்பூரின் பாபா ராகவ் தாஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த வாரம் 71 பச்சிளங்குழந்தைகள் பலியான சம்பவம் நாடு முழுவதிலும் பரபரப்பையும் பெரும் துயரத்தையும் ஏற்படுத்தி உள்ளது. இம் மருத்துவ மனைக்கு பிராணவாயு 'புஷ்பா சேல்ஸ் பிரைவேட் லிமிடெட்' எனும் நிறுவனம் விநியோகம் செய்து வந்தது. இதற்கு மருத்துவ மனையில் இருந்து ரூ.68 லட்சம் தொகை நிலுவையில் இருந்துள்ளது.

இதை உடனடியாக செலுத்த வேண்டும் என அந்நிறுவனம் மருத்துவமனை நிர்வாகத்திடம் தொடர்ந்து கடிதம் மூலம் வலியுறுத்தி வந்துள்ளது. ஆனால், இந்த தொகை அளிக்கப் படாமையால் பிராணவாயு நிறுத்தப்பட்டு, 68 குழந்தைகள் உயிர் பலியானதாகக் கூறப்படுகிறது. அந்த நிறுவனம் மருத்துவமனை நிர்வாகத்தினருக்கு கூடுதலாக 2 சதவிகிதம் தொகை அளிக்காததால் தொடர்ந்து தொகை நிலுவையில் வைக்கப்பட்டதாக ஒரு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த நாளிதழின் செய்தியாளருக்கு பிராணவாயு விநியோகிக்கும் தனியார் நிறுவன அதிகாரிகள் வட்டாரம் கூறுகையில், 'எங்கள் விநியோக பிராணவாயுவிற்கான பில் தொகையில் 10 சதவிகிதம் கமிஷனாக அளிக்க வேண்டும் என எழுதப்படாத உடன்படிக்கை உள்ளது. இந்தக் கமிஷனை கடந்த ஆண்டு முதல் 2 சதவிகிதம் அதிகரித்து 12 ஆக தர வேண்டும் என நிர்வாகம் வலியுறுத்தி வந்தது. இது மிகவும் அதிகம் என்பதால் அதைத் தர மறுத்து வந்தோம். இந்த வருடம் பிராண வாயுவின் பயன்பாடும் அதிகம் என்பதால் ஏற்கனவே அவர்களுக்கு கிடைக்கும் கமிஷன் தொகையும் அதிகம் எனினும், எங்கள் தொகை அதிகமான அளவில் நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது.' எனத் தெரிவித்துள்ளனர்.

ஊழலை ஒழிப்பவர்கள் என்று ஒரு போலியான இமேஜை வளர்த்துவரும் இந்துத்துவக் கும்பலின் ஊழல் ஒழிப்பு யோக்கியதையை 71 பச்சிளங் குழந்தைகள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

நன்றி: தமிழ் இந்து நாளேடு

**இளையகுமார்,**
RGNIYD, ஸ்ரீபெரும்புதூர்

# புளியரம்பாக்கத்தில் தாழ்த்தப்பட்டோர் மீது ஜாதிவெறித் தாக்குதல்; படுகொலை

தாழ்த்தப்பட்டோர் மீத நடக்கும் தாக்குதல்கள் அன்றாடச் செய்திகளாகி விடும் ஆபத்தான சமுதாயச் சூழலில் வாழ்கிறோம். வரலாறு முழுவதும் நீண்ட நெடுங்காலமாக நடந்து வரும் இந்துத்துவத் தாக்குதல்தான் இது. ஒவ்வொரு முறையும், கொல்லப்படும் நபரின் பெயரும், கொன்ற கூட்டத்தின் பெயர்களும் மட்டும் அவ்வப்போது மாறுகிறது. ஆனால் காரணங்கள் ஒன்றே தான். நான் யாருக்கும் அடிமை இல்லை, ஆனால் எனக்கு ஒரு அடிமை இருக்கிறான் என்ற ஜாதியச் சிந்தனையும் அதை வளர்த்துவிடும் இந்து மதமும் தான் மிக முக்கியக் காரணங்கள்.



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகில் உள்ள கிராமம் புளியரம்பாக்கத்தில், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்விடங்களுக்குள் புகுந்து, பெண்களின் முன்னிலையில் அவர்களின் சகோதரர்களைக் கடத்திச் சென்று படுகொலை செய்து வீதியில் வீசிச்சென்றுள்ளனர் வன்னியர்கள்.

கடந்த 23.07.2017 அன்று இரவு ஏறத்தாழ 7.00 மணியளவில் இக்கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிக்கு 50க்கும் மேற்பட்ட வன்னியர்கள் கத்தி, அரிவாள், உருட்டுக்கட்டை உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களோடு சென்று அங்கிருந்த மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். பொருட்களை அடித்துச் நொறுக்கியுள்ளனர். வெங்கடேசன், ஆதிகேசவன் என்கிற இரண்டு இளைஞர்களைக் கடத்திச் சென்று கடுமையாகத் தாக்கி, கத்தியால் குத்தி 10 கி.மீ தொலைவில் உள்ள செல்லபெரும்புலிமேடு - மாங்கல் கூட்டுச்சாலை அருகே வீசி எறிந்துள்ளனர். இதில் வெங்கடேசன் இறந்து போனார். ஆதிகேசவன் சிகிச்சை பெற்று வருகிறார்.

தகவல் அறிந்த காட்டாறு குழு தோழர்கள் புளியரம்பாக்கம் பகுதிக்கு நேரடியாகச் சென்றனர். மக்களிடம் தாக்குதல் பற்றி முழுமையாகக் கேட்டறிந்தனர். இந்த ஜாதியத் தாக்குதல் தொடர்பாக, காஞ்சி மக்கள் மன்றம் தெளிவான ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையை அப்படியே வெளியிடுகிறோம்.

**காஞ்சி மக்கள் மன்றத்தின் அறிக்கை**

புளியரம்பாக்கம் கிராமம் செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். இந்தக்கிராமம் சேரி ஊர் என்று இரு பிரிவுகளாக உள்ளது. பெரும்பான்மை பறையர் சமூக மக்கள் வாழும் கிராமம் (மொத்த மக்கள் தொகை 2500, அவர்களில் 2000 பேர் பறையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

23.07.2017 காலை நேரத்தில் தலித் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த வன்னிய இளைஞர்கள் தமிழரசன் மற்றும் மணிகண்டனை மட்டும் தாக்கினர். தமிழரசன் மற்றும் ஒரு வன்னியர் இளைஞர் இருவரும் செல்லப்பெரும்புலிமே பகுதியைச் சார்ந்த வன்னியர் பெண்ணை ஒருதலையாகக் காதலித்து வந்ததால் தாக்குதல் தமிழரசன் மீது திட்டமிட்டு நடத்தப்பட்டது. ஆனால், அந்தப் பெண் இருவருக்கும் செவிமடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதலைத் திட்டமிட்டு நடத்திய அந்த வன்னிய இளைஞர், "எவ்வளவு துணிச்சல் இருந்தா எங்க பொண்ண லவ் பண்ணுவீங்க? நாய்ங்களா... உங்களக் கொன்னு போட்ருவோம்" என்று மிரட்டல் விடுக்கிறார். சண்டை முடிந்து தலித் இளைஞர்கள் வீடுதிரும்புகின்றனர். மாலை 5 மணி அளவில் இராஜேஷ் மற்றும் சரவணன் ஆகிய இரு வன்னிய இளைஞர்கள் சேரிக்குள் அதிவேகமாக பைக்குகளை ஓட்டி மக்களை அச்சுறுத்துகின்றனர். இருவரும் காலையில் நடந்த தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவரையும் மடக்கி பிடித்த மக்கள் காவல் நிலையத்தில் ஒப்படைக்க முயன்றனர். அப்போது சரவணன் தப்பி ஓடிவிட்டார். அதனால் இராஜேஷை மட்டும் செய்யாறு காவல் நிலையத்தில் SSI ஜோதி மற்றும் SI ரவி ஆகியோரிடம் ஒப்படைத்தனர். காவலர்கள் முன்னிலையிலும் இராஜேஷ் மக்களுக்கு மிரட்டல் விடுத்தார். காவல்துறை அதிகாரிகள் FIR எதுவும் பதிவு செய்யாமலேயே அவரை வெளியே விடுகின்றனர்.

மாலை 7 மணியளவில் சேரிக்கு இராஜேஷ்

*தன்னுடன் 60 வன்னிய இளைஞர்களுடன் வருகிறார். அவர்களில் பலர் தொழில் முறை ரவுடிகள் ஆவார்கள். இவர்கள் கையில் இரும்புக் கம்பி, கத்தி மற்றும் கட்டையுடன் வருகின்றனர். ஐந்து வீதிகளைக் கொண்ட புளியரம்பாக்கம் கிராமத்தை இந்தக் கொலைகாரக் கும்பல் சூறையாடியது. கண்ணில்பட்ட எல்லோரையும் தாக்கினர்.*

*இரண்டாவது வீதியில் முதல் வீட்டில் இருந்த கடையை அடித்து நொறுக்கினர். இரண்டாவது வீட்டில் கணபதி தலையில் பலத்த அடியுடன் தப்பித்தார். அவருக்குச் சொந்தமான மினி டோர் நொறுக்கபட்டது. மூன்றாவது வீதியில் இருந்த வெங்கடேசனைக் கும்பல் கத்தியால் குத்தியது. அவர் வெளியே இருந்த இரு சக்கர வாகனத்தை உள்ளே நகர்த்த முயற்சிக்கும் போது மாட்டிக்கொண்டார். அவரது தம்பி ஆதிகேசவனும் தாக்குதலுக்கு ஆளானார். கிராமம் முழுதும் தாக்குதல் தொடர்ந்தது. யுவராஜின் குழந்தை கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினர். 2-டாடா ஏசி வானங்களும், 10-பைக்குகளும், 1-கடையும், 10-வீடுகளும் முற்றிலும் அழிக்கப்பட்டன..*

*தாக்குதலின் முடிவில் கொலைகாரக் கும்பல் வெங்கடேசனையும் அவரது தம்பி ஆதிகேசவனையும் பைக்கில் ஏற்றிச் சென்றது. ஆதிகேசவன் காயங்களுடனும் வெங்கடேசன் பிணமாகவும் மங்கால் கூட்ரோட்டில் வீசப்பட்டனர். வெங்கடேசன் 33 இடங்களில் கத்தியால் குத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார். ஆதிகேசவன், விஜி மற்றும் தயாளன் ஆகியோர் செய்யாறு மருத்துவமனையிலும் கணபதி சென்னையிலும் சேர்க்கப்பட்டனர்*

*24.07.2017 காலையில் காஞ்சி மக்கள் மன்றம் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். அங்கு வந்த காவல்துறை உயர் அதிகாரி பொன்னி மற்றும் இதர அதிகாரிகள் FIR நகலினை மக்களுக்குக் காட்டினர்.*

***The police led by Tmt. Ponni, Superintendent of Police Tiruvannamalai along with four DSP's, severainspectors and sub-inspectors reached the spot. They informed the villagers that FIR (No. 583/2017 dt, 24.07.2017) has been filed and 9 attackers Remanded. We were given a copy of the FIR after we made repeated demands for it. The FIR has Named 32 persons. The sections under which the attackers were charged are: Section 294(b), 147, 148, 323, 324, 363, 307, 302, 506(ii) of IPC, Section 3(1) of TN Public Property (Prevention of Damage and Loss) Act 1992, Section 3(1) (c), 3(1)(r), 3(1)(t) of Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act 2015.***

*தாக்கியவர்கள் மஞ்சள் நிற டி சர்ட்ஐ அணிந்திருந்தனர். அதில் வன்னியர் சாதி சின்னத்துடன் வன்னியர் படை என்றும் எழுதப்பட்டு இருந்தது. கும்பலை வழிநடத்திய பாண்டி முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.*

நன்றி: கீதா சாருசிவம்

**இந்த வன்கொடுமை தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனர் தோழர் தொல்.திருமாவளவன் விடுத்த அறிக்கையிலிருந்து:**

தமிழக அரசு வழக்கம் போல இந்த கொடூரத்தை வேடிக்கை பார்க்காமல் சாதி வெறியர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மெத்தனமாகச் செயல்பட்ட காவல் துறையினர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்ட சாதி வெறியர்கள் அனைவரையும் கைது செய்து குண்டர்தடுப்புச் சட்டத்தில் சிறைப்படுத்த வேண்டும்.

உயிர்ப்பலியான வெங்கடேசன் குடும்பத்திற்கு ரூபாய் ஐம்பது இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். கடந்த ஆறேழு மாதங்களில் தமிழகத்தில் நடந்த சுமார் 40 படுகொலை சம்பவங்களில் சுமார் 30 பேர் தலித் சமூகத்தை சார்ந்தவர்கள் என்று புள்ளிவிவரம் சொல்லுகிறது. கடந்த ஒரு மாதகாலத்தில் மதுரை வடபழஞ்சி முத்தமிழன், மண்ணைச்சநல்லூர் கதிரேசன், புளியரம்பாக்கம் வெங்கடேசன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். எனவே, தமிழக அரசு தமிழகத்தில் நடைபெறும் சாதிய வன்கொடுமைகளைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

**- தொல். திருமாவளவன்.**

*புளியரம்பாக்கத்திற்குப் பல்வேறு அமைப்புகள் நேரடியாக விரைந்தன. செய்யாறு நகரில் கடந்த 04.08.2017 ல் விடுதலைச்சிறுத்தைகளின் நிறுவனர் தோழர் திருமாவளவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. சி.பி.எம் உள்ளிட்ட பல இயக்கங்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. எவிடன்ஸ் அமைப்புகள ஆய்வை நடத்தி, கோரிக்கைகளை முன் வைத்துள்ளது.*

இவை போன்ற எதிர்வினைகள் அனைத்தும் மிக மிக அவசியமானவை. அதேசமயம், இவை போன்ற ஜாதியத்தாக்குதல்களுக்கு அடிப்படையான இந்து மதத்தை விட்டு வெளியேறுவது என்ற பெரும் ஆயுதத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். அது பற்றி விவாதிக்கத் தொடங்கவேண்டும். குறைந்த பட்சம், இந்த இந்து மதம் நமக்கு எதிரானது. அது தான் நமது இழிவுக்குக் காரணமாக உள்ளது என்ற பரப்புரை முழுவீச்சில் தொடங்கப்படவேண்டும்.

கு.செந்தில்குமார்



# பார்ப்பன-பனியாக்களின் சுதந்திர நாள்

இந்தியா சுதந்திரம் பெற்று ஆகஸ்ட் 15 அன்று முதல் 70 ஆண்டு ஆகிறது. மன்னர் ஆட்சி முதல் ஜனநாயக ஆட்சி நடக்கும், இன்றைய நாள்வரை இந்து மதத்திலும், சமூகத்திலும், அரசியலிலும் பார்ப்பன, பனியாக்கள் ஆதிக்கம் செலுத்தி வருவதை வரலாறு நெடுகக் காணலாம். மக்கள் தொகையில் 3 சதவீதம் இருக்கும் பார்ப் பனர்கள் தமது ஆதிக்கத்துக்கு ஆபத்து வரும்போது அதை ஒட்டுமொத்தமாக, இந்து மதத்திலுள்ள அனைவருக்கும் ஆபத்து என்றும், மதத்திக்கும், சாஸ்திரங்களுக்கும் ஆபத்து என்றும் சொல்லி நம்மைத் திசை திருப்பி வெற்றி கண்டார்கள். சுதந்திரத்துக்கு முன்பும் பின்னரும் இந்த சூழ்ச்சி யான அணுகுமுறையை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். இந்தப் பார்ப்பன சூழ்ச்சியால், நாம் வீழ்ந்தது எப்படி? பார்ப்பனர்கள் ஆதிக் கத்தைத் தொடர்ந்தது எப்படி என்பவை பற்றி விரிவாகக் காண்போம்.

அதற்கு முன்பு அடிப்படையாக, நாம் எப்போது இந்தியர்கள் ஆனோம்? எப்போது இந்துக்கள் ஆனோம்? என்பதை முதலில் அறிந்துக்கொள்ள வேண்டும். இந்தியா என்னும் நாடு யாரால்? எப்படி உருவானது என்பதைப் பார்ப்போம்.

ஆங்கிலேயர்களின் கிழக்கிந்தியக் கம்பெனி ராபர்ட்கிளைவ் மற்றும் ஆண்ட்ரே பஸ்தாமாண்டி ஆகிய படைத்தலைவர்களின் தலைமையிலான படைகள் 1757 ல் நடந்த பிளாசிப்போர் மற்றும் 1764ல் நடந்த பக்சார் போர்களில் வெற்றி அடைந்தது. அதைத் தொடர்ந்து கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களைத் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சி நடத்தினர். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியா என்னும் பெயர் எப்படி வந்தது என்று எஸ்.வி.ராஜதுரையின் ‘இந்து - இந்தி - இந்தியா’ என்னும் நூலில் விவரிக்கிறார்

“சிந்துச் சமவெளியில் இருந்த ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை கிரேக்கர்கள் ‘இன்டஸ்’ என அழைத் தனர். அதன் திரிபாகவே பின்னர் அராபியர்களால் வழங்கப்பட்ட ‘இந்தியா’ என்ற சொல் உருவாயிற்று. இங்குள்ள முஸ்லீம்கள் அல்லாத மக்களைக் குறிக்க ‘இந்து’ என்ற சொல்லையும் அம்மக்கள் வாழும் நிலப்பரப்பைக் குறிக்க ‘இந்தியா’ என்ற சொல்லையும் அவர்கள் பயன்படுத்தினர். டச்சு, போர்ச்சுகீசிய, பிரெஞ்சு, பிரிட்டிஷ் காலனியாதிக்க வாதிகளால் கைப் பற்றப்பட்ட பகுதிகள் டச்சு இந்தியா, பிரெஞ்சு இந்தியா என்று வழங்கப்படலாயிற்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் படிப்படியாகத் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்த பகுதிகள் அனைத்தையும் பிரிட்டிஷ் இந்தியா என்றழைத்தனர்.

அத்தகைய பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரு காலத்தில் பர்மாவும் இலங்கையும் கூட இருந்தன பின்னர்தான் அவை பிரிந்து தனித்தனி காலனி நாடுகளாக அமைந்தன. பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சியின் கீழ் வராத ஆனால் அவர்களது மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட ஏறத்தாழ அறுநூறு சமஸ் தானங்கள் (Princely States)'இந்திய சமஸ்தானங்கள்' என்றழைக்கப் பட்டன. அவை 1947-க்கு பிறகே இந்திய ஒன்றியத் திற்குள் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு கடந்த 150 ஆண்டு காலத்தில் இந்தியா என்பது பல்வேறு வரையறைகளையும், பிரதேச எல்லைகளையும் கொண்ட ஒரு அரசமைப்பாகவே இருந்து வந்துள்ளது.''

*இந்து என்னும் சொல்லை ஆங்கிலேயர்தான் நமக்குக் கொடுத்தார்கள் என்பதைப் பற்றி காஞ்சி புரம் சங்கரமடத் தலைவர் சந்திரசேகரேந்திரர் கூறுவதைப் பாருங்கள்.*

''அவன் (வெள்ளைக்காரன்) மட்டும் இந்து என்று பெயர் வைத்திருக்கவிட்டால் ஒவ்வொரு ஊரிலும் சைவர், வைணவர், சாக்தர், முருகபக்தர், எல்லை அம்மனைக் கும்பிடுபவர் என்று நம்மைப் பிரித்துக் கொண்டு தனித்தனி மதமாக நினைத்துக் கொண்டிருப்போம். சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் ஒரே சாமி அல்ல. சிவன்தான் சாமி. விஷ்ணுவை சிவனுக்குப் பக்தன் என்று சொல்கிறார்கள் இவர்கள் இரண்டு பேரையும் எப்படி ஒரு மதம் என்று செல்வது? வெள்ளைக்காரன் நமக்கு இந்துக்கள் என்று பொதுப்பெயர் வைத்தானோ, நாம் பிழைத்தோம் அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது''

*(தெய்வத்தின் குரல் - பாகம் 1 பக்கம் 266 -2 267)*

*சந்திரசேகரேந்திரரின் நண்பர் அக்னி ஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் சந்திர சேகரேந்திரர் ஏற்பாடு செய்த திருப்பாவை, திருவெம் பாவை மாநாடுகளில் உரையாற்றியவர். அவர் தனது 'இந்து மதம் எங்கே போகிறது?' என்ற நூலில், ஆங்கிலேயர்கள் பிரிட்டிஷ் டாக்குமெண்ட்களில் முதன் முதலில் ZINDOO என்று பதிவு செய்து உள்ளனர். அதன் பின்னர் Hindu என்று பெயரிட் டனர் என்று குறிப்பிடுகிறார்.*

சிந்து நதிக்கரைக்காரன் என்ற அடிப்படை யிலேதான் நம்மை ZINDOO என எழுதினான் வெள்ளைக்காரன். இது உமக்கு எப்படித்தெரியும் என்று நீர் கேட்கலாம். நான் அந்த பிரிட்டிஷ் டாக்குமெண்ட்டை பார்த்திருக் கிறேன். படித்திருக்கிறேன்.

கும்பகோணத்தில் காவிரிக்கரையோரத்தில் எல்லாம் விளையும். அங்கே காவிரியின் மடியில் அறிவு விளையும், ஞானம் விளையும் ஓர் இடம் இருந்தது. அதுதான் என் ஆசான் ரகுநாதராவ் என்பவருக்குச் சொந்தமான நூலகம்.

ரகுநாதராவ், என்னைவிட வயதில் மூத்தவர். அந்தக் காலத்தில் பரோடா சமஸ்தானத்தில் திவானாக இருந்தவர். அவர் பதவிக்காலத்தில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தவர். அந்த ரகுநாதராவ் திவான் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் கும்பகோணத்தில் காவிரிக்கரை யோரத்தில் ஒரு லைப்ரரியை ஆரம்பித்தார். அங்கேதான் பிரிட்டிஷாரின் டாக்குமெண்ட்டுகளையும் பார்த்தேன்.

முதலில் நம்மைப்பற்றி ZINDOO என்று எழுதி வைத்திருந்தவன், காலப்போக்கில் இந்த உச்சரிப்பை மாற்றி Hindu என்று உச்சரித்தால், அவன் உச்சரித்ததையெல்லாம் படிப்படியாக அவனது டாக்குமெண்ட்களில் பதிவும் செய்து வைத்தான்.

இப்போது ZINDOO என்பது Hindu ஆகிவிட்டது. ஆக இப்போது நாம் நம்மை அழைத்துக் கொள்ளும் நமது மதத்தின் பெயரான 'ஹிந்து' என்ற பெயர் நாம் சூட்டிக்கொண்டதல்ல. நமக்கு அந்நியன் சூட்டிய பெயர் அதைத்தான் நாம் இன்று சூடிக்கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் இது Christian சூட்டிய பெயர். நம்மையெல்லாம் என்ன சொல்லி அழைப்பது என்று தெரியாமல் வெள்ளைக்கார Christian கண்டுப்பிடித்த - கண்டுக்கூடப் பிடிக்கவில்லை. தன் வாய்க்கு வசதியாக வந்ததை உச்சரித்ததைத் தான் நாம் இன்று நமக்கான அடையாளமாகச் சுமந்து கொண்டிருக்கிறோம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய வேதம், மநுஸ்மிருதி, சாஸ்திரம், புராணம், சுண்டைக்காய்? எல்லாவற்றையும் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டு நாம் அவற்றிலிருந்த ஒரு பொதுப் பெயரை எடுத்து சூட்டிக்கொள்ளவில்லை. சூட்டிக் கொள்ள முடியாது''

*(இந்து மதம் எங்கே போகிறது பக்கம்-331,332)*

*இந்துமதம், இந்தியா என பெயரிட்ட ஆங்கி லேயர்கள் அவர்களின் ஆவணங்களில் இந்து என்று குறிப்பிட்டதைப் பார்ப்பனர்களே ஒப்புக் கொண்டதைப் பார்த்தோம். பார்ப்பனர் மதத்தில், பார்ப்பனரல்லாத திராவிடர்களின் உரிமையை மீட்டெடுத்த தலைவர்களான தோழர் பெரியார் தோழர் அம்பேத்கர் இருவரும் இக்கருத்துக்களை வலுவாக உறுதி செய்கின்றனர்.*

''நம்முடைய தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆகட்டும் அல்லது சங்க காலப் பழைய ஆதாரங் களில் ஆகட்டும் அல்லது ஆரிய பாஷை ஆரிய நாகரீகப் பழக்க வழக்கங்களைக் கொண்ட வேதம், சாஸ்திரம், புராணம் சரித்திரம், முதலிய எவைகளிலாவது இந்து அல்லது இந்து மதம் என்கிற வார்த்தை இருக்கிறதா? சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் என்று சொல்லப் பட்டவர்களாவது, இம்மாதிரி வார்த்தையை உச்சரித் தாகவே காணக்கிடைக்கிறதா?

*- தோழர் பெரியார் குடிஅரசு 27.08.1927*

இந்துச் சமூகம் என்பதே ஒரு கட்டுக் கதைதான், 'இந்து' என்கிற பெயரே ஓர் அந்நியப் பெயர்தான். உள்ளூர் மக்களிடம் இருந்து தம்மை இனம் பிரித்துக் காட்ட முகமதியரால் அளிக்கப்பட்ட பெயரே இந்துக்கள்

என்பது. முகமதியாரின் படையெடுப்புக்கு முந்தைய எந்த சமஸ்கிருத நூலிலும், 'இந்து' என்கிற சொல்லே காணப்படவில்லை. இந்துக்களுக்குத் தாங்கள் பொது வானதொரு சமூகம் என்ற சிந்தனையே இல்லாது இருந்த காரணத்தால், தங்களுக்குப் பொதுவானதொரு பெயர் தேவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வில்லை. உண்மையில் இந்துச் சமூகம் என்ற ஒன்று இல்லை. இருப்பதெல்லாம் பல ஜாதிகளின் தொகுப்பே.

- தோழர்.அம்பேத்கர்

'ஜாதியை ஒழிக்கும் வழி' நூல்.

*இந்திய அரசியல் சட்டத்திலேயே 'இந்து' என்பதற்கு இலக்கணம் நிர்ணயிக்க முடியாமல் எதிர் மறையான இலக்கணமே பதிவாகியுள்ளது. "யாரெல்லாம் யூத, பாரசீக, கிறிஸ்துவ, இசுலாமிய மதத்தவர் இல்லையோ, அவர்களெல்லாம் இந்துக்கள்" என்கிறது சட்டம். சீக்கியர்கள், பவுத்தர்கள், சமணர்கள், நாத்திகர்கள் போன்ற அனைவரையும் இந்துக்கள் என்று தான் கூட்டுச் சேர்த்துக் கொள்கிறது.*

**யாரெல்லாம் யூத, பாரசீக, கிறிஸ்துவ, இசுலாமிய மதத்தவர் இல்லையோ, அவர்களெல்லாம் இந்துக்கள்" என்கிறது சட்டம்.**

*பார்ப்பனர்கள், ஆங்கிலேய அரசாங்கத்தில், சட்டமன்ற - நாடாளுமன்றப் பதவிகள், கல்வி, வேலைவாய்ப்புகள், தொழில்வாய்ப்புகள் போன்ற வற்றைப் பெறுவதற்காகவும் - இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களை விட அதிகமான எண்ணிக்கையில் இடம் பிடிப்பதற்காகவும், 'இந்து' என்று சொல்லப் படும் மதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களைக் கூட 'இந்து' அடையாளத்திற்குள் இழுத்தனர்.*

"பலதரப்பட்டவரையும் ஒன்றிணைத்த ஒரு பெரிய 'இந்து' சமுதாயத்தைக் கட்டுவதற்கான தேவை 19 - ம் நூற்றாண்டில் இருந்தது. அதிகாரத்தில் பங்கு கேட்பதற்கு அவரவருடைய சமூகத்தின் (Community) எண்ணிக்கைப் பலம் முக்கியமானதாக இருந்தது. அதிகாரப் பகிர்வு என்பது பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையாக இருந்தது. அரசாங்கப் பதவிகளுக்கான போட்டி கடுமையாக இருந்ததால் அவரவருடைய சமூகத்தின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை எழலாயிற்று.

"முஸ்லீம்களையும் கிறிஸ்தவர்களையும் விட எங்களுக்கு எண்ணிக்கைப் பலம் அதிகம், எனவே எங்களுக்குத்தான் அரசாங்கப் பணி களிலும் அதிகார மையங்களிலும் அதிக இடம் வேண்டும்" என்று கூறிய இந்துக்கள் (பார்ப்பனரும் பிற உயர் சாதியினரும்) தமது எண்ணிக்கையைப் பெருக்கிக்காட்டும் பொருட்டு பௌத்த, சமண, சீக்கிய நெறிகளைச் சேர்ந்தவர் களையும், பஞ்சமர், பழங்குடியினர் ஆகியோ ரையும் தமது சமூகத்தைச் சேர்ந்தவர்களாக்கினர். ஆரிய சமாஜத்தினர் மதம் மாறிச் சென்றவர்களை 'சுத்தி' செய்து இந்துக்களாக்கினர். இவ்வாறு பலதரப் பட்டவர்கள் 'இந்து' என்ற திணைக்குள் கொண்வரப் பட்டதால், 'இவர்தான் இந்து' என்ற திட்டவட்டமான வரையறையை யாராலும் வழங்க முடியவில்லை.

- 'இந்து - இந்தி- இந்தியா' நூல்

*நாம் இந்தியர்கள் ஆனதையும், இந்துக்கள் ஆனதையும் பார்த்தோம். இனி இந்த இந்திய சுதந்திரப் போராட்டம் எதற்காகத் தொடங்கப் பட்டது? யாரால் தொடங்கப்பட்டது என்பதைப் பார்ப்போம். தோழர் பெரியார் அதை விளக்குகிறார்.*

## ஜாதிக்கிளர்ச்சிதான் சிப்பாய்க்கலகம்

"இந்துமதத்தைக் காப்பாத்துகிறோம்ன்னா, இந்து மத, ஆதார சாஸ்திர சம்பிரதாயங்களைக் காப்புத்து வதாகத்தான் அர்த்தம். அதைத்தானே சொல்லுகிறான். மதத்திலே உயர்ந்திருக்கிறவன் பாப்பான். அதை மாட்டேன்னு சொல்ல முடியாதே? எந்த ஆட்சியும் இந்தப் பாப்பான் சொல்லுகிறபடி வச்சாதான் இந்த ஆட்சி நிலைக்கும்படி செய்தான்களே தவிர, இல்லாட்டா ஆட்சியைக் கவிழ்த்திடறான்.

1857 லிலே வெள்ளைக்காரன் ஆட்சியிலே சிப்பாய்க் கலகம் - அது என்னாச்சி? ஜனங்கள் ஏதோ ஒரு சுதந்திரக் கிளர்ச்சின்னு நம்பிகிட்டே இருக்கிறான். அது என்ன கிளர்ச்சி? ஜாதியைக் காப்பாத்தற கிளர்ச்சி. இதை நாங்கள் தான் சொல்லுகிறோம் அது 'ஜாதிக்கிளர்ச்சி'னு மத்தவனெல்லாம் அதைச் சுதந்திரக் கிளர்ச்சிங்கிறான். 1857-யை வச்சி நேற்று 1957-க்கு நூற்றாவது ஆண்டுவிழா கொண்டாடியிருக்கிறாங்க- அதைவச்சி நிறையப்புரட்டு, அது சாதிக்காக நடந்தது. அது எப்படி ஒழிஞ்சதுங்கிறதை ஒருவார்த்தை சொல்றேன் கேட்டுக்கங்க. 1857-ல் விக்டோரியா ராணியம்மா பதவிக்கு வந்தாங்க. அந்தப்பதவிக்கு வந்த உடனே இந்த (சாதிக்) கலவரத்தை அடக்கிறதுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறாங்க. என்னா அந்த வாக்குறுதி கொடுத்திருங்காங்கன்னா!

**மகாசாசனம்**

"இந்துக்களாகிய உங்களுக்கு - உங்கள் ஜாதி - மத - சாஸ்திர - புராண - இதிகாசங்களிலே, நாங்கள் பிரவேசிப்பதில்லை. அவைகளைக் காப்பாத்திக் கொடுக்கிறோம்".அப்படீன்னு வாக்குறுதி கொடுத் தாங்க. அதுக்குப்பேருதான் 'மகாசாசனம்' என்கிறது.

எனக்கு தெரியும். சீனிவாசச்சாரியார், சிவசாமி அய்யர் இவுங்க எல்லாம் எங்கள் சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டபிறகு ஜாதிகளைப் பத்தி பேச்சு வந்த காலத்திலே, இதே சீனிவாசச்சரியார் எழுதிக்கொடுத்திருக்கிறாங்க. கவர்மெண்டுக்கு. 1857 லே நீ கொடுத்தது வாக்குறு தின்னா? இப்போ எப்படி நடக்கிறே, சட்டசபையிலே சமுதாய சம்மந்தமாய்க் கேள்வி வந்தால் ராணி அம்மா

கொடுத்த வாக்குறுதி என்னாச்சி? இப்படியே ஜாதியைச் காப்பாற்றுகிற அரசாங்கத்தை ஆதரிக்கிறது. ஜாதிகளை ஒழிச்சி மக்களை சமத்துவமாக்கனும்னா அந்த அரசாங்கத்தை ஒழிக்கிறது. இதுதான் பார்ப்பனர் களுடைய தொழில்.

*3.11.1957 ஜாதி ஒழிப்பு மாநாட்டில் பெரியார் உரை (பெரியார் சிந்தனைத் திரட்டு-1.பக்கம் - 56, 57)*

*இந்தியாவில் ஆங்கிலேயர்களை எதிர்த்து அவர்கள் நுழைந்த காலத்திலிருந்தே போராட் டங்கள் நடைபெற்று வந்தன. ஆனால் 1857 சிப்பாய்க் கலகத்தைத்தான் சுதந்திரப் போராட்டத்தின் தொடக்கமாக வரலாறு பதிவுசெய்கிறது. சிப்பாய்க் கலகத்தைத் தொடங்கியவர்கள் பார்ப்பனர்கள். ஆனால் அதற்கு முன்பே போராடியவர்கள் முகமதி யர்கள், தமிழர்கள், பார்ப்பனர் அல்லாதவர்கள். பார்ப்பனர்களால் தொடங்கப்பட்ட போராட்டமே முதல் சுதந்திரப் போராட்டமாகப் பதிவாகி உள்ளது. இதுவே முதல் பார்ப்பனப் பித்தலாட்டம்.*

**பார்ப்பனர்கள் ஏன் ஆங்கிலேயர்களை எதிர்க்கத் தொடங்கினார்கள்?**

*1829-ல் வில்லியம் பெண்டிங் பிரபு உடன் கட்டை ஏறுதலைத் தடைசெய்தார். நரபலியைத் தடைசெய்தார்.*

*1834-ல் டல்ஹௌசி பிரபு காலத்தில், மெக்காலேவால் இந்தியாவில் முதன்முறையாக சமஸ்கிருதக் கல்விமுறைக்கு எதிராக அறிவியல், ஆங்கிலக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை, மும்பை, கல்கத்தா, ரூர்கி ஆகிய நகரங்க ளில் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.1854ல் விதவை மறுமணம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.*

*திருமலை நாயக்கன் ஆட்சி காலத்திலும் மனுசாஸ்திரப்படியே தீர்ப்புகள் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் காலம் வரை சாதர் திவானி அதாலத், சாதர் நிஜாமத் அதாலத் போன்ற நீதிமன்றங்களிலும் மனுசாஸ்திரமே நீதி வழங்கும் நூலாக இருந்தது. 1851-ல் மனுதர்மத்துக்கு எதிராக நீதிவழங்க கிரிமினல் சட்டம் உருவாக்கப்பட்டது.*

*இவற்றால் அதுவரை கல்வி, அரசுப்பணிகள் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்திவந்த பார்ப்பனர் கள் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்த 1885-ல் உருவாக்கப்பட்டதே காங்கிரஸ். ஆங்கிலேய ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் என்பவரால், பார்ப்பனர் களுக்கு ஒரு வேலைவாய்ப்பு மய்யம் போல உருவாக்கப் பட்டதே காங்கிரஸ். தொடக்கக் காலங்களில் ஆங்கிலேயே அரசை ஆதரித்து, நன்றி செலுத்தியே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*ஆனால் ஆங்கிலேய அரசு தொடர்ச்சியாக இந்த நாட்டுப் பூர்வீகக்குடிகளுக்கு உரிய பிரதிநிதித் துவங்களைக் கொடுத்து வந்தது. பார்ப்பனர்களின் பங்கு குறைந்தது. சாஸ்திர சம்பிரதாயங்களின் முக்கியத்துவம் குறைந்தது. அதனால் எழுந்தது தான் இந்திய விடுதலைப் போராட்டம்.*

*சிப்பாய்க் கலகமாக 1857-ல் பார்ப்பனர் களுக்கான விடுதலைப் போராட்டம்தான் தொடங்கப்பட்டது. தொடங்கியவர்களும் நானா சாகேப் பேஷ்வா, மங்கள் பாண்டே என்ற பார்ப் பனர்கள்தான். நானா சாகேப், மங்கள் பாண்டே யிடம் கூறகிறான்,*

“நமக்குத் தேவை நம் இனத்தின் - பார்ப்பனர்களின் விடுதலை தான். ஆனால், இதை வெளிப்படை யாகக் கூறினால், நமக்கு பெரும்பான்மை மக்கள் பலம் கிடைக்காது. எனவே ‘இந்திய விடுதலை’ என்று கூறினால் பெரும்பான்மை மக்கள் பலம் கிடைக்கும். எனவே இதை இந்திய விடுதலைப் போராட்டம் என்றே தொடங்கலாம்” எனப் பேசுகிறார். **(‘வால்கா முதல் கங்கா வரை’ நூல், முதல் பதிப்பு. பிற பதிப்புகளில் அந்த உரையாடல் நீக்கப்பட்டு விட்டது.)**

*முக்கியமாக, காங்கிரஸின் முதற்கட்டத் தலைவரான பாலகங்காதர திலகர் பற்றியும் அறிய வேண்டும். அவர் ஒரு மராட்டியப் பார்ப்பனர். சுயராஜ்யம் நமது பிறப்புரிமை என்றவர். 1895-ல் விநாயகர் சதுர்த்தியைத் தொடங்கியவர். 1896-ல் சிவாஜி விழாவைத் தொடங்கியவர். அவரது கேசரி எட்டில் எழுதியதைப் பாருங்கள்.*

“நாம் கேட்கும் சுயராஜ்யம் என்பது, வெள்ளையர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. எங்கள் நாட்டின் வேத, சாஸ்திரங்கள்தான் எங்களை ஆளவேண்டும். சுயராஜ்யம் வந்தால் மனுநீதியை அரசமைப்புச் சட்டமாகவே ஆக்கவேண்டும். ஆக்குவோம்” என 1917 லேயே பார்ப்பன வெறியோடு பேசியவர் பாலகங்காதர திலகர். *சான்று: 11.01.1917 கேசரி ஏடு.*

*பார்ப்பனர்கள் அவர்களது இந்து மத சாஸ்திர, சம்பிரதாயங்களைக் காப்பாற்றவும், ஆங்கிலேய அரசின் கல்வி, வேலைவாய்ப்புகளில், அரசு நிர்வாகங்களில் தங்களது ஆதிக்கத்தைத் தொடருவதற்காகவும் தொடங்கப்பட்டதுதான் இந்திய சுதந்திரப் போராட்டம்.*

*பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைத் தக்க வைப் பதற்காக நடந்த அந்தப் போராட்டத்தில் இந்து மதத் தத்துவங்களின்படி பார்ப்பன அடிமைகளான பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப் பட்டோரும் மிகத் தீவிரமாகப் பங்கேற்றனர். உலகிலேயே தம் இனத்தை ஆதிக்கம் செய்யும் இனத்துக்குத் தங்களை முழுமையான, நிரந்தரமான அடிமைகளாக்க - அடிமைகளே போராடிய வரலாறு என்பதுதான் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு.*

*நமக்கு எதிராகப் பார்ப்பனர்கள் தொடங்கிய இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி பெற்று விட்டார்கள் என்பதை ஆதாரங்களுடன் அடுத்த இதழில் காண்போம்.*

**- தொடரும்**

அதி அசுரன்



# ‘மெக்காலே’ எதிர்ப்பும், குலக்கல்வித் திணிப்பும்

மோடி தலைமையிலான இந்து - பார்ப்பன அரசு புதிய தேசியக் கல்விக்கொள்கை என்ற பெயரில், மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்கப்போகிறது. அநேகமாக பணமதிப்பிழக்க நடவடிக்கை போல அதிரடியாக இக்கொள்கை விரைவில் திணிக்கப்படலாம். டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் என்ற தமிழ்நாட்டுப் பார்ப்பனர் தலைமையில் உருவாக்கப்பட்ட இக்குழுவின் அறிக்கை விவாதத்திற்காக வெளியிடப்பட்ட நாள் முதல் தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கங்களும், தலித் அமைப்புகளும், கம்யூனிச இயக்கங்களும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. இக் காவிக்கல்விக்கொள்கையை எதிர்ப்பதை முழுநேரப் பணியாகவே மேற்கொண்டு வருகிறார் தோழர் பிரின்ஸ் கஜேந்திரபாபு. சி.பி.எம்., சி.பி.அய் கட்சிகளும் தீவிரமான எதிர்ப்பைக் காட்டி வருகின்றன.

### புதிய தேசியக் கல்விக் கொள்கையின் ஆபத்துக்கள்

2009-ஆம் ஆண்டிற்குப் பிறகு எட்டாம் வகுப்பு வரை மாணவர்களுக்கு தேர்வில் ஃபெயில் என்பது கிடையாது. ஆனால் இனி, 4-ஆம் வகுப்பிலேயே பாஸ் அல்லது ஃபெயில் என்று அறிவிக்கும் வடிகட்டும் முறை தொடங்கப்பட உள்ளது.

அனைத்துப்பள்ளிகளிலும் மூன்றாவது மொழி யாக சமஸ்கிருதம் இணைக்கப்பட்டு, ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு சமஸ்கிருத ஆசிரியர் நியமிக்கப் படுவார்.

8-ஆம் வகுப்புக்கு மேல் மாணவர்களுக்கு அவரவர் குலத்தொழிலுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதற்குரிய கல்வி மட்டும் வழங்கப்படும்.

பள்ளிகள் அருகிலிருக்கும் ஆசிரமங்களிலிருந்து வழிகாட்டுதல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பாடத்திட்டங்கள், பாடங்கள் அனைத்தும் என்.சி.இ.ஆர்.டி என்ற மத்திய அரசின் நிறுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் சென்றுவிடும்.

கல்வி என்ற துறை முழுமையாக மத்திய அரசின் பட்டியலுக்குள் நிரந்தரமாகச் சென்றுவிடும்.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் போல இனி ஐ.இ.எஸ் (இந்தியக் கல்விப் பணி) என்ற அதிகார மய்யம் உருவாக்கப் படும்.

### கல்விப்புரட்சியின் தலைவன் மெக்காலே

இதுபோன்ற பல அபாயங்கள் இந்தப் பார்ப்பனக் கல்விக்கொள்கையில் இடம்பெற்றுள்ளன. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வரும் வரை நமக்குக் கல்வியே கிடையாது. இராமாயணமும், மகா பாரதமும், வேதங்களும், சாஸ்திரங்களும் தான் இந்தியாவில் பாடங்கள். அதுவும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே அவை கிடைக்கும். பார்ப்பனர் அல்லாத மற்ற ஜாதியினர் அனைவருக்கும் அதுவும் இல்லை. எழுத்தறிவு பெற்றிடக்கூட நமக்கு உரிமை இல்லை. எனவே தான் நமது முன்னோர்கள் கைநாட்டுகளாக இருந்தார்கள்.

பாண்டிய, சேர, சோழ, தெலுங்கு, கன்னட, மராட்டிய மற்றும் வடநாடுகளின் அரசுகளிலும் இதேநிலைதான். அனைத்து நாடுகளிலும் வாழ்ந்த பார்ப்பனர்கள் மட்டுமே கல்வி கற்று வந்தனர். அந்நிலையை அடியோடி அழித்து, பார்ப்பனர் அல்லாதார் அனைவருக்கும் கல்வியைத் திறந்து விட்டவர் ஆங்கிலேயர் தாமஸ் பேபிங்டன் மெக்காலே. 1835-ல் மெக்காலே அறிமுகப்படுத்திய கல்விமுறையைத்தான் சில சில மாற்றங்களுடன் இன்னும் நாம் தொடர்ந்து வருகிறோம்.

கைநாட்டுச் சமுதாயத்தை - ஏடறியாத - எழுத்தறியாத சமுதாயத்தைப் படிக்க வைத்து, குறைந்த பட்சம் படிப்பாளர்களாக, அலுவலர்களாக, அதிகாரிகளாக மாற்றி - அரசு நிர்வாகங்களில் பார்ப்பனருக்கு எதிராகப் போட்டியிடும் நிலைக்கு உயர்த்தியது மெக்காலேயின் கல்விமுறைதான். வகுப்புரிமை, இடஒதுக்கீடு என்றெல்லாம் நாம் போராடிப் பெற்ற அனைத்து உரிமைகளுக்கும் மிகவும் அடிப்படையாக அமைந்தது அந்தக் கல்வி முறைதான்.

அந்த மெக்காலே முறை ஆரியப் பார்ப்பன - இந்து மத ஆதிக்கவாதிகளுக்கு எப்போதும் நஞ்சாகவே இருந்தது. ஆனால், பாட்டாளி மக்களுக்காக உழைப்பதாகக் கூறிக்கொள்ளும் சில கம்யூனிஸ்ட்டுகளுக்கும் நஞ்சாக இருப்பது அவர்கள் பூணூலிஸ்ட்டுகள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

அந்த மெக்காலே முறையில் இந்தக் காலத்திற் கேற்ப நிறைய மாறுதல்கள் அவசியம் தேவை. பின்லாந்தைப் போல, க்யூபாவைப்போல, முன்னேறிய ஐரோப்பியக் கல்வி முறைகளைப் போல நமது கல்விமுறை தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. பிரேசில் நாட்டுக் கல்வியாளர் பாவ்லோ ஃபிரையர் அறிவுறுத்தும் ஜனநாயக வகுப்பறைகள் போல இந்திய வகுப் பறைகள் மாற வேண்டும் என்பதுதான் நமது கனவும். மாற்றம் என்பது சமுதாயத்தை வளர்ச்சிப்போக்கில் மாற்றுவதாக இருக்கவேண்டும். மீண்டும் 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைக்குச் சமுதாயத்தை இழுத்துவிடுவதற்குப் பெயர் மாற்றம் இல்லை.

### ஆரிய-இந்து-பார்ப்பனக் குரலில் ஒரு கம்யூனிஸ்ட்

சாகித்ய அகாடமி விருது பெற்ற இலக்கிய வாதியும், சிறந்தகல்வியாளரும், பொதுவுடைமை வாதியுமான ஆயிஷா இரா.நடராசன் என்பவர் 'காந்தியக் கல்வியும் மெக்காலேவாதிகளும்' என்ற தலைப்பில், 27.07.2017 ல் இந்து ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையில், மெக்காலே பற்றிய பார்ப்பனவாதக் கோபத்தை அப்படியே வெளிப்படுத்தியுள்ளார். பிறப்பால் அவர் பார்ப்பனர் அல்லாதவராகவும் இருக்கலாம். மெக்காலே பற்றிய அவரது பார்வை, பார்ப்பன ஆதிக்கப் பார்வையாகவே உள்ளது. அது கம்யூனிச இயக்கங்களின் பார்வைதான் என்று யாராவது கூறினால், அந்த இயக்கங்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு உழைப்பவை என்பதற்கு இதுவும் ஒரு சான்று என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.

மெக்காலே காலத்துக்கு முந்தைய பார்ப்பன-குருகுல -குலக்கல்வி முறையைத்தான் அந்தப் பொதுவுடைமைவாதி விரும்புகிறார். எனவேதான் மெக்காலே முறையை எதிர்க்கிறார். இதோ அவரே இந்து ஏட்டின் கட்டுரையில் வெளிப்படையாக அறிவித்துக்கொள்கிறார்.

"புதிய பாடத்திட்டத்தை முன்மொழிய கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டு வல்லுநர்களின் கருத்து களுக்காக தமிழ்நாடே காத்திருக்கிறது. இன்றைய சூழலில் முற்றிலும் மறக்கப்பட்டுவிட்ட காந்தி முன்மொழிந்த சர்வோதய சமுதாயக் கல்வி குறித்த ஆழமான அலசல் தேவை என்று தோன்றுகிறது. நம் கல்வி குறித்த விவாதங்கள் திரும்பத் திரும்ப அயல்நாட்டு நடைமுறைகளையே சுற்றி வருவதைவிட, நம்மிடமே இருக்கும் மாற்றுக்கல்வி நடைமுறைகளைப் பரிசீலிக்க இது உதவும்..

... 1937 – ல் 'ஹரிஜன்' இதழில் நாட்டின் கல்வி குறித்து விரிவான ஒரு கட்டுரையை காந்தி எழுதினார். அதில் கல்விமுறையின் 10 பலவீனங்களைப் பட்டிய லிட்டிருந்தார். (அதில் முதல் பலவீனம் என்று காந்தி கூறியது) நமது மரபுக்கும் பண்பாட்டுக்கும் முரண் பட்டதாக இந்த மெக்காலே குமாஸ்தா கல்வி உள்ளது."

... இதற்கு மாற்றாக காந்தி முன்வைத்தது தனது சொந்த அனுபவங்களின் வழியே அவர் அடைந்த ஒரு கல்வி முறை. அதை 'சர்வோதயக் கல்வி' என்று அழைத்தார் காந்தி. 1937-ல் வார்தாவில் காங்கிரஸின் கல்வி மாநாட்டை அக்டோபர் 22 மற்றும் 23-ம் தேதிகளில் கூட்டினார் காந்தி. அது இந்தியத் தேசியக் கல்வி மாநாடு என்று அழைக்கப்படுகிறது. கல்வியாளர் டாக்டர் ஜாகிர் ஹுசைன் (பின்னாட்களில் இந்திய குடியரசுத் தலைவர் ஆனவர்) தலைமையில் இந்தியக் கல்வி குறித்து முடிவு செய்ய ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. 'வார்தா கல்வித் திட்டம்' அல்லது 'ஆதாரக் கல்விக் கொள்கை' அந்த கல்விக் குழுவால் பரிசீலித்து முன்மொழியப் பட்டது.

...காந்தியின் பெருமுயற்சியால் வார்தாவிலும் செகாவோனிலும் சர்வோதய மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. என்றாலும், விரைவில் அவை தோல்வியே கண்டன. மதபோதனை இல்லாத கல்வி என்பதால், இஸ்லாமிய மதரஸா கல்வியாளர்களும், சாதி பார்க்காத கல்வி என்பதால் இந்துத்துவவாதிகளும் காந்தியக் கல்வியை எதிர்த்தார்கள். ஆரம்பத்தில், காந்தியின் கொள்கைப் பிடிப்போடு செயல்படுவது போல ஈடுபாடு காட்டிய மெக்காலே வாதிகள் சர்வோதயப் பள்ளித் திட்டத்தைப் பகிரங்கமாகவே எதிர்த்தார்கள். வார்தா கல்விப் பிரகடனத்தைப் பரிசீலிப்போம்

... மாணவர்களை மாண்புமிக்கவர்களாக உருவாக்க முயன்ற வார்தா கல்விப் பிரகடனத்தையும் நம் தமிழகக் கல்விக் குழுக்கள் மனதில் கொள்ள வேண்டும்."

இவ்வாறு ஆயிசா நடராசன் எழுதியுள்ளார். தமிழ் இந்து ஏட்டில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் (www.tnsf.co.in) இணைய தளத்திலும், மின்னம்பலம் செய்தி இணைய தளத்திலும் இதேபோல, மெக்காலேவுக்கு எதிரா கவும், வார்தா கல்வித் திட்டத்தை ஆதரித்தும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இக்கருத்தை இடதுசாரிகளும் எதிர்ப்பார்கள் என்றும் கூறியுள்ளார். அப்படி வார்தா கல்வித்திட்டத்தை எதிர்க்கும் இடதுசாரிகள் இருந்தால் அவர்களை மனதாரப் பாராட்டுவோம்.

'வார்தா கல்வித் திட்டம்' என்பது வேறொன்றும் இல்லை. 1939 லும், பிறகு 1952 லும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இராஜாஜி பதவிக்கு வந்த போதெல்லாம் நடைமுறைப்படுத்தித் தோல்விக் கண்ட குலக்கல்வித் திட்டம் தான் அது.

1937-ல் காந்தி 'ஹரிஜன்' என்ற ஏட்டில் (31.07.1937) அந்த வார்தா கல்வித் திட்டம் குறித்து விளக்கி எழுதினார். அன்றிலிருந்து அந்த வார்தாக் கல்வித்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துக் களத்தில் இறங்கினார் தோழர் பெரியார். வார்தாக் கல்வித் திட்டத்தை பற்றி தோழர் பெரியார், பேசிய, எழுதியவைகளைப் பார்ப்போம்.

### வார்தா என்ற குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராகப் பெரியார்

"காந்தியார் விரும்பும் வார்தா கல்வித்திட்டம் அமுலுக்கு வந்து அவனவன் ஜாதித்தொழிலே அவனவனுக்கு கற்பிக்கப்படவேண்டும் என்கின்ற முறை ஆரம்பித்து விட்டால் பதினென் குடிமக்கள் கதி

அதோகதிதான் என்பதை எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆகவே இந்த நிலையில் இருக்கும் இந்தியர்களில் முஸ்லீம் களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இந்த பிறவியில் தீண்டாமையோ, இழிவோ ஒழிவது என்பது காந்தி ராஜ்யத்திலோ, காங்கரஸ் ராஜ்யத்திலோ சுலபத்தில் எதிர்பார்க்கக் கூடிய காரியமல்ல என்பதே நமதபிப்பிராயம்.''

“

**இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு மனுதர்மக் கம்யூனிஸ்ட்டுகள் என்றொரு பெயரும் உண்டு. அதை உறுதிப்படுத்திவிடக் கூடாது எனத் தோழமையுடன் கூறகிறோம்.**

*- தோழர் பெரியார் - குடி அரசு - 09.01.1938*

''பழைய காலத்து அரசர்களோ ஆரிய ஆதிக்கத்திற்கே அடிமையாய் இருந்ததால் ஆரியர்கள் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாது என்கிற ஆரியக் கொள் கையை அப்படியே காப்பாற்றிக் கொடுத்தவர்கள். அதனால் கல்வி பயிலுவதற்கு ஆரியர்களைத் தவிர மற்றவர்களுக்கு சிரத்தையேயில்லை. கடவுள்களே அரசாண்ட காலம் என்னும் ராமன், கிருஷ்ணன் காலத்திலும், அதன்பிறகு அரசாண்ட சேர, சோழ, பாண்டியர்கள் காலத்திலும் அதன் பிறகு பிரிந்து கிடந்த 56 தேச ஆட்சி இருந்த காலம் வரை பார்ப்பனர் தவிர மற்றவர்களுக்குக் கல்வியில்லை.

வேதத்தை உச்சரித்தால் நாக்கையறுக்க வேண்டும், கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றவேண்டும், மனதில் இருத்தினால் நெஞ்சை பிளக்கவேண்டும் என்பன போன்ற கொடிய தண்டனைகள் விதிக்கப் பட்டன.... வெள்ளைக்காரர்கள் ஆட்சி வந்த பிறகுதான் படிக்கக் கூடாதென்ற சமூகங்கள் படிக்க முன் வந்தது; இப்படிப் படிக்க முன் வந்ததன் பயனாக தாழ்த்தப் பட்டவர்களாக இதுவரை இருந்தவர்களும் பிற்போக் காகவும், கொடுமைப்பட்டவர்களாகவும், இருந்து வருகிற வர்களும் படிக்க முன் வந்து உத்தியோகத்துக்கு போட்டி போட ஆரம்பித்து விட்டார்கள். இதைப்பார்த்த காங்கரஸ்காரர்கள் இதன் தலையில் கைவைக்க யுக்தி செய்து தந்திரமாக வார்தா கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து திணிக்கப் பார்க்கிறார்கள்.''

*- தோழர் பெரியார், குடி அரசு -06.02.1938*

''தகப்பன் தொழிலை மகன் செய்யும்படியான கல்வியும் (வார்தா திட்டம்) சாஸ்திரங்களும் புராணங்களும் மனதில் பதியும்படி படிக்கத் தக்க பாஷையும் (ஹிந்தி) 26 உத்தி யோகங்களில் 19 உத்தியோகம் பார்ப்பனர்க்கு கொடுக்கும் (மிருக வைத்திய டாக்டர் வேலை) 'வகுப்பு வாதமற்ற' தன்மையும் 215 மெம்பர்கள் இருக்கத்தக்க சட்டசபையில் (சென்னை) ஒரு மனிதர் சொல்கிறபடியே எல்லோரும் தலை வணங்க வேண்டும் என்கின்ற 'ஜனநாயக சுதந்தரமும்' ஏற்படுத்தத் தக்க, இருக்கத்தக்க ஆட்சியை கொண்டு வரவும் நிலைக்க வைக்கவும் தேசியவாதிகள் என்பவர்கள் பாடுபடுவதும் அதற்கு எதிரிடையானவர்களை தேசத்துரோகி வகுப்பு வாதி என்பதுமான காரியம் எதுவாயிருந்தாலும் அதை ஒழிக்க பாடுபடாமலோ அத் தொண்டில் உயிர்விடும் நிலை பெறாமலோ ஒரு வினாடியும் இரோம் என்பதை கண்டிப்பாய் தெரிவித்துவிட ஆசைப்படுகிறோம்.''

*-தோழர் பெரியார்,குடி அரசு - 20.02.1938*

I''பிரிட்டிஷ் அரசாங்கத்தால் உங்களுக்கு ஏற்பட்ட நன்மையும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் ஏற்பட்ட நன்மையும் அடியோடு ஒழிந்து போகும்போல் இருக்கிறது. புதிய அரசியல் உங்கள் சமூகத்துக்கு எமனாய்த் தோன்றி இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். உங்கள் கல்வி ஒழிந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள். வார்தா கல்வித் திட்டப்படி இனி உங்கள் ஜாதித் தொழில்கள் என்பவை புதிப்பிக்கப்படப் போகின்றன. அப்படியானால் உங்கள் தொழில் என்ன?''

*- தோழர் பெரியார், குடி அரசு -23.10.1938*

I''ஏதோ சில பார்ப்பனரல்லாத ஆசிரியர்களின் தன் மதிப்போடு விளங்கும் ஆசிரியர்களின் - பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியின் காரணமாய் சில பார்ப்பனரல்லாத பிள்ளைகள் கல்வி கற்று முன்னுக்கு வர மார்க்கம் இருந்து வருகிறது. இதை ஒழிக்கத்தான் இன்று ''மகாத்மா'' பட்டத்தை வேண்டாம் என்று கூறிக் கொள்ளும் பார்ப்பன தாசராகிய தோழர் காந்தியார் வினோத திட்டமாகிய வார்தா திட்டத்தை உண்டு பண்ணியிருக்கிறார்.

வார்தா திட்டம் பார்ப்பனரல்லாத மக்களின் கல்வியின்மையை நிலைக்கச் செய்யவே அவனவன் தன்தன் குலத்தொழிலை செய்து பார்ப்பனர்களுக்கு உழைத்துப் போடவேண்டும். பார்ப்பனர்கள் மட்டும் பார்ப்பனரல்லாதார் உழைப்பில் கொழுக்க வேண்டும் என்று செய்யப்படும் சூழ்ச்சிதான் யென்று நாம் பன்முறை விளக்கியிருக்கிறோம்.''

*- தோழர் பெரியார்,குடி அரசு -30.10.1938*

## குலக்கல்வித் திட்டத்துக்கு எதிரான பெரியாரின் போராட்டங்கள்

*இவையெல்லாம் வார்தா கல்வித் திட்டம் என்ற குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து, தோழர் பெரியார் பேசியவற்றில் ஒருசிலவரிகள் மட்டுமே. 1939-ல் இராஜாஜி இந்தத் திட்டத்தை அமல்படுத்திய போது கடுமையாக எதிர்த்தார் பெரியார். இராஜாஜி பதவி விலகியதைத் தொடர்ந்து அப்போதைக்கு இத்திட்டம் கைவிடப்பட்டது.*

❙ மீண்டும் 1952 ல் தமிழ்நாட்டு முதலமைச்சராக இராஜாஜி பதவியேற்றார். பதவியேற்றவுடன் கிராமப்புறங்களில் இருந்து 6000 தொடக்கப் பள்ளிகளை இழுத்து மூடினார். மீதியுள்ள பள்ளிகளில் பாதி நேரம் கல்வியும், மீதி நேரம் அவரவர் தமது ஜாதியின் குலத்தொழிலைச் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

❙ "வர்ணாசிரமுறையை ஜனநாயகத்தின் பெயரால் நிலைநாட்ட முயற்சி செய்கிறார் இராஜாஜி, இதோ கடைசி சிகிச்சையாக கணபதி உருவபொம்மையை உடைக்கும் போராட்டம்" என கணபதி உருவ பொம்மை உடைப்புப் போராட்டத்தை அறிவித்தார்.

❙ 27.5.1953 ல் புத்தர் விழாவைக் கொண்டாடி அதன் இறுதியாக கணபதி உருவ பொம்மையை உடைத்து மண்ணோடு மண்ணாக்கி விடுங்கள், நானும் திருச்சியில் உடைப்பேன் என அறிவித்தார். திட்டமிட்டபடி விநாயகர் பொம்மை உடைப்புப் போராட்டம் நடைபெற்றது. சென்னை மற்றும் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் காவல்துறை கடுமையாக தடியடியை நடத்தியது.

❙ 13.6.1953 ல் திராவிடர்கழக நிர்வாகக்குழு கூட்டியது. குலக்கல்வி எதிர்ப்புக்காக ஜுலை 14 முதல் சட்டசபை மறியல் போராட்டம் நடத்துவது என முடிவுசெய்யப் பட்டது. 20 தேதி முதல் தமிழ்நாட்டின் மற்ற பகுதி களிலும் மறியல் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

❙ சட்டசபை மறியல் தொடங்கிய நாளில் இருந்த அரசு போராளிகளை கடுமையாக ஒடுக்கியது. தி.மு.க வின் முக்கியத் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். சென்னையில் மட்டும் தி.க தோழர்கள் 1700 பேர் கைது செய்யப்பட்டனர். தூத்துக்குடி, கல்லக்குடி ஆகிய ஊர்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 10 தோழர்கள் வீரமரணம் அடைந்தனர். காவல்துறை தாக்குதலால் 50 தோழர்கள் படுகாயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். 10 தோழர்கள் கை, கால்களை இழந்தனர். சென்னை நீங்கலாக தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் நடந்த மறியலில் 2450 திராவிடர் கழகத் தோழர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்.

❙ ஆச்சாரியார் ஆட்சியின் துப்பாக்கிச்சூடுகளுக்கும், தாக்குதல்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்க 24.7.1953-ல் நாடெங்கும் கடையடைப்பும், வேலைநிறுத்தமும் நடத்தவேண்டுமென பெரியார் அறிவித்தார். திட்டமிட்ட படி போராட்டங்கள் நடைபெற்றன. முதலமைச்சர் இல்லமும் முற்றுகை இடப்பட்டது.

❙ விநாயகர் உடைப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து கிருஷ்ணன் பொம்மை உடைப்புப் போராட்டத்தையும் அறிவிக்கப்போவதாக பெரியார் அறிவித்தார்.

❙ 1953 டிசம்பர் 2 மற்றும் 3 தேதிகளில் மதுரை யிலிருந்தும், ஈரோட்டிலிருந்தும் குலக்கல்வி எதிர்ப்புப் பிரச்சாரப் படை கிளம்பும் என அறிவித்தார்.

❙ 1954 ஜனவரி 24 இல் ஈரோட்டில் குலக்கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாடு கூட்டப்பட்டது. தொடர்ச்சியாக தமிழ் நாடு முழுவதும் குலக்கல்வி எதிர்ப்பு மாநாடுகள் நடத்தப் பட்டன. பெட்ரோலும் தீப்பந்தமும் தயாராக இருக்கட்டும் என பெரியார் அறிவித்தார். கடும் போராட்டத்திற்கு மக்களைத் தயாரிக்கும் பரப்புரைகள் நாடுமுழுவதும் பரபரப்பாக வெகுவாக நடை பெற்று வந்தன.

> **" மோடி தலைமையிலான இந்து - பார்ப்பன அரசு புதிய தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில், மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்கப்போகிறது. அநேகமாக பணமதிப்பிழக்க நடவடிக்கை போல அதிரடியாக இக்கொள்கை விரைவில் திணிக்கப்படலாம்.**

❙ மார்ச்சில் நீடாமங்கலம் ஆறுமுகம் தலைமையில் நாகையில் இருந்து குலக்கல்வி எதிர்ப்புப் பிரச்சாரப் படை பயணத்தைத் தொடங்கியது. சென்னையை நோக்கிப் பயணம் தொடங்கியது. படை சென்னையை அடையும் முன்பே இராஜாஜி உடல்நலமில்லை எனக் கூறி பதவியிலிருந்து விலகினார். மார்ச் 30 இல் பதவி விலகினார். ஏப்ரல் 14 இல் காமராசர் பொறுப்பேற்றார். ஏப்ரல் 18 ஆம் நாள் குலக்கல்வித்திட்டத்தை நீக்குவதாக அறிவிப்பு வெளியானது.

*இப்படி தொடர்ச்சியாகக் கடுமையான போராட்டங்களை நடத்தி - பல தமிழர்களின் உயிர்களைப் பலிகொடுத்துத்தான் குலக்கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டது. அதை புதிய தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரில் மீண்டும் நடைமுறைப் படுத்த ஆர்.எஸ்.எஸ் கும்பல் முடிவெடுத்திருக்கிறது.*

*ஆனால், ஆர்.எஸ்.எஸ் ஸின் புதிய தேசியக் கல்விக் கொள்கைக்கு மாற்றான கல்வி முறை என்ற பெயரில் மீண்டும் அதே வார்தா - குலக்கல்வித் திட்டத்தையேக் கொண்டு வர வேண்டும் என்று ஒரு கம்யூனிசவாதியே எழுவதும், பேசுவதும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் அதை ஆமோதித்து இணையதளத்தில் வெளியிடு வதும் மிகவும் கண்டிக் கத்தக்கது.*

*புதிய கல்விக்கொள்கைக்கு எதிராகக் களத்தில் நிற்கும் தோழர் பிரின்ஸ் கஜேந்திரபாபு மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தினர், வார்தா - குலக் கல்வித்திட்டத்திற்கு ஆதரவான பார்ப்பனச் சார்புப் போக்கைத் தொடக்கத்திலேயே அழித்துவிட முயற்சி செய்யவேண்டும். இந்தியக் கம்யூனிஸ்ட்டு களுக்கு மனுதர்மக் கம்யூனிஸ்ட்டுகள் என்றொரு பெயரும் உண்டு. அதை உறுதிப்படுத்திவிடக் கூடாது எனத் தோழமையுடன் கூறுகிறோம்.*

ராயல் சேலஞ்ச்

# சாவித்திரி, நளாயினி, கண்ணகி வரிசையில்

# தரமணி तरमणि TARAMANI



# ஆண்ட்ரியா...

பெண்விடுதலை என்ற தளத்திலேயே மனமாரப் பாராட்ட வேண்டியதற்கான காரணங்களும்- கடுமையாக எதிர்க்க வேண்டியதற்கான காரணங்களும் ஒன்றாக நிற்கும் படம் தரமணி.

சுயமாக முடிவெடுத்து வாழும் ஒரு பெண்ணின் மனநிலை - அவரது உடல்மொழி - உடைமொழி - நடைமொழி - முகத்தில் வெளிப்படுத்த வேண்டிய உணர்ச்சிகள் - வெளிப்படும் சொற்கள் என ஒரு விடுதலைப் பெண்ணைக் கண்முன் காட்டுகிறார் ஆண்ட்ரியா.

திருமணம் ஆன அல்லது கமிட்டட் ஆன பணி புரியும் பெண்கள் தங்கள் துணைவரிடம் இருந்து வாங்கும் சந்தேகக் கேள்விகள், சந்தேகப் பார்வைகள், பாதுகாப்பு என்ற போர்வையில் பெண்ணின் சமூகவலைப் பக்கங்களையும், செல்களையும் நோட்டம் விடும் புத்தி, இவள் நமக்கே சொந்தமான ஒரு ஜடம், ஒரு பொருள் என்ற சிந்தனை என்று ஆண்களின் அனைத்து மனநோய்களையும் அட்டகாசமாகக் கொளுத்திப் போட்டுள்ளனர்.

மிக மிக முக்கியமாக, ஆண்ட்ரியாவுக்கும் அவரது துணைவருக்கும் இடைவேளை நேரத்தில் வரும் பிரிவுச் சண்டை ஆண்கள் அனைவருக்கும் ஒரு பாடம். காதலனாக இருப்பவன் கணவன் என்ற இடத்திற்கு வரும் போது - அவனுக்குள் உறங்கிக் கிடந்த மிருகங்கள் விழித்துக்கொள்கின்றன. அது வரை அவனுக்குச் சமூகம் சொல்லிக் கொடுக்கப் பட்ட கற்பு, கலாச்சாரங்கள் அந்த மிருகங்களை வழிநடத்துகின்றன. அவற்றைத் துணிச்சலுடன் எதிர்த்து அடித்து விரட்டுகிறார் ஆண்ட்ரியா. அந்த சண்டைக் காட்சியை ஆண்ட்ரியா - வசந்த்ரவி - தேனி ஈஸ்வர் - ராம் கூட்டணி மிக அருமையாக நடத்திக் காட்டி இருக்கிறார்கள்.

“அவன்கூடப் படுக்கனுமா? வேண்டா மாங்கறதை முடிவு பண்ண வேண்டியது நான் தான்... அவன் இல்ல...” என்பது போன்ற ‘ஷார்ப்பான’ வசனங்கள் பல இடங்களில் வருகின்றன. பெரும்பாலான வசனங்கள் ‘ஷார்ப்புக்கும்’ மேல...

**மார்ஃபிஸைப் போட்டு மட்டையாவது மட்டுமே மகளிர் விடுதலையா?**

ஆண்களின் *homosexuality*, பெண்களின் *Masturbation* பற்றியெல்லாம் பேசப்படுகிறது. ஒரு பெண் ஸ்டைலாக சிகரெட் பத்த வைப்பது, புகைப்பது, அதைப் பார்த்துப் பதறும் ஆணின் கேள்விகள், அதற்கு ஆண்ட்ரியாவின் பதில்கள், *Morpheus Brandy, Full Bottle* -ஐ ராவாகக் காலி பண்ணுவது போன்றவை வரவேற்கத்தக்க காட்சிகள்.

இப்படியெல்லாம் பாராட்டிவிடலாம் என்றால், தொடக்கம் முதல் இறுதி வரை கதையுடனேயே வரும் பல காட்சிகள் கடுமையான கோபத்தை உண்டு பண்ணுகின்றன.

படத்தின் இறுதியில் சரக்குபாட்டில்களை ஆண்ட்ரியாவின் மகன் மொத்தமாகத் தேடி எடுத்து வெளியே போடுகிறான். ஒரு தாய் தண்ணி அடிக்கக் கூடாது என்று மகனின் பார்வையில் விளக்கப் படுகிறது. மார்ஃபியஸைப் போட்டு விட்டு மட்டையாவது மட்டுமே மகளிர் விடுதலை அல்ல. அதேசமயம் அது ஒழுக்கக்கேடும் அல்ல. ஆனால், அது தவறு - ஒழுக்கக்கேடு என்றுதான் முடிக்கிறார் இயக்குநர்.

**வீட்டு வேலைகள் பெண்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டதா?**

நட்பு என்ற இடத்திலிருந்து, காதலன், கம்பேனியன் என்ற நிலைக்கு கதாநாயகன் வருகிறான். அந்த நேரத்தில், நாயகியை அலுவலகத்திற்குக் கொண்டு போய் விடுவது, மாலையில் பிக்-அப் பண்ணுவது, வீட்டு வேலைகள் சிலவற்றைச் செய்வது, குழந்தையைப் பராமரிப்பது போன்ற வேலைகளைச் செய்கிறான். அவை கிண்டலாகவே காட்டப்படுகிறது.

இதே வேலைகளை ஒவ்வொரு பெண்ணும் பல நூற்றாண்டுகளாகச் செய்து வருகிறாள். அந்த வரலாறு இயக்குநரின் கண்ணுக்குத் தெரியவில்லையா? வீட்டைப் பராமரிப்பது, குழந்தைகளைப் பராமரிப்பது இவை எல்லாம் பெண்ணுக்கே உரியவை என்ற ஆணாதிக்கச் சிந்தனைதான் ராம் அவர்களைக் கிண்டல் செய்யச் சொல்லியுள்ளது. 'ஹவுஸ் ஹஸ்பெண்ட்கள்' பற்றி 2015 ல் 'கி அன் கா' என்று இந்தியில் ஒரு படம் வெளியானது. அதையெல்லாம் ராம் பார்க்க வேண்டும்.

### செல்போனில் அரட்டை அடிக்கும் பெண்கள் ஒழுக்கம் கெட்டவர்களா?

குறிப்பாக, பெண்கள் ஒழுக்கமில்லாதவர்கள், எப்பொழும் ஆணின் உறவுக்காக ஏங்கிக் கிடப்பவர்கள் என்ற தவறன கருத்தை மிகவும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார் ராம். அதிலும் திருமணம் ஆன பெண்கள் கணவனுக்குத் தெரியாமல் வேறு ஏதோ ஒரு ஆணுடன் உடல் உறவுக்காக மட்டுமே தொடர்பு வைத்துள்ளார்கள். பெரும்பாலும் சபலப்புத்தி உள்ளவர்கள் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இதைத்தான் இந்து மதத்தில் பார்ப்பனர்களின் ஆயுதமான மனுசாஸ்திரமும் கூறுகிறது.

"மாதர்கள் நிலையான கற்பு இல்லாதவர்கள். நிலையான மனம் இல்லாதவர்கள். நம்பக் கூடாதவர்கள். இந்தத் தன்மைகளை இயற்கையாக உடையவர்கள்."

-(மனுசாஸ்திரம்: 9 :15)

"மாதர்களின் சுபாவமே மனிதர்கட்கு சிருங்கார சேஷ்டைகளினால் தோஷத்தையுண்டு பண்ணும்."

- (மனுசாஸ்திரம்:2 : 213)

இப்படி பெண்களைப் பற்றி இந்து மதம் இழிவாகக் கூறியுள்ளதைத்தான் நவீனத் தொழில் நுட்பங்களின் உதவியோடு இயக்குநர் ராம் வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள் இயல்பாக மற்றொரு ஆணிடம் இப்படிப் பேசுவதை பாசிட்டிவாகக் காட்டவேண்டிய ஒரு காட்சியில்கூட 'சபலம்' என்ற சொல்லைத்தான் பயன்படுத்துகிறார்.

### திருமணங்களைத் தாண்டிய உறவுகள்

முதலில், கணவரைத் தாண்டி வேறொரு ஆணுடன் இயல்பாகப் பழகுபவர்கள் அனைவரையும் சந்தேகப்படவைக்கிறார் இயக்குநர். அடுத்து அப்படிக் கணவனைத் தாண்டி உடல் உறவுக்கோ - மனதளவிலோ பழகுவதையோ தவறு என்கிறார். ஒரு ஆணோ - பெண்ணோ அவ்வாறு தமக்கு விதிக்கப் பட்ட திருமண உறவைத் தவிர மற்ற ஒரு உறவைத் தேடுவது எந்த வகையில் தவறு என்பது விளங்கவில்லை.

ஆண்ட்ரியா தன் முதல் கணவனிடமிருந்து விலகுவதற்குச் சொல்லப்படும் காரணம், அவருக்கு ஆண்ட்ரியாவைப் பிடிக்கவில்லை. அவரை ஆண்ட்ரியா இம்ப்ரஸ் பண்ணவில்லை. உடனே அந்தத் திருமண உறவு முறிந்து விடுகிறது.

ஒரு ஆணுக்குத் தனது பெண் துணையைப் பிடிக்கவில்லை என்றால், அவளுடன் வாழும் போதே அவனுக்குத் தேவையான வேறு ஒரு உறவை அவன் தேடிக்கொள்ளலாம். ஆனால், அதேபோலப் பெண்கள் ஒரு மாற்று உறவைத் தேடினால் அதைத் தவறு என்றும் 'சபலம்' என்றும் கூறுகிறார் இயக்குநர். ஆண்ட்ரியாவின் கேரக்டரில் மட்டும் இந்த 'மாற்று உறவு' என்ற நிலை பாசிட்டிவாக விவாதிக்கப்படுகிறது. அதேசமயம் இலட்சக் கணக்கான பெண்களின் வாழ்க்கைநிலையில் அதே கேரக்டர் கொச்சைப்படுத்தப்படுகிறது.

கோவையில் ஜாதி, மத வெறியர்கள் நடத்தும் ஒரு வாட்ஸ்அப் குழுவில் இந்த 2017 ஏப்ரல் மாதத்தில், வந்த பதிவு இது. இதைப் பல தோழர்கள் முகநூல் பக்கங்களிலும் அம்பலப்படுத்தினர்.

" 10, 12-ஆம் வகுப்புத் தேர்வுகள் முடிந்து விட்டன. பெண் பிள்ளைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளவும். செல்போனில் பேசினால் கவனிக்கவும். காலம் கெட்டுக் கிடக்குது. தேர்வு முடிந்து விட்ட இந்த நேரம்தான் கண்ட நாதாரி நாய்களின் நாடகக் காதல் அரங்கேறும் காலம். சில்லறைப் பயல்கள் (தி.க, கம்யூனிச, வி.சி.க, டுமீழ் போராளிகள்) ரோட்டில் தரி கெட்டுத் திரிகின்றனர். இந்தத் திருட்டு நாய்களின் முகத்தையும், தலையையும் பார்த்தாலே தெரியும்.

முக்கியமாக, கம்ப்யூட்டர் கிளாஸ், ஸ்போக்கன் இங்கிலீஸ் கிளாஸ் போன்றவற்றிற்கு அனுப்ப வேண்டாம். ஏனென்றால் அங்குதான் இதுபோன்ற வேலைகள் சுலபமாக நடக்கிறது. அதேபோல் வேறு ஜாதியைச் சேர்ந்த தோழிகள் யாரும் வேண்டாம் என நாசூக்காக எடுத்துக்கூறவும். ஒரு வேளை வேறு ஜாதியில் தோழிகள் இருந்தால் அவர்கள் வீட்டுக்குச் செல்வது மற்றும் அவர்களுடன் வெளியில் செல்வது போன்றவற்றை அனுமதிக்க வேண்டாம். நன்றி சொந்தங்களே."

இந்தக் கேவலமான - பெண்களைக் கொச்சைப்படுத்தும் அறிவிப்பைத்தான் தரமணி படம் வேறுவிதமாகச் சொல்கிறது. எழுத்தில் வந்த பதிவைக் காட்சிப்படுத்தியுள்ளது.

### சேலை, துப்பட்டாவில் காப்பாற்றப்படும் பண்பாடுகள்

அஞ்சலியின் கேரக்டர் மூலமாகவும் பெண்கள் மிகவும் கேவலப்படுத்தப்பட்டுள்ளார்கள். சுடிதாரின் துப்பட்டாவுக்குப் பின்குத்திக் கொண்டும், சேலை கட்டிக்கொண்டும் சென்னையில் வேலை செய்கிறார் அஞ்சலி. அலுவலகக் காரணமாக வெளிநாடு சென்றதும், தன் நண்பனை அல்லது காதலனை மறந்து விடுகிறாள். அப்போது அவளது கேரக்டர் மாறுவதை அஞ்சலியின் ஆடைகள் நவீனமாக மாறுவதை வைத்துத் தான் காட்டுகிறார் இயக்குநர்.

வாழ்க்கையைப் பறிகொடுத்து வந்த அஞ்சலியோடு படுத்து, அதை செல்பேசியில் படமெடுத்து, வெளியிடுவேன் என்று மிரட்டுபவன் இன்னொரு பெண்ணுக்கு நல்லவனாம், நாயகனாம்... கொடுமை.

## சாவித்திரி, நளாயினி, கண்ணகி வரிசையில் ஆண்ட்ரியா...

“கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷன்” என்ற இந்து மத - ஆணாதிக்கப் புத்தி தான் க்ளைமாக்ஸாக முடிக்கப்பட்டுள்ளது. இறுதிக் காட்சியில் வசந்த்ரவி திருந்தி ஆண்ட்ரியாவோடு வாழ வருகிறான். ஆனால், ஆண்ட்ரியா அவனை ஏற்றுக் கொள்வதற்கு எந்த ஒரு வலுவான காரணமும் கூறப்படவில்லை. வெறும் ‘அன்பு’ மட்டும் சொல்லப்படுகிறது.

ஏற்கனவே, ஒரு பெண்ணுடன் கதாநாயகனுக்குக் காதல், பிறகு ஆண்ட்ரியாவுடன் லிவிங் டுகெதர், அவளைச் சந்தேகப்பட்டு, அவளை அடிக்க வேண்டும், கொலைசெய்ய வேண்டும் என்று வெறி பிடித்துத் திரிகிறான். பிறகு மீண்டும் அஞ்சலியுடன் படுத்துப் படம் எடுக்கிறான். எல்லாம் முடிந்து மீண்டும் ஆண்ட்ரியாவிடம் கெஞ்சுகிறான். அவரும் ஏற்றுக்கொள்கிறார். இங்குதான் இயக்குநரும் ஒரு ஆண் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

> “கணவன் துராசாரமுள்ளவனாக விருந்தாலும். வேறு பெண்களோடு தொடர்புடையவனாக இருந்தாலும், நற்குணம் இல்லாதவனாக இருந்தாலும், பதிவிரதையான பெண்ணானவள் அவனைத் தெய்வத்தைப் போற் பூசிக்க வேண்டியது.” (மனுசாஸ்திரம்: 5:154)
>
> "கணவன் சூதாடுகிறவனாயிருந்தாலும், குடிகாரனாக இருந்தாலும், நோயாளியாக இருந்தாலும், அவனுக்கு மனைவி கர்வத்தால் பணிவிடை செய்யாவிட்டால் அவளுக்கு அலங்காரம், துணி மணிகள், படுக்கை இவற்றை கொடாமல் மூன்று மாதம் நீக்கி வைக்க வேண்டியது.” (மனுசாஸ்திரம்: 9:78)

இதைத்தானே இந்து மதவாதிகளும், பார்ப்பன மனுவாதிகளும் பலநூற்றாண்டுகளாக வலியுறுத்தி வருகிறார்கள்? இந்து மதத்திலுள்ள கோடிக் கணக்கான ஆண்களும் பெண்களும் தங்களது பண்பாடுகளாகக் கடைபிடிப்பதும் இவற்றைத் தானே? சாவித்திரி, நளாயினி, கண்ணகி போன்ற புராண, இதிகாச, காப்பியக் காலத்துப் பெண்களும் இதைத்தானே செய்து தொலைத்தாகள்? இதில் என்ன பெண்விடுதலை வாழ்கிறது?

## ‘விரட்டுவது’ தான் காதலா?

லிவிங் டுகெதர் வாழ்க்கைமுறையை இயல்பாகக் காட்டப்படுவது பாராட்டவேண்டியது. அதே சமயம் லிவிங் டுகெதர் முறையால் தான் ஆண்ட்ரியா இவ்வளவு தொல்லைக்கு ஆளாகிறார் என்றும் புரிந்துகொள்ள நேரிடும் அளவில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளது.

நீ... வேண்டாம் போய்விடு...என்று என்று சொல்லும் பெண்ணை விடாப்பிடியாக விரட்டி, விரட்டி, கெஞ்சிக் கெஞ்சி, அவளது மனதை மாற்றுவதுதான் காதலா? பெண்ணின் மறுப்பைக் கண்ணியத்துடன் ஏற்பதில் காதல் இல்லையா? விருப்பமில்லாத பெண்ணைத் தொடர்வது நமது சுயமரியாதைக்கும் கேடானது; பெண்ணின் சுயமரியாதைக்கும் கேடானது என்ற அறிவைச் சொல்லித் தரவே இயக்குநர் ராம் போன்றவர்கள் பயன்பட்டிருக்கவேண்டும்.

“வேண்டாம்..., விட்டு விடு... என்று விலகும் ஒரு பெண்ணை - ஒரு உயிரை - விரட்டுவதும், கெஞ்சுவதும் - வெட்டுவதும், ஆசிட் அடிப்பதும் ஒன்றுதான். சத்தியவான் சாவித்தி, பூம்புகார், சகலகலா வல்லவன், த்ரிஷா இல்லேனா நயன்தாரா, அன்பானவன்- அசராதவன் - அடங்காதவன் படங்களின் வரிசையில் தரமணியும் இடம்பெறுவது வருத்தமளிக்கிறது. .



# கோரக்பூர் குழந்தைகள் மரணம் நமக்குப் பாடம்



உத்தரப்பிரதேசத்தில் கோரக்பூர் பாபா ராகவ் தாஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 71 குழந்தைகள் இறந்தனர். இது செய்தி. ஏன் இறந்தனர் ?

ஆக்சிஜன் சிலிண்டர் இல்லாததால் இறந்தனர் என்கிறது செய்திகள்.

மூளை வீக்கம் எனப்படும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் வந்த குழந்தைகள் இருக்கும் வார்டுக்கு ஆக்சிஜன் சப்ளை தடை பட்டதால் குழந்தைகள் கொத்தாக இறந்துள்ளனர். இது உடனடி காரணம்

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் ஏன் வந்தது??

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய் என்பது தடுப்பூசியால் தடுக்க முடிந்த நோயாகும். ஆனால், அங்கு தடுப்பூசிகள் சரியாக போடப் படவில்லை. ஆக ஆரம்பநிலை நோய்த் தடுப்பு சரியாக நிகழவில்லை. இப்போது இதை ஏன்.. இங்கு சொல்ல வேண்டும் எனில்..

நமது தமிழ்நாட்டில் தற்போது நடத்தப் பட்ட ஆய்வில் தடுப்பூசி போடப்படும் விகிதம் சரிந்துள்ளது. நாட்டில் இரண்டாவது இடத்தில் இருந்த நாம் ஒன்பதாவது இடத்திற்குச் சரிந்துள்ளோம். காரணம்?

போலியான வாட்சப் பிரச்சாரங்களை நம்பித் தடுப்பூசிகள் போடாமல் இருப்பது.

சில தொற்று நோய்களைக் கட்டுக்குள் வைக்கத் தடுப்பூசிகள் மட்டுமே நம்மிடம் இருக்கும் ஒரே ஆயுதம்.

அந்த ஆயுதத்தை நாம் உபயோகப்படுத்தா விடில் நமக்கு அந்தத் தொற்றுநோய்கள் பரவி உயிர்களைக் காவு கொள்ளும்.

ஆக்சிஜன் நின்றது, அரசு மருத்துவ மனையின் குறைபாடு, மேலும் அரசு இயந்திரத்தின் தொய்வால் இறப்புகள் நிகழ்ந்து விட்டது. இந்த நிகழ்வில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

தொற்று நோய் வந்தபின், அதற்கு மருத்துவத்தை நாடுவதை விட, சரியான தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதால் நாம் நோய் வருவதில் இருந்தே பாதுகாத்துக் கொள்ளலாம்.

**டாக்டர் ஃபரூக் அப்துல்லா**
நலம் மருத்துவமனை, சிவகங்கை



Owner and Publisher by : S.Vijayaragavan
Consulting Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com